எம்.ஐ.எம்.முஸம்மில்



# ஒரு நெக்லஸும் ஆண் குழந்தையும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்புப் பிரதி

# ஒரு நெக்லசும் ஆண் குழந்தையும்
# (சிறுகதைகள்)

எம். ஐ. எம். முஸம்மில்

திருமதி. புஷ்பா சிவகுமாரனுக்கு,
அன்புடன்,
எம்.ஐ.எம். முஸம்மில்
(எம். ஐ. எம். முஸம்மில்)
98/03/21.

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்
வெளியீடு 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு நெக்லசும் ஆண் குழந்தையும்**
(சிறுகதைத் தொகுப்பு)
ஆசிரியர்: **எம். ஐ. எம். முஸம்மில்**, B.A.,
வரிமதிப்பீட்டாளர்,
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு-02
முதற் பதிப்பு: 1997 டிசம்பர்.
பதிப்புரிமை: ஆசிரியருக்கு
பக்கங்கள்: viii+117
புத்தக அளவு: 12செ.மீ.x17.5செ.மீ.
முகப்பு ஓவியம்: **மணியம் செல்லன்**.
வெளியீடு: இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம்,
சாய்ந்தமருது, கல்முனை, இலங்கை
அச்சகம்: மலர் கிறாபிக்ஸ்,
சென்னை 600034, இந்தியா
விலை: இலங்கை ரூபா 100/-

**ORU NECKLASUM AANKULANTHAIYUM**
(A Collection of Short Stories in Tamil)
Author: **M.I.M. Muzzammil**, B.A.,
Assessor,
Inland Revenue Department,
Colombo-02.
First Edition: December 1997.
Copyright holder : Author.
Number of pages : viii+117
Size of the book : 12cm x 17.5 cm.
Cover design : **Maniam Chellan**.
Publisher : Islamic Book Publishing Centre,
Sainthamaruthu, Kalmunai, Shri Lanka.
Printers : Malar Graphics,
Chennai 600034, India
Price: Sri Lanka Rs. 100/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வளர்ச்சியில் பங்கெடுத்தவர்களான

என் அன்னை

**ஏ.எல்.ஏ.ஸஃபிய்யா உம்மா,**

என் சிற்றன்னை

**ஏ.எம்.ஃபவுசுல் இனாயா**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, வறக்காப்பொளை)

ஆகிய இவருக்கும்

இந்நூல்

**சமர்ப்பணம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


| | |
|---|---|
| வெளியீட்டுரை | v |
| முன்னுரை | vii |

சிறுகதைகள்

| | |
|---|---|
| ஒரு நெக்லசும் ஆண்குழந்தையும் | 01 |
| சிறைப்படுத்தும் சுமைகள் | 12 |
| மாறாத உள்ளங்கள் | 26 |
| திசைமாறும் பறவைகள் | 37 |
| பிம்பங்கள் | 46 |
| வெளியேற்றம் | 63 |
| வட்டாக் கடன் | 74 |
| அழியாத பதிவுகள் | 87 |
| வாப்பா வருவார் | 98 |
| கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன | 107 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் நான் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் எனது விருப்புக்குரிய மாணவர்களுள் ஒருவராயிருந்து இன்றுவரை அவ்வந்நியோன்ய உறவைத் தொடர்பறாது வைத்திருக்கும் எம். ஐ. எம். முஸம்மில் அவர்களின் "ஒரு நெக்லஸும் ஆண் குழந்தையும்" எனும் இந்நூலுக்கான வெளியீட்டுரையை வழங்குவதில் பெரிதும் மகிழ்வுறுகிறேன்.

சிறுகதை, உருவகக் கதை என்பன எழுதுவதில் தனது மாணவப் பருவத்திலிருந்தே ஈடுபட்டுள்ள முஸம்மில், ஏற்கனவே தியாகம் (1979), பிரார்த்தனை (1988) ஆகிய இரு நூல்களின் ஆசிரியராவார். பத்துச் சிறுகதைகளைக் கொண்ட இத்தொகுதி இவரது மூன்றாவது நூலாகும்.

'ஒரு நெக்லஸும் ஆண் குழந்தையும்' எனும் முதலாவது கதையிலிருந்து 'கடமைகள் நிறைவேற்றப் படுகின்றன' எனும் பத்தாவது கதைவரை ஒரே இருப்பில் வாசித்து முடிக்கக் கூடிய உந்துதலை இக்கதைகளின் உள்ளடக்கம், கதைப்போக்கு, யதார்த்தம் என்பன ஏற்படுத்துகின்றன. நாம் வாழும் சூழலையும், காணும் மனிதர்களையும், அனுபவிக்கும் உணர்வுகளையும் இக்கதைகள் ஞாபகப்படுத்துகின்றன. ஒவ்வொரு கதாபாத்திரமும் எமது அடுத்த வீட்டிலோ, அடுத்த தெருவிலோ அல்லது கிராமங்களிலோ நாளாந்தம் நடைபெறும் சம்பவங்களை நினைவுக்குக் கொண்டு வருகின்றன. இதுதான் கதாசிரியரின் வெற்றியாகும்.

சிறுகதை என்பது பொழுதுபோக்கிற்காக வாசிக்கப்படுவது மட்டுமன்றி, அதனை வாசித்து முடித்தவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகனில் உள்ளுணர்வொன்றினை ஏற்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும். தம்மைச் சூழவுள்ள புறநிலைகளை அவன் மறு பரிசீலனை செய்வதற்கான ஆர்வமும் தூண்டுதலும் அதனால் ஏற்பட வேண்டும். இவ்வாறான நிலைகளை இத்தொகுப்பிலுள்ள அனைத்துக் கதைகளிலும் காண்கிறோம். ஒவ்வொரு கதையிலும் இடம்பெறும் சம்பவங்கள் இன்று சமுதாயத்தில் எங்கோ ஓரிடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனைக் கதாபாத்திரம் மூலம் வெளிப்படுத்தி சிந்தனையைத் தூண்டுவதில் ஜனாப் முஸம்மில் வெற்றி கண்டுள்ளார்.

இத்தகைய சிறப்பான தொகுதியொன்றினை, எமது இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் 17வது நூலாக வெளிக் கொணர்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

ஒரு நூலை வெளியிடுவதென்பது இலகுவான காரியமல்ல. அதற்கான ஆசையும் நேரமும் மட்டும் இருந்தால் போதாது. பணவசதியும் விற்பனை வழிகளும் தேவைப்படுகின்றன. இத்தகைய சூழலில் தமது மூன்றாவது நூலை வெளிக்கொணரும் முஸம்மில் அவர்களுக்கு வாசகர்களும் இலக்கிய ஆர்வலர்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

**அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல் எம்.ஏ.**
ஆலோசகர்: கலாச்சார, சமய அலுவல்கள் அமைச்சு
தலைவர்: இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்
1997.08.26 ஆந் திகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பில் உள்ளடக்கத் தவறிய என் முதற் சிறுகதையாகிய 'வாப்பா வருவார்' எனும் சிறுகதையுடன், 1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் நான் எழுதிய சிறுகதைகளில் ஒன்பதையும் சேர்த்து இத்தொகுப்பு வெளிவருகின்றது.

வாசகர்களது பார்வையை நான் பெரிதாக மதிக்கின்றேன். ஏனெனில் வாசிப்பவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பது என்னைப் பொறுத்தவரை முக்கியம். அவர்களது நல் நோக்குடனான அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளும் போதுதான் எழுதுவதற்கான உற்சாகம் பிறக்கிறது. எனது எழுத்துக்களை மெருகூட்டுவதற்கும் வேண்டிய மாற்றங்களைச் செய்வதற்கும் அவ்வபிப்பிராயங்கள் உதவுகின்றன.

'வாப்பா வருவார்' எனும் சிறுகதை 1979ம் ஆண்டு தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமாகியபோது எனக்குக் கிடைத்த முதலாவது வாசகர் கடிதம் இன்னும் என்னிடம் பாதுகாப்பாக உள்ளது. அதை அனுப்பியவர் உடத்தலவின்னையைச் சேர்ந்த எழுத்தாளர் யூ.எல்.எம்.பஸீர் ஆவார். கொழும்பில் எனது தங்கும் அறை நண்பராக இருந்தவர். தற்போது பாடசாலை அதிபர் சேவையில் இருக்கின்றார். 1972ல் ஆரம்பித்த எனது எழுத்தார்வம் தணிந்து கிடந்தபோது தொடர்ந்து எழுதும்படி என்னைத் தூண்டியவர் அவர்.

நேரில் சந்திக்கும்போதும், கடிதங்கள் வாயிலாகவும் எனது சிறுகதைகள் பற்றி அபிப்பிராயங்கள் தெரிவித்து ஆர்வமூட்டுவோர் அதிகம் பேர். அனைவரையும் இங்கு பெயர் குறிப்பிட்டு நன்றி தெரிவிப்பது முடியாத காரியம். அவர்களது பெயர்கள் இங்கு இடம்பிடிக்காவிட்டாலும் எனது மனதிலே இடம்பிடித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் வெளிவருவதில் பலர் உதவிபுரிந்துள்ளனர். அவர்களது பெயர்களையும் இங்கு பட்டியலிட முடியாது. இருப்பினும் எனது நூல் வெளியீட்டு முயற்சிகளுக்கு மட்டுமல்லாது இலங்கை எழுத்தாளர்கள் பலரின் நூல் வெளியீட்டுக்கு வழக்கமாக ஆதரவு வழங்கும் இலங்கை சுங்க உதவி அத்தியட்சகர் அல்ஹாஜ். ஏ.எல்.எம்.ஏ. நஸீர், இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் தலைவரும் கலாச்சார, சமய அலுவல்கள் அமைச்சின் ஆலோசகருமான மதிப்புக்குரிய அல்ஹாஜ். எஸ்.எச்.எம்.ஜெமீல், எம்.ஏ., எனது நெடுங்கால இந்திய எழுத்தாள நண்பர் ஜனாப். ஏ.ஏ.ஹெச் கோரி, அச்சக உரிமையாளர் ஜனாப்,எம்.என்.முகம்மது புகாரி, கொழும்பு பாம்லீ ஃப் ஹோட்டல் உரிமையாளர் ஜனாப்.எம்.ரீ.ஏ.எம்.றஸீன், வறக்காமுறையைச் சேர்ந்த ஜனாப்.ஜே.ஏ.முனா ஃப் (எயார் லங்கா), மற்றும் எழுத்தாள நண்பர் ஜனாப். யூ.எல். ஆதம்பாவா, தென்கிழக்குப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எம்.எ ஃப். ஹிபத்துல் கரீம், என் அன்பு மனைவி மாத்தறை ஹஸீனா வஹாப், எனது புதல்வர்களான எம்.எம்.அர ஃபாத் முகம்மத், எம்.எம்.பாஸித் ஆகியோரின் பெயர்களை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இதுவரை வெளியிடப்பட்ட எனது நூல்களின் வெற்றிகரமான விற்பனைக்கு அருள்புரிந்த எல்லாம் வல்ல அள்ளாஹ் இத்தொகுப்பு வெளியீட்டு முயற்சியும் வெற்றிபெற அருள்பாலிப்பானாகவும்.

உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இது
அன்புடன்
எம்.ஐ.எம்.முஸம்மில்

மருதமுனை,
கல்முனை - 32300
1997.10.31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நெக்லசும் ஆண் குழந்தையும்

"சாச்...சீ... ஓங்கள உம்மும்மா கூப்பிடுற சாச்சி..." தனது மூத்த சகோதரியின் பிள்ளையொன்றினது இந்த அழைப்பை செவிமடுத்த மாத்திரத்தில் றிஸானா மட்டுமல்ல அவள் கணவன் றிழ்வான் கூட ஒரு கணப் பொழுதுக்கு அதிர்ந்து போனான்.

தன் கணவன் வாங்கி வந்திருந்த, தனக்குப் பிடித்தமான அந்த 'குலா குலா அல்வா' எனும் இனிப்புப் பதார்த்தத்தை சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த றிஸானா அவசர அவசரமாகத் தொண்டைக் குழிக்குள் இறக்கிக் கொண்டு தனது தாயிடம் போய்க் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிஸானா போவதைப் பார்த்துக் கொண்டு கட்டிலில் ஆயாசமாகச் சாய்ந்திருந்த றிழ்வானின் ஏக்கமொன்று நெடுமூச்சாய் வெளிவந்தது.

மனைவியின் ஆசையை நிறைவேற்றுவதற்காக அவன் கொழும்பிலிருந்து வாங்கி வந்திருந்த இனிப்புப் பதார்த்தத்தை அவள் சுதந்திரமாகச் சாப்பிட வேண்டுமாயின் அந்த வீட்டில் உள்ள சுமார் பதினாறு பேருக்கும் சேர்த்து வாங்கி வர வேண்டும். விலைகூடிய அத்தீன்பண்டத்தை அத்தனை பேருக்கும் வாங்கிவர அவனது சொற்ப சம்பளம் போதாது.

திருமணமான கடந்த வருடம் அவன் எல்லோருக்கும் ஒரு தடவை கொண்டு வந்து கொடுத்தான். அப்போது அதைச் சுவைத்த ஆசையில்தான் இப்போ நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கும் றிஸானாவின் வேண்டுகோளின் பேரில் அவளுக்கு மாத்திரம் வாங்கி வந்திருந்தான்.

தனிக்குடித்தனம் நடத்தவும் தன்னால் முடியவில்லை; தனது சகலன்மாரைப் போல தான் ஒரு வியாபாரியுமல்ல, இந்த நிலையில் மனைவியின் தாய் வீட்டில் ஒரு அறைக்குள் முடங்கிக் கிடப்பது றிழ்வானுக்கு பல வழிகளில் பிரச்சினைதான்.

“ஏய்... என்ன தூக்கமா...?“ றிஸானாவின் இந்தக் குரல் கேட்பதற்கு முதலே அவளது காலடிச் சப்தம் கேட்டே நித்திரை மாதிரி பாசாங்கு செய்து கொண்டு படுத்திருந்தான் றிழ்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக வந்து அவனது கட்டிலில் நூதனமாக அமர்ந்த அவளின் வயிற்றைச் சுற்றி தனது இரு கைகளையும் இரண்டு பக்கமாகச் செலுத்தி அளந்துவிட்டுச் சொன்னான் "உம்மாண்டே... இந்த வகுத்துக்குள்ள இரண்டு புள்ளதான் இரிக்கோணும்... அதுதான் இவ்வளவோ பெரிசாயிருக்கு..."

"சும்மா போங்கோ... ஓங்களுக்கு எல்லாம் வெளையாட்டும் பகிடியுந்தான்..." என்று சொன்ன றிஸானாவின் முகம் கவலையால் கறுத்தது.

அவளது வயிற்றிலுள்ள கருவின் பாரத்தை விட அவளது மனச்சுமை அதிகம் போல என்று யூகித்தான் றிழ்வான்.

"என்ன றிஸானா... கடுமையாக யோசிக்கிறீங்க... நாளைக்கோ இண்டைக்கோ புள்ள கெடக்கிறதுக்கு இருக்கிற நீங்க இப்புடி யோசிக்கப்போடாது..."

"யோசிக்காம என்னத்தச் செய்யுற... உம்மா கொஞ்ச நேரத்துக்கு முன்னால என்னைக் கூப்பிட்டாங்கள்தானே... அவங்க சொல்லுறதப் பத்தித்தான் யோசிக்கிறன்" சன்னமான குரலில் கூறினாள் றிஸானா.

"ஓங்கட உம்மா என்ன சொல்றாங்க...? எனக்கிட்ட மறைக்காமச் சொல்லுங்க றிஸானா..."

"இல்ல... உம்மா சொல்றதுலதான் யோசினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாயிருக்கு, புள்ளப் பொறவுக்கு எங்கே போற எண்டு விசாரிச்சாங்க... கவ்மன்ட் ஹொஸ்ப்பிட்டலுக்குத்தான் போகோணும் எண்டேன்..." றிஸானா தொடராமல் நிறுத்திக் கொண்டாள். அவள் இருதலைக் கொள்ளி எறும்பாகியுள்ளதாக றிழ்வானுக்குப்பட்டது.

"இனி அதுக்கு என்ன நடந்திரிச்சி..." றிழ்வான் அவளது வாக்குமூலத்தைத் துரிதப்படுத்தினான்.

"நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தன்... உம்மாவோ என்ட தாத்தாமாரோ கேக்கிறதா இல்லே. அரசாங்க ஆஸ்பத்திரியில பபா கெடைக்கப் போறது அவங்களுக்கு வெக்கமாம்... அல்ல செல்லயில இருக்கிற ஏழை எளியதுகளும் அங்கதான் பபா கெடைக்கிறத்துக்கு போகுதுகளாம். அதுமட்டுமில்ல... ஆஸ்பத்திரியில பொறக்கிற ஆம்புளப் புள்ளையள மத்தவங்களுக்குப் பொறக்கிற பொம்புளப் புள்ளையள வெச்சிட்டு மாத்திப் போடுவாங்களாமே..." றிஸானா கவலையோடு கதைத்தாள்.

"இங்க பாருங்க றிஸானா... பொறக்கிறது பொம்புளப் புள்ளையோ, ஆம்புளப் புள்ளையோ... நாமளா இருந்தாலும் சரி... நம்மட புள்ளைய வேற ஒரு தாய்க்கு குடுத்துட்டு மற்றவள் பெத்த பிள்ளையை நாம எடுக்கப் புறியப்படுவோமா...? கடைசிவரைக்கும் அதுக்கு விரும்பவேமாட்டம். அது போலத்தானே மற்றவங்களும்... இதையெல்லாம் நம்பிக்கிட்டு வீணாக ஏன் நர்ஸிங் ஹோமிலே அட்மிட்டாகி சல்லிய செலவழிக்கோணும். ஒங்கட மச்சான்மார் மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சல்லிக்காறனுமில்லையே..." தனது பொருளாதார நிலைக்கேற்ப தான் இது விடயத்தில் கொண்டுள்ள தீர்மானத்தைப் புரிய வைக்க முனைந்தான்.

"தலைப்புள்ளை பெறப்போறது கவ்மண்ட் ஹோஸ்பிட்டலுக்கா போகோணும்... அதெல்லாம் சரிப்படாது எண்டு சொல்லிக்கிட்டு உம்மா, தாத்தா எல்லாம் ஒரேபிடியா இருக்கிறாங்களே... நான் எனத்தையன் செய்யுற...?"

றிஸானாவின் நிலைமையைப்பார்த்த போது றிழ்வானுக்கு அவள் மீது அனுதாபந்தான் ஏற்பட்டது.

"தலைப் புள்ளை என்கிறதாலதான் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு பபா கெடைக்கிறதுக்குப் போவோம் என்கிறேன். ஏன் தெரியுமா? அங்கதான் சகல வசதிகளும் இருக்கு. எந்த நேரமும் டொக்டர்மார் இருந்துகிட்டே இருப்பாங்க... சில அசௌகரியங்கள் இருக்கத்தான் செய்யும். ரெண்டு நாளைக்கு அதச் சகிச்சுக் கொள்ளத்தான் வேணும்."

★

நகரிலே உள்ள பிரபல 'நர்ஸிங் ஹோம்' ஒன்றிலே றிஸானா மகப் பேற்றுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தாள். அவளுக்காக அங்கு ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டிருந்தது.

றிஸானாவின் தாயும், ஒரு சகோதரியும் அவள் கூடவே 'நர்ஸிங் ஹோம்'மில் இரவிலும் தங்கத் தொடங்கியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிழ்வான் வேலையிலிருந்து திரும்பும் வழியில் வழக்கம் போல நேரே 'நர்சிங் ஹோம்'முக்கே வந்தான். அவன் வரவும், டாக்டர் அவனது மனைவியைப் பார்த்துவிட்டு வெளியேறவும் சரியாகவிருந்தது. அறையினுள் நுழைந்தான். அங்கு அவனது மதினிமாரும் மாமியும் அறையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர்.

"டொக்டர் என்ன சொன்னார்...?" ஆர்வத்துடன் விசாரித்தான் றிழ்வான்.

"மச்சானுக்கு இது புதுசு. நாங்க எல்லாருமே புள்ளைப் பொறவுக்கு இங்கதான் அட்மிட்டாகின. டொக்டர்மார், நர்ஸ்மார் எல்லாருமே நல்லம். கவ்மண்ட் ஹோஸ்ப்பிட்டல் மாதிரி மொகத்தில பாயமாட்டாங்க. பயப்படுகிறதுக்கு ஒண்டுமில்ல..." மூத்த மதினி சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

மதினிமாரின் கைகளிலும் கழுத்துகளிலும் பளபளத்த தங்க நகைகள் அவனது கவனத்தை ஈர்த்தன.

'நாள் பிந்தப் பிந்த 'நர்ஸிங் ஹோம் பில்' தான் கூடுதலா வரும். போதாக்குறைக்கு இவளுகளும் நகை நட்டுக்களை எல்லாம் போட்டுக்கிட்டு வந்து 'ஷோ'க் காட்டுறாளுகள். இதைப் பார்க்கிற டொக்டர்மாரும் 'நர்ஸிங் ஹோம்' உரிமையாளனும் கட்டணத்தையும் கூட்டித்தான் போடுவான்' றிழ்வான் இப்படி யோசித்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சானுக்கு என்ன அவ்வளவு பெரிய யோசனை? கெடைக்கப் போறது ஆம்புளப்புள்ளையா... இல்ல... பொம்புளப் புள்ளையா? எண்டுதானே யோசினை..." என்று சொல்லிச் சிரித்த இளைய மதினி ஒருத்தி மீது மாத்திரம் அல்ல அவர்கள் எல்லார் மீதுமே வெறுப்புத்தான் வந்தது அவனுக்கு.

அந்த 'நர்ஸிங் ஹோம்' நடாத்தும் டாக்டரும் நர்ஸ்களில் இருவரும் பதற்றப்படுவது றிழ்வானுக்குப் புரிந்தது.

ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட பிரசவத் திகதி பிந்தப்பிந்த, றிழ்வான் பல தடவைகள் இந்த டாக்டரிடமும், றிஸானாவை இடையிடையே வந்து பார்த்துப் போகும் மகப்பேற்று நிபுணரிடமும் பல தடவைகள் விசாரித்தான்.

"டோண்ட் வொறி"

"நதிங் ட்டு வொறி"

"எவ்றி திங் இஸ் நோர்மல்"

இந்தப் பதில்கள் அவனுக்கு தைரியத்தை ஊட்டினாலும், 'நர்ஸிங் ஹோமி'ல் கூடுதலான நாட்கள் தங்குவதால் தான் செலுத்த வேண்டிய கட்டணம் அதிகமாக வருமே என்ற கவலையும், கையிலுள்ள மொத்த சேமிப்புப் பணம் ஆறாயிரம் ரூபாவும் அதற்குப் போதுமாகுமோ என்ற ஐயமும் எழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நர்ஸிங் ஹோம்' நிருவாகம் இப்படி கை விரிக்கும் என்று அவர்கள் எவருமே எதிர்பார்க்கவில்லை. வந்த வாடிக்கையாளருக்கு வியாபாரம் செய்யாது அனுப்புவது வியாபாரத்துக்கு அழகல்ல என்பதை அந்த நிருவாகம் இந்த விடயத்தில் நிரூபித்துவிட்டது என்பது றிஸானா குடும்பத்துக்கு இப்போதுதான் புரிந்தது.

அவர்கள் நம்பியிருந்த மகப்பேற்று நிபுணர் அவசர விடயமாக லீவில் தூர இடம் சென்றுவிட்டார். றிஸானாவுக்கு இயற்கைக்கு மாறான வலி கண்டமையால் அந்த டாக்டரது உதவியாளரான டாக்டரால் அந்த விடயத்தை 'நர்சிங் ஹோம்'மில் கையாளக் கூடிய வசதியும் அனுபவமும் குறைவாக இருந்தமை காரணமாக சிக்கலை ஏற்படுத்திற்று.

அரசாங்க வைத்தியசாலைக்கு விரையப்பட்ட றிஸானாவைப் பின் தொடர்ந்து செல்ல முடியாதளவுக்கு தடை போட்டது 'நர்ஸிங் ஹோம்' வழங்கிய 'பில்'. கட்டணத்தைச் செலுத்தாது அவனால் அசைய முடியாது.

அவனோடு 'நர்ஸிங் ஹோம்'மில் எஞ்சி நின்றது வசதிகுறைந்த ஒரு மதினி மாத்திரம்தான். அந்த மதினியைப் பிணையாக வைத்துவிட்டு விரைந்து சென்ற றிழ்வான்அந்த 'நர்சிங் ஹோம்'முக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் பதினையாயிரம் ரூபாவையும் கொண்டு வந்து செலுத்திவிட்டு அவனது மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள அரசாங்க வைத்தியசாலையை நோக்கி அந்த மதினியோடு பதற்றத்துடன் புறப்பட்டான்.

றிஸானாவின் மற்ற சகோதரிகள் அரசாங்க வைத்தியசாலைக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார்கள். நோயாளர்களைப் பார்ப்பதற்கென்று வந்திருந்த ஏராளமானவர்களும் அங்கு குழுமி நின்றார்கள். றிஸானாவின் பக்கத்துவீட்டு நூறும்மாத் தாத்தாவின் மகள் அந்த அரசாங்க ஆஸ்பத்திரியில் பெற்றெடுத்த ஒரு நாள் பாலகனோடு -ஆண் குழந்தையோடு பக்குவமாக நடந்து வந்து 'திறீவீலர்' ஒன்றில் அவளது தாயாருடன் ஏறிக் கொண்டிருந்தாள்.

வைத்தியசாலையினுள் றிஸானா பிரசவ வேதனையினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்த அரச வைத்தியசாலை 'நர்ஸ்'சுகளும் டாக்டர்களும், நர்சிங்ஹோமுக்குப் போய் விடயத்தை சிக்கலாக்கிக் கொண்டு வந்துள்ளதாகக் கூறித் திட்டுவதும் கடுகடுப்பதும் அந்த வேதனையிலும் றிஸானாவுக்குக் கேட்டது.

அவர்கள் வாட்டுக்குள் நுழையும் போது பிரசவம் முடிந்த தாய்மார்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் கிடந்த கட்டில் ஒன்றின் மீது மயக்கத்துடன் படுத்திருந்தாள் றிஸானா. அவளைப் போல எத்தனையோ தாய்மார். சிலர் குழந்தைகளுடன்; சிலரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் இன்னும் வந்து சேரவில்லை; மருத்துவக் காரணங்களை முன்னிட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுத்தான் தாயிடம் ஒப்படைக்கப்படும். குழந்தைகள் மாறாதிருப்பதற்காக தாய்களினதும் குழந்தைகளினதும் மணிக்கட்டுகளைச் சுற்றி அடையாளங்கள் நூலால் கட்டப்பட்டிருந்தன.

'நர்ஸிங் ஹோம்'மில் தாமதித்தமையால் கருப்பையினுள் ஏற்பட்ட அதிக இரத்தப் பெருக்குக் காரணமாக 'சிஸேரியன்' அறுவைச்சிகிச்சை செய்துங் கூட குழந்தையை உயிருடன் காப்பாற்ற முடியவில்லை என்றும், இன்னும் சிறிது தாமதித்திருந்தால் தாயின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்றும் 'மேற்றன் நர்ஸ்' றிழ்வானிடம் சொன்னாள்.

முனகல் ஒலி எழுப்பிக் கொண்டிருந்த றிஸானா சாடையாக இமையைத் திறந்து பார்த்தாள். அவளது கணவனும் தாயும் சகோதரிகளும் சூழ நின்று கொண்டிருந்தார்கள்.

தாயினதும் சகோதரிகளினதும் நிர்ப்பந்தம் காரணமாக கணவனின் கருத்தைப் புறக்கணித்து தனியார் மருத்துவ விடுதியொன்றில் பிரசவத்திற்காக 'எட்மிட்'டாகி எதிர்நோக்கிய பிரச்சினைகளையும், கணவனின் முகத்தில் விழிப்பதையும் நினைத்துப் பார்த்த போது சற்று முன்னர் இறங்கிவிட்ட அவளது வயிற்றுப் பாரத்தை விடவும் அவளது இதயம் அதிக பாரமாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிஸானாவின் 'நெக்லசை' விற்றுத்தான் 'நர்ஸிங்ஹோம்' கட்டணத்தை செலுத்திய இரகசியத்தை இப்போதே சொல்ல விரும்பாத றிழ்வான், மரித்துப் பிறந்த அந்த தனது ஆண் குழந்தையின் பூதவுடலை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தான்.

***(தினகரன் வாரமஞ்சரி-1997.03.16)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைப்படுத்தும் சுமைகள்

கொழும்பிலிருந்து வந்த களைப்பில் சேர்ட்டைக் கழற்றியவாறே சலீம் கேட்டான் "ஏதும் கடிதங்கள் வந்திச்சா...?

பல்கலைக்கழகத்தில் எஞ்ஜினியர் பட்டம் பெற்று இரண்டு வருடங்களும், திருமணம் முடித்து ஒரு வருடமும் ஆகிவிட்டன. நிரந்தரமான ஒரு உத்தியோகம் கிடைக்கும் யோகம் இன்னும் அவனுக்கு கிடைக்கவில்லை.

அவனைவிடக் குறைந்த புள்ளிகளோடு பல்கலைக் கழகங்களுக்குள் நுழைந்து பி.எஸ்சி, பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர் நியமனம் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். கூடிய புள்ளிகளோடு பல்கலைக் கழகங்களுக்குள் நுழைந்து எஞ்ஜினியர் பட்டம் பெற்ற பிறகு, தாம் வலிந்து விரும்பினாலும் 'டீச்சிங்'கூட எடுக்க முடியாமல் தவிக்கும் தன்னைப் போன்ற தொழிலற்ற எஞ்ஜினியர்களின் நிலையையும், கல்வித் திட்டத்தையும் நினைத்து அலுத்துக் கொண்டான்.

கொழும்பில் தொழில் தேடும் அலுவலாக நின்ற அவனுக்கு ஒரு நண்பன், "மாகாண சபைக்குப் போட்ட அப்பிளிகேசனுகளுக்கு இண்டவியூவுக்குக் கூப்பிடுகிறாங்களாம், எஞ்ஜினியர்மாருக்கு நிறைய 'வேக்கன்சி' இருக்காம், உனக்குக் கட்டாயம் 'இண்டவியூ' கடிதம் வந்திருக்கும்..." என்று சொன்னதும் 'கொழும்பில் நிண்டுதான் என்னத்தச் சாதிக்கப்போறோம்' என்ற வெறுப்புடன் ஊருக்கு வந்துவிட்டான்.

"உங்கட தங்கச்சிதான் உங்கட ஊரில இருந்து கடிதம் போட்டிருக்கா..." வேண்டா வெறுப்பாகச் சொன்னவளாகக் கடிதத்தைக் கொண்டு வந்து அவன் உட்கார்ந்திருந்த கட்டிலில் வீசி எறிந்த மாதிரி போட்டாள் அவன் மனைவி.

கடிதத்தை எடுத்துப் பார்த்தான். உடைக்கப்பட்டே இருந்தது. அவனுக்கு வரும் கடிதங்களை, அவனுக்கு முன்னதாகவே உடைத்து வாசித்துவிடும் அவளது பழக்கத்தை அவள் தன்னோடு கொண்டுள்ள நெருக்கம் என்று சொல்வதா, அல்லது தன்னை விலைக்கு வாங்கிவிட்ட ஒரு கௌரவப்படுத்தாத அகங்காரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் என்று சொல்வதா என்பது அவனுக்கு பெரியதொரு ஆராய்ச்சியாக இருந்தது.

"நிரோஷா! பி.எல்.ஆர்.மாத்துகிற விஷயம் என்னமாம்...?" கடிதத்தில் கண்களை மேயவிட்ட சலீம் கேட்டான்.

"வாப்பாவுக் கெண்டால் விருப்பந்தான். காக்கா மார் தான் விடுகிறாங்களில்லை. காணியை விற்கிறதெண்டாத்தானாம் பி.எல்.ஆர் மாத்தித் தேவைப்படுமாம். அப்பிடியெண்டா என்ன...? மச்சான் காணிய விற்கப் போறாரோ...? எண்டு காக்காமார் சொல்லிப் போட்டாங்க..."

பெருமூச்சுவிட்ட சலீம் கேட்டான் "காணிய வேற யாருக்கும் குடுத்து செய்யிறதுக்குத்தான் எண்டு நீங்க சொல்லல்லையா?"

"சொன்னன் தான். அதென்னத்துக்கு வேறயாருக்கும் குடுக்க, நாங்க மச்சான்மார் இருக்கம். வயலைச் செஞ்சிபோட்டு குத்தகை தருவம் எண்டு சொல்லுறாங்க."

சலீம் நிரோஷாவைத் திருமணம் செய்த பின்னர் அவனுக்குச் சீதனமாகக் கிடைத்த அந்தப் பத்து ஏக்கர் வயற் காணியில் இரண்டு போகங்கள் செய்து விட்டார்கள். ஆனால், அவனது கையில் இலாபம் என்று எதுவும் கிடைக்கவில்லை. ஏதோ வீட்டுச் செலவைச் சமாளிக்க வேண்டும் என்ற பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் அவனுக்குச் சுமத்தப்படவில்லை.

வயலுக்கு முதல் போட்டு, வேறு யாரையும் கொண்டு செய்கை பண்ணினால் இலாபத்தை எடுத்துச் சுயமாகத் தானும் ஓர் ஆண் என்ற வகையில் சுதந்திரமாக் குடும்பம் நடத்தலாம் என்ற எண்ணத்தோடுதான் அந்த வயற் காணிகளின் 'பி.எல்.ஆர்' என்ற உரிமையை மாற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறான் சலீம்.

சுழலும் 'சீலிங் ஃபேனின்' காற்றில் படுத்துக் கொண்டிருந்த சலீமுக்கு அந்த இரவிலும் உறக்கம் வர மறுத்தது.

"நிரோஷா...! தம்பிரயும் தங்கச்சியிரயும் கலியாண விஷயமாக் கெதியாவரச் சொல்லித்தானே ஊரிலயிருந்து கடிதம் போட்டிருக்கிறாங்க. நாளைக்கே ஊருக்குப் போனா நல்லமெண்டு நினைக்கிறன். நீங்களும் வாற தானே.."

அந்த இன்பமான சூழலிலும் அவள் அப்படிப் பேசுவாள் என்று அவன் நினைத்திருக்கவில்லை.

"நான் வரமாட்டன். அந்தப் பட்டிக்காட்டு ஊருக்கு வர எனக்கேலாது. நீங்க மட்டும் போய் வாங்க. அதுவும் நாளைக்கி நீங்க போக ஏலாது. நாளைக்கி எங்கட தாத்தாட-டொக்டர் மச்சாண்ட மகளுக்கு பேர்த்டே. அதுக்கு நிண்டுதான் போகோணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அந்த பட்டிக்காட்டு ஊருக்கு வர எனக்கேலாது...' அவளது வசனம் அவனது காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. 'இவளது ஊர் என்றால் என்ன பட்டணமா? பட்டணமாய் இருந்தால் என்ன? மனித மனங்களில் அல்லவா வாழ்க்கையின் வெற்றியே தங்கியுள்ளது. புதிதாய்ப் பட்டணத்தைக் கண்ட கிராமத்துப் பெண்ணின் நாகரிகம் போன்ற தல்லவா இவளது கிராமம்? விரல் நகங்களுக்கு சாயம் தீட்டுவதும், வீட்டுக்கு வீடு டீ.வி பெட்டிகளும் இருந்து விட்டால் மற்றவர்கள் பட்டிக்காடு என்ற நினைப்பாக்கும் இவளுக்கு' என்று நினைத்து சலீம் மனவேதனைப்பட்டான்.

திரும்பிப் பார்த்தான். நிரோஷா உறங்கியிருந்தாள். சலீமும் உறக்கத்தினை வலிந்து பெற முயன்று கொண்டிருந்தான்.

★

தனிமையாகப் புறப்பட ஆயத்தமான சலீமுக்கு அவளது பேச்சு பேரிடியைப் போல இருந்தது.

"உங்கள காரில போகவேணாம் எண்டு காக்காமார் சொல்லுறாங்க. இந்தக் காலத்தில மோட்டார் சைக்கிளுகளக்கூடப் பறிக்காங்களாம். அப்பிடியிருக்க காரை எப்பிடிக் கொண்டு போற எண்டு கேக்கிறாங்க காக்காமார்? பஸ்ஸில போய் வாங்க..."

'நிரோஷா! இப்படி நீயே சொல்லுறாயே... உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன்மார் என்னை அவமானப்படுத்துகிறது உன்னையே அவமானப்படுத்துற மாதிரி உனக்குப் படவில்லயா?' என்று அவளிடம் கேட்க வேண்டும் போலிருந்தது சலீமுக்கு.

தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "அதுவும் மெய்தான். இன்னம் உழைக்கத் துவங்கல்ல. அதுக்குள்ள அப்பிடியெல்லாம் காரில போறதும் மனசுக்கு நல்லதில்லத்தான். நீங்களும் கூட வாறதெண்டாப் பரவாயில்லை. தனியத்தானே போகப் போறன். பஸ்ஸிலேயே போய் வாறன்..." சலீம் புறப்படும்போது கூறிவிட்டுச் சென்றான்.

"தம்பி இப்பதான் படிச்சி முடிச்சிருக்கி... ஏதும் உத்தியோகத்த எடுத்துக்கிட்டுத்தான் அவர்ர கலியாணத்தப்பத்தி யோசிக்க வேணும். இப்ப ஒரு முடிவும் தர ஏலாது கோவிச்சுக்காதையுங்க." சலீமின் தந்தை அபிப்பிராயப்பட்டார்.

"உத்தியோகத்தைப் பத்தியெல்லாம் யோசிக்காதைங்க. நாங்க உங்கட பொடியன கண்ணாப் பாத்துக்குவம். கார் தாறம். பத்து ஏக்கர் காணி தாறம். பத்து ஏக்கர் எண்டால் ஒங்கட பகுதிக்காணி மாதிரி இல்லை எங்கட பகுதிக் காணி. சோக்கான காணி. நல்ல விளைச்சல் பூமி. காசும் ஒண்ணரை லெட்சம் தருவம்..." - நிரோஷாவின் தந்தை.

"மச்சான்மார் எதுக்கும் யோசிக்கத் தேவையில்லை. உங்கட தங்கச்சிமார் விஷயத்துகளிலயும் நாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பம்... உத்தியோகம் இன்னம் கிடைக்கல்லையே எண்டும் யோசிக்காதைங்க..."

பேச்சுவார்த்தைகளின் போதே உறவுமுறை சொல்லிக் கதைத்த நிரோஷாவின் சகோதரர்களின் போக்கு சலீமுக்கும் அவன் தம்பிக்கும் மிகவும் பிடித்துப் போயின.

தனது தங்கைகளின் திருமண விஷயங்களிலும் கவனிப்போம் என்று சொன்ன மாமாவும், மச்சான்மாரும், அவர்களின் தங்கை நிரோஷாவுமா இப்போ - திருமணம் முடிந்த இந்த ஒரு வருஷத்திலே இப்படி மாறிப் போனார்கள் என்று நினைத்தபோது சலீமின் மனம் வேப்பிலையாகக் கசந்தது.

தனது ஊரில் போய் இறங்கிய சலீமுக்கு ஒரு புதுத் தெம்பு ஏற்பட்டது. 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே...' என்பதை மனத்துள் நினைத்துக்கொண்ட அவனுக்கு அது எத்துணை உண்மை என்பது கணப்பொழுதில் புரிந்தது.

'லைப்ரறி'யடியில் படித்த இளைஞர் கூட்டம் நிரம்பியிருந்தது. வியாபாரத் தலங்கள் சுமுகமாக இயங்கிக் கொண்டிருந்தன. தேநீர்க் கடைகளின் முன்பாக தயிர்ச் சட்டிகள் விற்பனைக்கு வெளியூர் கொண்டு போவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தன. மார்க்கட் சந்தியில் அரிசி விற்கும் பெண்கள், பெட்டிகளிலும் சாக்குகளிலும் அரிசியை நிரப்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தியிருந்தவாறு விற்றுக் கொண்டிருந்தனர். மரமுந்திரிகைப் பருப்பு விற்கும் பெண்களும் கடகங்களில் அழகாகப் பரப்பி, பொலித்தீன் பக்கெட்டுகளிலும் அடைத்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தனர். புத்தகக் கடையொன்றில் பலவகையான அறிவு நூல்களும் சஞ்சிகைகளும் தொங்கிக் கொண்டிருந்தன. 'நிரோஷாவின் ஊரில் இப்படி ஒரு புத்தக் கடை இருப்பதாக நான் கேள்விப்பட்டதேயில்லை நாகரிகமான மனிதர்களை உருவாக்க நல்ல புத்தகங்களும் சஞ்சிகைகளும்தான் உதவுகின்றன. நாகரிமானவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் எனது நிரோஷாவின் ஊரார் இதை உணரவில்லையா?' வேதனைப்பட்டான்.

சலீமைக் கண்டதும் சிலர் ஒதுங்கி நின்று மரியாதை செய்தனர். இன்னும் சிலர் சுகம் விசாரித்தனர்.

சில கண்கள் வேலிக்குள்ளிருந்து பார்க்க, வாய் 'புசு'புசுத்துக்கொண்டன.

"சலீம் எஞ்ஜினியர்... நம்மட நிலுபா டீச்சருக்குக் கேட்டவர்..." இந்தக் குரல் அவனுக்குப் பழைய நினைவுகளைக் கிளறிவிட்டன.

"நம்மட கஷ்ட நஷ்டத்துக்கு நிலுபாட குடும்பத்துக்குள்ள கலியாணம் முடிக்கிறதெல்லாம் சரிப்படாது. ரெண்டு பொம்புளப் புள்ளயள் இருக்குது. நம்மட அந்தஸ்துக்கு ஏற்ற இடமில்லை அது. மிஞ்சிப் போனா ஒரு வீடு கட்டித் தருவாங்க. உண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதிக்குக் குறைஞ்சது ஒரு கார் வேணும். நம்ம பொருளாதார நிலைமையை உசத்த வயலும் கைக்கூலியும் வேணும். நானும் உங்கட உம்மாவை, ஒண்டுமில்லாம முடிச்சி மிச்சம் கஷ்டப்பட்டன்..."

தந்தையினது இந்த உபதேசம்தான் சலீமை சொந்த ஊரிலே திருமணம் செய்யத் தடுத்து, அவனைப் பிறந்த ஊருக்கும் புகுந்த வீட்டுக்கும் ஓர் அந்நியனாக ஆக்கிவிட்டது என்பதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

"காக்கா... வாங்க வாங்க... உங்கள எத்தினை நாளாப் பாத்துக்கிட்டிருக்கோம். மதினி வரல்லையா? காரைக் கொண்டரல்லையா...?" அவனது சிறிய தங்கை கேள்வி மேல் கேள்வி கேட்டு வரவேற்றுக் கொண்டு அவனது கையைப் பற்றிப் பிடித்து கூட்டிக்கொண்டு போனாள்.

'காரா? நம் உழைப்பில் வாங்கிய காரா அது? மதினி மதினி என்று பதறுகிறாயே உன்னோடும் உன் குடும்பத்தோடும் பாசமுள்ள மதினியா அவள்...?' என்றெல்லாம் கேட்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

ஏதோ ஒருசில பொய்களை அவனது உதடுகள் வெளிப்படுத்தின.

பெற்றோருடன் பேசிக்கொண்டிருந்த சலீம் வீட்டின் முகட்டை அண்ணாந்து பார்த்தான். வீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அண்டர் சீற்' அடிக்க வேண்டிய சுமையும் தங்களுக்கு இருப்பதை அது ஞாபகப்படுத்திற்று.

அவள் நிரோஷா வீட்டாரிடம் வாங்கிய ஒன்றரை இலட்சம் ரூபாவில் அந்த வீடு ஒரு எழுபத்தையாயிரம் ரூபாவையும், பெற்றோரின் கடந்த காலச் சேமிப்பையும் விழுங்கியிருந்தது. நிரோஷாவின் வீட்டாரிடம் வாங்கிய பணத்தின் மிகுதி அவளின் கழுத்தில் கிடக்கும் தாலிக்கும் திருமணச் செலவுக்கும், இரு குடும்பத்தாரின் 'உடுபுடவை'களுக்கும்தான் செலவாயிற்று.

'விவாகரத்து என்பது திட்டமிட்டுச் செய்யப்படக் கூடாததுதான். ஆனால் அதைச் செய்ய நேரிடும் போது செயற்கையான தடைகள் ஒரு மனிதனுக்கு இருக்கவும் கூடாது. நிரோஷாவினதும், அவளது குடும்பத்தினரதும் அடக்குமுறை, ஏமாற்றுப் புத்தி காரணமாக அவளைவிட்டு நானும் நீங்க வேண்டுமானால் அவளிடம் பெற்ற ரொக்கம் ஒன்றரை இலட்சம் ரூபாவைத் திருப்பிக் கொடுக்க என்னால் எப்படி முடியும்?' சலீமின் மனது இப்படி நினைத்து வேதனைப்பட்டது.

"கல்முனையிலிருந்து ஒரு சம்பந்தம் தம்பிக்கு வருகுது. வீடு, வளவு, வயல் காணிகளோட ஒன்றரை லெச்சம் ரூபா காசும் தாறாங்களாம். தம்பிக்கு கல்முனையிலேயே ஒரு ஸ்கூலுக்கு மாத்தம் குடுக்கிற பொறுப்பையும் எடுத்துக்கிறாங்க. விருப்பத்தச் சொன்னா இந்த வீட்டுட மிச்ச சொச்ச வேலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சி போட்டு மூத்த தங்கச்சியையும் ஒருவன்ர கையில் பிடிச்சுக் குடுத்துரலாம்... அதுதான் உன்னோடையும் கலந்து பேசுவம் எண்டுதான் கூப்பிட்டம்..." தந்தை பேச்சைத் தொடங்கினார்.

"நல்ல விஷயந்தான் வாப்பா... காசு, காணி, கார் என்றெல்லாம் வெச்சு நீங்க எங்களை விலை பேசுறது எனக்கு நல்லாப்படலை. கலியாணம் முடியுற வரைக்கும் அது தாறன்... இது தாறன் அப்பிடிச் செய்யிறம் இப்பிடிச் செய்யிறம்... என்றெல்லாம் பீத்துவானுகள். எல்லாம் முடிஞ்ச பிறகுதான் அவனுகள்ட பீத்தல் குணம் நமக்குத் தெரிய வரும்" வாழ்வில் முதன் முதல் தந்தையை எதிர்த்துப் பேசி அவனது மன வேதனைகளை ஒவ்வொன்றாகத் தாயிடமும் தந்தையிடமும் விளக்கிக் கொண்டிருந்தான்.

★

நிரோஷாவின் வீட்டுக்கு எழுதிய கடிதத்துக்குப் பதில் எதிர்பார்த்தே இரண்டு வாரங்கள் கடந்து போய் விட்டன. 'என்ன மச்சான் ஊரில மிச்ச நாளா நிக்கிறீங்க, என்னமும் பிரச்சினைகளா?' என்று ஊரில் கேட்கும் நெருங்கிய நண்பர்களின் கேள்விகளுக்கு அவனால் பதில் சொல்லுவது சங்கடமாயிருந்தது.

'முன்பு இன்னும் உத்தியோகம் கிடைக்கவில்லையா?' என்ற கேள்விகளுக்குத்தான் அவனால் மறுமொழி சொல்ல வேண்டியிருந்தது. இப்போ 'குடும்பத்தில் பிரச்சினையா?' என்ற வினாக்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமொழி சொல்ல வேண்டியுள்ளது என்பது சலீமுக்கு வேதனையாக இருந்தது.

உத்தியோகம் உள்ள ஓர் எஞ்ஜினியர் மாப்பிள்ளைக்குத் தரும் சீதனத்தைத்தானாம் சலீமுக்கும் தர தன் வீட்டார் ஒப்புக்கொண்டிருந்ததாகவும், அதனால் எஞ்ஜினியர் உத்தியோகம் கிடைத்த பிறகுதான் காணிகளையும் காரையும் சலீமின் பெயரில் எழுதித் தருவதைப்பற்றி யோசிக்கலாமாம் என்றும், ஊரில் தமது பிரச்சினை வெளியாவதற்கு முன்பு வீடு வரும்படியும் நிரோஷா சலீமுக்குக் கடிதம் எழுதியிருந்தாள்.

"தம்பி... நிலூபாவும் ஒரு டீச்சர்தான், காணியும் காசும் வாங்கினோம் என்ற பெயரை எடுத்து, ஒரு பணக்காரக் குடும்பத்துக்கு அடிமையாகிறதை விட அப்பிடியான ஒரு டீச்சரை முடித்துக் கொண்டு உண்ட வாழ்க்கை அமையுறது நல்லதெண்டுதான் நினைக்கிறன். நம்மட தங்கச்சிக்கும் நமது பொருளாதார நிலைக்கேற்ற விதமாக வீட்டை முடித்து அதற்கேற்ற ஒரு மாப்பிள்ளையையே எடுக்கிறதுதான் நல்லது. சும்மா வீணிலே உன்னுடைய வாழ்க்கையையும் நரகமாக்கிக் கொள்ள விரும்பாதே. நிலூபாவுக்கு நான் செய்த துரோகந்தான் என்னை இப்படி ஆட்டுகிறது."

தனது ஆசிரியர் தம்பியைத் தனிமையாக அழைத்து முடிவு எடுத்த கையோடு நிலூபா டீச்சர் வீட்டுக்கும் அன்றே செய்தியனுப்பி அவனது திருமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சியதார்த்தத்தை முடித்துவிட்ட சலீம் எஞ்ஜினியருக்கு ஒரு பாலத்தை நிர்மாணிக்கும் பணியை நிறைவேற்றி முடியும் போது அடையும் திருப்தியைவிட பல மடங்கு திருப்தி ஏற்பட்டிருக்க வேண்டும்

★

பாடசாலையில் படிக்கும் போது விடுமுறைக் காலத்தில் வீட்டில் நிம்மதியாக நின்றுவிட்டு கல்லூரி ஹாஸ்டலுக்குப் போகும் ஒரு 'ஹோம்சிக்' உள்ள மாணவனின் மன உணர்ச்சியோடு பஸ்ஸை விட்டு இறங்கி சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின்னர் தன் புகுந்த வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான் சலீம் எஞ்ஜினியர்.

அவனைப் பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறவர்களையும், அவனைக் கவனத்திலெடுக்காமல் அவரவர் பணிகளில் நிற்கிறவர்களையும்தான் அவன் தரிசிக்கக் கூடியதாயிருந்தது.

நிரோஷாவின் வீட்டுக்கு இரண்டொரு வீடுகளுக்கு முன்னதாக இருந்த நசீரா அவனை மகிழ்ச்சியோடு சுகம் விசாரித்த போது மன வேதனைகளைச் சற்று மறந்து போனான்.

'நசீரா என்னோட படிச்சவள்தான். அவளுக்கு டீச்சிங் கிடைத்ததோட அவளுக்குப் பெரிய நெனைப்பு. அதோட ஒரு 'கிளார்க்'கை முடிச்சதோட இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் எடுப்பு. எங்கட குடும்பத்துட காசுக்கும் அவங்கட குடும்பத்துட கஷ்டத்துக்கும் ஏணி வெச்சுப் பார்க்கோணும். நாங்க அவங்களோட அவ்வளவு நல்லம் இல்லை' நிரோஷா அவன் திருமணம் முடித்த புதிதில் சொன்ன வார்த்தைகள் சலீமுக்கு ஞாபகம் வந்தன.

ஆனால், சலீமுக்கு என்னவோ நசீராவையும் அவள் கணவனையும் பார்க்கும் போது ஒரு 'லவ்பேர்ட்' சோடியைத்தான் ஞாபகப்படுத்தின. தம்மால் உழைத்து அமைத்துக் கொண்ட ஒரு சிறிய வீட்டில் எவ்வளவு நிம்மதியாக வாழ்கின்றனர் என்று நினைத்துக் கொண்டு முன்னேறிய போது சலீமைக் கண்ட அவன் மனைவி நிரோஷா முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்.

**(தினகரன் வாரமஞ்சரி-1989.09.10)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறாத உள்ளங்கள்

அது ஒரு தொடர் அடுக்கு மாடி வீடு.

தனது வீட்டுக்கு மேலாக இருந்த வீட்டின் தரையில் உரலை வைத்து அதனுள் எதையோ இட்டு மாவாக்கிக் கொண்டிருந்த சப்தம் தனது கீழ் வீட்டுக் கூரை இடிந்து விழுந்து விடுவது போன்ற ஒரு பிரமையை ஜெமீலாவுக்கு உண்டாக்கியது.

"நாசமாப் போனவள்... ஹறபாப் போனவள்... ஊட்டுக் கூரையப் போட்டு இடிக்கிறாள் பாரு... நாசமாப்போனவளுக்கு இது மாதிரித்தான் இடிவுளோணும்..." ஜெமீலா தனது வீட்டுக்குள்ளிருந்து திட்டிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த அந்த தனியார் தொடர் அடுக்கு மாடி வீட்டுத் திட்டம் வழக்கம் போல மாலை நான்கு மணியாகும் போதே ஆரவாரங்களால் களைகட்டத் தொடங்கிவிடும். மாடியில் ஒவ்வொரு வீட்டுக்கும் முன்பாக இருக்கும் இரண்டரை அடி இடைவெளியை நீளப்பாட்டில் எடுத்து கிரிக்கட் ஆடுகளமாக ஆக்கிக் கொண்டு விளையாடத் தொடங்கியிருந்தனர் சிறுவர்கள்.

இப்படி விளையாடும் போது பக்கத்து வீட்டவர்களின் கண்ணாடி யன்னல்களைப் பந்துகள் பதம் பார்ப்பதும், அதனால் சண்டைகள் உருவாவதும் சகஜம்.

அதே இரண்டரை அடி இடைவெளியில் நின்று கொண்டு ஒவ்வொரு வீட்டுக்கும் போவோர் வருவோரை பார்த்து நிற்கும் பெண்களும், எதிரெதிர் வீட்டவர்களுடன் கதைத்துக்கொண்டு நிற்கும் பெண்களும், தமது பிள்ளைகளின் கிரிக்கட் ஆட்டத்தை ரசித்து நிற்கும் பெற்றோரும் போவோர் வருவோருக்கு மனம் விரும்பியோ, விரும்பாமலோ விலகி இடம்விட்டு தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

தன் வீட்டுக்குரிய 'கோலிங் பெல்'லின் அலறல் திட்டிக் கொண்டிருந்த ஜெமீலாவின் வாய்க்கு ஓய்வைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் முன்னங் கதவைத் திறந்த மாத்திரத்தில் அங்கே அவரைக் கண்டதும் ஜெமீலாவுக்குள் ஒரு வெறுப்பு தோன்றியது. அவருக்குப் பின்னால் இரண்டு பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

"மிஸ்டர் தாஜுதீன் இன்னம் வரல்லையா?..." வந்தவர்களில் ஒருவர் விசாரித்தார்.

"இப்பத்தான் ஒபீஸிலயிருந்து வந்து அஸர் தொழுதுட்டு வரப் பள்ளிக்குப் போயிருக்காரு.."

"நாங்களும் அந்தப் பக்கம் இருந்துதானே வாறம்..." என்று சொன்னவர்கள் தமக்குள் குசுகுசுத்துக் கொண்டார்கள்.

தன் கணவர் பள்ளிவாசலில் இருந்து திரும்பும் வரை அவர்களை அமரும்படி கூறிய ஜெமீலா தனது வீட்டின் முன்னறையில் 'போடர்ஸ்' ஆக இருந்தவர்களில் ஒரு 'யூனிவசிட்டி' மாணவனை அனுப்பி பள்ளிவாசலில் இருந்து தாமதிக்காது தன் கணவனை அழைத்து வரும்படி கூறிவிட்டு படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

ஜெமீலா அந்த வீட்டுக்கு குடிவந்தது இன்று நேற்றல்ல. சுமார் முப்பது வருடங்கள் நகர்ந்துவிட்டன. தாஜுதீன் 'நானா' வைத் திரு:மணம் செய்து நான்கு மாதங்களில் அந்த வீட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு தனிக் குடித்தனம் ஆரம்பித்தனர். இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது மகன்மார் இருவரும் திருமணமாகி நகரின் சுற்றுப் புறங்களில் வீடுகள் வாங்கி தமது மனைவிமாருடன் தனிக்குடித்தனம் போய்விட்டனர்.

அன்று அவள் திருமணமொன்றுக்காக புறப்பட்டுத் தனது கணவனுடன் வீட்டை விட்டு வெளியேறவும் அவளது வீட்டுக்கு மேல் வீட்டவர்கள் உடுதுணிகளைக் கழுவி மேலே உலரப் போடவும் சரியாயிருந்தது.

ஜெமீலா அண்ணாந்து பார்த்தபோது அவளது மேல் வீட்டு மக்கீனா ஒருவகைப் பதற்றத்துடன் நின்றாள். அவளது முகபாவம் மன்னிப்புக் கோருவதை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

"ஹறபாப் போனவள் செஞ்ச வேலையப் பாரு... உடுப்பக் கழுவினா ஒங்கட ஒங்கட ஊட்டோட காயப் போட்டுக்கோணும்... எங்க ஊட்டு முத்தத்தில தண்ணி கொட்ட ஏலா..."

இந்த அற்ப விடயத்தோடு ஆரம்பித்த பிரச்சினைதான் இன்று ஜெமீலா தான் கடந்த முப்பது வருடங்களாகக் குடியிருந்த வீட்டையே விட்டு எழும்பக் காரணமாக்கிற்று.

"இங்கப் பாருங்க... அவள் ஊட்டுக் கூரையைப் போட்டு இடிக்கிற இடிய... வேணுமெண்டுதானே இடிக்கிறாள்... ஒரு நாளைக்கு அது இடிஞ்சி என்ர தலையிலேயே வந்து விழுந்தா என்னத்தச் செய்யிற...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஊட்ட வித்துட்டு வேறு ஒரு ஃபிளட் இல்லாத ஊடாப் பாத்து வாங்கிட்டுப் போவம்... டீ.வீக்கு அண்டென்னா கட்டுறதுக்கும் மேல் மாடிக்காரனுக்கிட்ட பல் இழிக்கோணும். தனி ஊடெண்டா எந்தக் கரச்சலுமில்ல..."

தனது மனைவியின் இந்தக் கருத்தை கணவன் தாஜுதீன் பல தடவைகளில் எதிர்த்தார். அவரது எதிர்ப்பு அவளின் முயற்சியை காலதாமதமாக்கிற்றே ஒழிய கைவிடச் செய்யவில்லை.

ஜெமீலா வேலை செய்த கம்பனியிலிருந்து ஓய்வு பெற்றபோது இளைப்பாற்றுப் பணிக்கொடையாக ஒரு பெரிய தொகை கிடைத்தது. அவள் அத்தொகைக்கு ஏற்றாற் போல் ஒரு 'டைஹட்சுச்சரட்' காரை வாங்கி வந்து அவர்களது வீட்டு முற்றத்தில் நிறுத்தியபோதும் பிரச்சினை யொன்று கிளம்பிற்று.

கார் கொணர்ந்து மூன்றாம் நாள் காரின் மீது மண்கலந்த தண்ணீர் விழுந்து அந்த அழகான காரின் மீது அங்கும் இங்குமாய்ப் படர்ந்திருந்தது.

என்ன நடந்திருக்கும் என்பதை ஜெமீலா கணப்பொழுதில் யூகித்துக் கொண்டாள் என்பதை அவளது கூச்சல் வெளிப்படுத்தியது.

"ஊட்டக் கழுவினா அந்த ஜறாவைய எங்கட காருக்கு மேலயா தள்ளோணும்... பொறாமை புடிச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேலையெல்லாம் செய்யச் செய்ய நாங்க பார்த்துக்கிட்டு ஈக்கோணும்..." என்றவள் கணவனின் அப்பாவித் தனத்தைக் கண்டித்தாள்.

எல்லாவற்றுக்கும் சமாதானம் சொல்லி 'டோண்ட் வொறி', 'டேக் இட்ஈஸி' என்று சொல்லும் அவளது கணவன் தன்னோடு சேர்ந்து மேல்மாடி வீட்டுக்காரரோடு சண்டைக்குப் போகாமல் இருந்தது ஜெமீலாவுக்கு அறவே பிடிக்கவில்லை.

"அஸ்ஸலாமு அலைக்கும்..."

கணவன் வீட்டுக்குள் நுழைந்து ஏற்கனவே வந்திருந்த மூவருக்கும் 'ஸலாம்' சொல்லும் சப்தம் கேட்டு, நினைவுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, வந்திருந்தவர்களுக்கும் தன் கணவனுக்கும் தேனீர் தயாரிக்க சமையலறைக்குள் நுழைந்தாள் ஜெமீலா.

தாஜுதீனுக்கும், வந்திருந்தவர்களுக்கும் இடயிலான உரையாடலின் போக்கு தீவிரமடைந்து கொண்டிருந்தது.

"நீங்க இந்த ஊட்ட வித்துத் தந்தா பதினஞ்சாயிரம் ரூபாதான் நான் புறோக்கர் ஃபீஸ் தாறதாச் சொன்னன். அந்தப் பதினஞ்சையுந்தான் தருவன்..." தாஜுதீன் தீர்க்கமாகவே சொன்னார்.

"அது சரி... எங்கட பேச்சயும் கொஞ்சம் கேளுங்க... ஊட்ட நீங்க ஆறு லெச்சத்துக்கு வித்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரச் செல்லித்தான் பதினஞ்சாயிரம் புறோக்கர் ஃபீஸ் தாறதாச் சொன்னீங்க... அப்ப நான் மட்டும்தான் பேசின... இப்ப நாங்க மூணுபேர் சம்பந்தப்பட்டீக்கம்... எட்டரை லெச்சத்துக்கு ஊட்ட வித்துத் தந்தீக்கம்... நூத்துக்கு மூணு வீதம் புறோக்கர் ஃபீஸ் தரோணும்... அதன்படி இருபத்தஞ்சாயிரம் ரூபா நீங்க தரோணும்..."

அங்கு வந்தவர்களின் தலைவன் பிடிவாதமாய் நின்றான்.

"கொஞ்சம் பொறுங்கோ... நான் மூணு பேருக்கிட்டயும் சொன்னனா?... இல்லையே... ஒங்களுக்கிட்ட மட்டும்தானே சொன்னன்... அதுவுமில்லாம நான் பேர்சன்டேஜ் பாத்து புறோக்கர் ஃபீஸ்தாறதாச் சொல்லவுமில்ல... வீட்ட வித்துத்தந்தா பதினஞ்சாயிரம் ரூபாதான் தாறதாகச் சொன்னன்... பதினஞ்சாயிரத்துக்கு மேல ஒரு சதமும் தரமாட்டேன்..."

இந்த வீட்டை விற்று விட்டு இன்னொரு வீட்டை வாங்குவது இலேசான காரியம் என்றுதான் ஆரம்பத்தில் ஜெமீலா நினைத்திருந்தாள். ஆனால் அவர்கள் வீடு வாங்குவதற்காக வீடு தேடத்தொடங்கியபோதுதான் அது அவ்வளவு இலகுவான காரியம் இல்லை என்பது புரிந்தது.

வீடு நன்றாகவும், நல்ல இடத்திலும் அமைந்திருந்தால் அவர்களது கைக்குக் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் போதாமலிருந்தது. அவர்களுடைய கைக்குக் கிடைக்கும் பணத்துக்கு ஏற்ற வீடு தேடுகையில் ஒன்றில் அந்த வீடு அமைந்திருந்த சூழல் மோசமாய் இருந்தது அல்லது வசதிகள் போதாமலிருந்தன. அதாவது மலசல கூட, குளியலறை வசதிகள் பல வீடுகளுக்குப் பொதுவானதாக இருந்தன. ஒன்றுக்கும் முடியாத பட்சத்தில் அரசாங்க அடுக்கு மாடி வீடாவது வாங்குவோம் என்று பார்த்தால் அதுவும் சட்டப்படி உடமை மாற்றம் செய்து எடுக்க முடியாதவாறுதான் நிலைமை இருந்தது.

இந்தச் சிரமங்கள் ஜெமீலாவுக்குப் புரியும் போது காலம் கடந்து போயிற்று. "என்னால் இனி ஊடு தேட ஏலா... ஒண்டு இருந்தா ஒண்டில்ல... இதயெல்லாம் பாக்கக்குள்ள இந்த ஊடு எவ்வளவோ நல்லம்... மேல் ஊட்டுச் சனியனுகள்ட தொல்லையைக் கணக்கெடுக்காம இருப்பம்... இனி புறோக்கர்மாருக்கிட்ட ஊட்ட விக்கிறதில்ல எண்டு செல்லி வீட்டுக்கு வாங்கின எட்வான்ஸ்சத் திருப்பிக் குடுப்பம்..."

ஜெமீலா இப்படிச் சொன்னபோது தாஜுதீன் அதற்கு இணங்கவில்லை.

"நான் வாக்குமாறமாட்டன். வீட்ட விக்கிறதாகச் சொல்லி எட்வான்சும் வாங்கியாச்சு... நமக்கு நல்ல ஊடு அகப்படல்ல எங்கிறதுக்காக வெல்லாம் எட்வான்ஸ் வாங்கிவிட்டு அவங்கள ஏமாத்த ஏலாது..." என்று கூறி மனைவியின் வேண்டுகோளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிக் குடியிருந்த வீட்டை விற்ற தாஜுதீன், இப்படியொரு சோதனையை எதிர்கொள்ள நேர்ந்தபோது ஆத்திரப்படுவதிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது.

"ஹலோ... ஒங்களுக்குத் தெரியுமா?... இந்த ஊட்ட கடைசியில எண்ட வைஃப் விக்க வேணாம் எண்டாங்க... இருந்தாலும் நான் வாக்கு மாறமாட்டன்... வாக்குமாறப்போடாது எண்டுதான் இத விக்க முடிவு பண்ணினன்... அந்த முடிவோடதான் இந்த ஊட்ட வித்திருக்கன்... நாங்க இனி எப்படியும் ஒரு மாதத்துக்குள்ள ஊட்டக் காலிசெய்யோணும்... அதுக்குள்ள வேற ஊடொண்டு வாங்கோணும் அந்த ஊட்ட வாங்கிறதுக்கும் புறோக்கர் ஃபீஸ் குடுக்கோணும். அல்லாவுக்காக எனக்கிட்ட பதினஞ்சாயிரத்துக்கு மேல ஒரு சதோமும் கேக்காதைங்க... நான் வாக்கு மாறல்லையே..." அவரது நேர்மை அவரைத் துணிந்து பேச வைத்தது.

வந்தவர்கள் மூவரும் சேர்ந்து, வீட்டை விற்றுக் கொடுத்ததற்கு ஏற்கனவே பொருந்திக் கொண்ட பதினையாயிரம் ரூபா போதாதென்றும், விற்பனை விலையில் நூற்றுக்கு மூன்று சதவீதம் தரகுப் பணம் தரவேண்டும் என்றும் பிடிவாதமாய் நின்றார்கள்.

"ப்ளீஸ்... தயவு செஞ்சு என்னக் கஷ்டப்படுத்தாதயுங்க... நான் ஒரு ஆளுக்கிட்டத்தான் வித்துத் தரச் சொன்னன்... மத்த ரெண்டுபேரையும் எனக்கு யாரெண்டே தெரியா... அது மட்டுமல்ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்ட வித்துத் தந்தா பதினஞ்சாயிரம் ரூபாத்தான் புறோக்கர் ஃபீஸ் தாரதாச் சொன்னன்...”

தாஜுதீனின் இந்த முடிவு வந்திருந்தவர்களின் தலைவனுக்கு ஆத்திரத்தை எழுப்பிற்று.

“அடேய்... என்னைக் கெட்டவனாக்காதேடா... நான் ஆள் கொண்டு போட்டு மறியலுக்குப் போய் வந்தவண்டா... இப்ப ஏதோ திருந்தி இப்பிடி இருக்கன்... இருபத்தையாயிரம் ரூபா புறோக்கர் ஃபீஸ் தராட்டி ஒன்னையக் கத்தியால் குத்துவண்டா...” அவர் மரியாதை தவறிப் பேசினார்.

“டேய்... யாரப் பாத்துடா மரியாதை இல்லாமப் பேசுறாய்... அதுவும் ஏன்ட வீட்டுக்குள்ளயிருந்து... போடா வெளியே... தூ... நீ போட்டிருக்கிற ஒண்ட இந்த ஜுப்பாவுக்கும் நீ வெச்சிருக்கிற இந்த தாடிக்குமே மரியாதை வெக்காமப்பேசுறாயேடா...” தாஜுதீன் ஆத்திரம் கொண்டு பேசினார்.

போர்க் கோழிகளாக மோதவிருந்தவர்களை ஜெமீலா விலக்கி, வந்திருந்த தரகர்கள் மூவரையும் வீட்டுக் கதவுக்கு வெளியே கணவருடன் சேர்ந்து தள்ளிச் சென்று விட்டபோது, இந்த அல்லோல கல்லோலம் கேட்டு மேல் வீடுகளிலும் அக்கம்பக்கத்து வீடுகளிலும் இருந்த இளைஞர்கள் ஓடி வந்தார்கள்.

“யார்டா அவனுகள்...? எங்கட ஃபிளேட்ஸ்சுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சண்டித்தனம் காட்ட வாறவனுகள்... வெளியில ஈந்து வந்து எங்கட ஃபிளேட்ஸ் ஆக்களோட ஒருத்தனும் சண்டை புடிக்கேலா... மண்டையத் தகத்துப்போடுவம்..."

இளைஞர்களின் எச்சரிக்கைக்குப் பயந்த அந்த 'புறோக்கர்' மூவரும் பெட்டிப் பாம்பாய் அடங்கினர். தனது கணவருடன் சண்டைக்கு வந்தவர்களை விரட்ட வந்திருந்த அந்த இளைஞர் கூட்டத்தில் மேல் வீட்டு மக்கீனாவின் மூத்த மகனும் ஒருவனாய் நின்றிருந்தான். யாரோடு பகைத்துக் கொண்டு வீட்டை விற்று விட்டுப் புறப்படத்தயாரானாளோ அந்த மக்கீனாவின் மகனேதான்.

***(தினகரன் வாரமஞ்சரி-1996.10.06)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை மாறும் பறவைகள்

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் சனக் கூட்டத்தினாலும், வாகனக் கும்பலினாலும் நிரம்பிக் காணப்பட்டது. மத்திய கிழக்கின் தொழிலாளர் சந்தையில் எமது கூலிகள் மலிந்த பின்னர்தான் புகையிரத நிலையங்கள், பஸ் நிலையங்கள் ஆகியவற்றில் காணப்படாத அளவுக்கும் அதிகமான நெரிசல் விமான நிலையத்தில்.

விமானம் வந்து தரையிறங்க வேண்டிய நேரம் கடந்த பின் வந்த ஒவ்வொரு நிமிடத்தையும் சமீம் பலத்த சிரமத்தோடு கடத்திக் கொண்டிருந்தான். அவனது மனைவியின் வருகைக்காகக் காத்திருந்த அவனோடு அவனது ஏழு வயது நிரம்பிய மகள் அனீதாவும், ஐந்து வயது மகன் அனசும் தம் தாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகைக்காக ஆவலோடு காத்திருந்தனர்.

"வாப்பா...! உம்மா வாற பிளேன் வர இன்னம் மிச்சம் நேரமாகுமா...?" இரண்டு வருடங்கள் பிரிந்திருந்த தனது தாயைக் காணும் ஆவல்-பாசம் அச் சிறுமியின் வினாவாக உருவெடுத்தது.

"இன்னம் கொஞ்சத்தில உம்மா வந்திடுவாங்க மக்காள்..." என்று ஆறுதல் கூறிய சமீம் விமானம் தாமதிப்பதற்கான காரணத்தை அறியும் ஆவலில் விமான நிலையத்தின் முன்னே அங்கும் இங்கும் அலைந்து மற்றவர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தான்.

"உம்மா எனக்கு மிச்சம் புதுச்சட்டை கொண்டருவாங்களா வாப்பா...? எனக்கு போணிக்காவும் கொண்டருவாங்களா...?" சிறுமியின் உள்ளத்தில் ஆசை நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தமை அவனுக்குப் புரிந்தது.

"ஓம் மகள்... ஒங்களுக்கு புதுச் சட்ட, தங்க மாலை, பாவப்புள்ள எல்லாம் கொண்டருவாங்க. தம்பிக்கு சேட், லோங்ஸ், விளையாடக் கார் எல்லாம் கொண்டருவாங்க. உம்மா ஒங்களோட மிச்சம் எரக்கம்தானே..." தனது பிள்ளைகளின் மனதைத் தேற்றிக் கொண்டவனாக விமானத்தின் வருகைக்காகக் காந்திருந்தான் சமீம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் பெற்றெடுத்த பிள்ளைகளை, கட்டிய கணவனை, மனைவியை, பெற்ற தாயை, தந்தையை என்றெல்லாம் எதிர்பார்த்து எத்தனையோ உள்ளங்கள் அங்கு அவனது உள்ளத்தைப் போல மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தன. அதேவேளை, இப்படியானவர்களைப் பிரியும் துயரில் இன்னொரு கூட்டத்தினர்.

"வாப்பா...! இண்டக்கி உம்மா வரமாட்டாவாக்கும்..." என்று தன் மகள் அனீதா சமீமின் முகத்தைத் தனது சின்னஞ்சிறு கைகள் இரண்டினாலும் பிடித்துத் திருப்பியவாறு கேட்டபோதுதான், சமீம் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு சவூதி அரேபியாவிலிருந்து இலங்கை திரும்பிய தனது மனைவி சமீனாவை அழைத்து வருவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றபோது நடந்த சம்பவத்தை இரைமீட்டுக் கொண்டதிலிருந்து விடுபட்டான்.

ஆனால் மீண்டும் அவனது நினைவுச் சக்கரம் பின்னோக்கிச் சுழலத் தொடங்கியது.

அப்போது சமீம் அழகானதொரு இளைஞன். கையிலே சுமாரான ஒரு முதலை வைத்துக் கொண்டு சுய தொழில் செய்து கொண்டிருந்த அவனை மாப்பிள்ளையாக எடுக்கப் பலரும் போட்டி போட்டனர். ஆனால் அவன் தான் விரும்பிய சமீனா வறிய நிலையில் இருக்கின்றாள் என்பதற்காக அவளைக் கைவிட விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கச் சிவந்த அழகியான சமீனாவின் ஒழுக்கமும் அழகியதாகவே இருந்தது. அவன் அவளை இஸ்லாமியச் சட்டப்படி 'மஹர்' கொடுத்துத் திருமணம் செய்து கொண்டான்.

நாட்கள் உருண்டு, வருடங்கள் பல கழிந்தன. அவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தை அனீதாவுக்கு ஐந்து வயதும், ஆண் குழந்தை அனசுக்கு மூன்று வயதும் ஆகியிருந்தன.

வறுமையும் செல்வமும் மாறி மாறி வரும் சகடக்கால் போன்றதுதான் என்பதை சமீமும் தன் வாழ்வில் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டான். சொந்த வியாபாரம் செய்த அவனது கை முதல் கரைந்து கொண்டிருந்தது.

ஊரிலே ஒரெழுத்துக்கூடப் படிக்காத அழகில்லாத பல பெண்கள் சவூதிக்கும், டுபாய்க்கும், குவைத்துக்கும் 'ஹவுஸ் மெயிட்'களாகச் சென்று இலட்சக் கணக்காக உழைத்துக் கொண்டு வந்து ஊரிலே கட்டிய- கட்டிக்கொண்டிருக்கும் கல் வீடுகளைப் பார்த்தபோது சமீனாவுக்கும் தானும் வெளிநாட்டுக்கு பணிப் பெண்ணாகச் செல்ல வேண்டும் என்னும் ஆசை பிறந்தது.

அவனது பிரதேசத்தில் வழக்கமாகிவிட்ட சீதனம், சொந்த வீடு என்றெல்லாம் மணமகனுக்குக் கொடுத்துத்தான் தாம் பெற்ற பெண்களைக் 'கரை சேர்க்க' வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலைக்காளாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான தந்தையரை ஆட்கொள்ளும் கவலையும், பயமும் சமீமின் மகளும் வளர வளர அவனையும் ஆட்கொள்ளத் தொடங்கிற்று.

தனது மகளின் எதிர்காலத்தைப் பற்றிய சமீமின் கவலை சமீனாவை வெளிநாட்டுக்குப் பணிப்பெண்ணாக அனுப்ப வைத்துவிட்டது.

தாயைப் பிரிந்திருக்கும் தனது மகள் அனீதாவையும், மகன் அனசையும் கண்ணாய்க் காத்தான் சமீம். இதன் காரணமாக அவனது வழக்கமான தொழிலையும் கைவிட்டான். தாம் வசிக்கும் சிறு வீடு அமைத்திருந்த நிலத்துண்டை ஊரிலே இயங்கிய 'சப் ஏஜன்சிக்காரன்' ஒருவனுக்கு ஏற்கனவே ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் சமீனாவை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தான்.

இரண்டு வருடங்களை சவூதியில் கழித்துவிட்டு வந்த சமீனாவின் உழைப்பில், ஈடுவைத்த காணித்துண்டை மீட்டது போக ஒரு சொற்ப தொகைதான் சமீமின் கையில் எஞ்சியிருந்தது.

சமீம் எதிர்பாராத விதமாக சமீனா பல கோணங்களிலும் மாறிக் காணப்பட்டாள். இயற்கையாகவே அழகியான அவள் சவூதி வாழ்க்கையால் இன்னும் அழகியாகக் காணப்பட்டாள். அவளது உடம்பின் பல அங்கங்களும் பொலிவடைந்திருந்தன. ஆனால், அவளது நல்ல குணம் மாத்திரம் குன்றியிருக்கும் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவூதி அரேபியாவில் இருந்து வந்த அவளால் இரண்டு மாதங்கள் கூட இலங்கையில் தாமதிக்க முடியாதிருந்தது. மீண்டும் தான் சவூதி செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை அவனிடம் வெளியிட்ட போது சமீம் அதை மறுதலித்தான். தமது இரு குழந்தைகளினதும் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டாவது திரும்பவும் சவூதி செல்ல வேண்டாம் என அவளிடம் வேண்டினான்.

முதற்தடவையாக சவூதி செல்லத் தன் கணவனிடம் பணிந்து அனுமதி பெற்ற அவள் உழைக்கத் தொடங்கிய பின்னர் அனுமதி என்ற பேச்சையே மறந்து விட்டாள்.

"ஒங்களுக்கு இஷ்டமெண்டால் இந்த ஊட்டுல என்ர புள்ளைகள வெச்சிப் பார்த்துக்கிட்டு இரியுங்க. நான் போறது ஒங்களுக்கு விருப்பமில்லாட்டி இண்டைக்கே ஒங்கட உம்மாட ஊட்டுக்கு போயிடுங்க..."

★

"ஏயெல் முகம்மது சமீம்... அப்துல் கரீம் சித்தி சமீனா... காதி நீதிமன்றத்தின் காதியார் வழக்கை அழைத்தபோதுதான் சமீம் மீண்டும் கடந்த காலச் சம்பவங்களிலிருந்து சுய நினைவுக்கு வந்தான்.

ஒரு செருமலோடு தனது குரலைச் சரி செய்து கொண்ட காதியார் ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன... இஞ்சால வாங்க புள்ள... சமீனா... என்ன இது... வழக்கமா நம்மட பக்கத்தில மாப்பிளதான் பொண்டாட்டிய வேணாம் எண்டு செல்லுறாங்க... சின்னச் சின்னப் பிரச்சினையளுக் கெல்லாம் பொஞ்சாதிய வேணாம் எண்டு போட்டு, அவங்களுக்கிட்ட வெக்கமில்லாம வாங்கின கைக்கூலிக் காசையும் அவளுக்குத் தான் செலவழிச்சிப் போட்டன் எண்டு செல்லி வெட்கமில்லாமக் கணக்குக் காட்டிப் போட்டு பிரியுறாங்க... அதென்ன... நீ மாப்பிளைய வேணா எண்டு செல்லுறயாம்...” வயதிலும் அனுபவத்திலும் முதிர்நத காதியார் நிதானமாக உள்ளதை உள்ளபடி பேசினார்.

அவளது சேலைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு அவளோடு ஒன்றிநின்ற ஐந்து வயதுப் பையன் அனசும், தந்தையோடு நின்ற ஏழு வயது மகள் அனீதாவும் விடயம் புரிந்தும் அதன் தாற்பரியம் புரியாதவர்களாகத் தந்தையையும் தாயையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

“நான் சவூதிக்கு திரும்பவும் போகோணும்... அதற்கு அவர் புறியப்பட்டா நாங்க ஒண்டா இரிக்கச் சம்மதந்தான்...” துணிவாகக் கதைத்தாள் சமீனா.

“புருஷன் சொல்லுறதத்தான் பொண்டாட்டி கேட்டு நடக்கோணும். பொண்டாட்டி சொல்லுறத்தப் புருஷன் கேட்டு நடக்கிறதெண்டால் ஒரு நியாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிக்கோணும்... ஒண்ட மாப்பிளதானே நீ கஷ்டமா இரிக்கக்குள்ள சீதனம், பாதனம் எண்டு கேட்டு மத்த ஆம்பிளயள் மாதிரிக் கஷ்டப்படுத்தாம சும்மா ஒன்ன முடிச்சார். அவர் இனியும் ஏண்ட மாதிரி ஒன்னக் கவனிப்பார். ஊரில... ஒலகத்தில உள்ள எல்லாப் பொம்புளயளும் வெளிநாட்டுக்குப் போய் ஒழச்சித்தானா வாழுறாங்க... இல்லையே... போட்டுட்டு மாப்பிள்ளையோட போகா..." காதியார் சமாதான முயற்சியை மேற்கொண்டார்.

"நான் சவூதிக்குத்தான் போகோணும்..." சமீனா பிடிவாதமாகவே நின்றாள்.

"சவூதிச் சாப்பாடுதான் ஒனக்கு இப்ப புடிக்குமோ... இஞ்ச உள்ள சாப்பாடு பிடிக்காதோ?..." காதியாரின் இந்தக் கேள்விக்கு நீதிமன்றத்தில் பலத்த சிரிப்பொலி.

வழக்கைத் தொடர்ந்து விசாரித்த காதியாராலுமோ, அதற்கு முன்னர் ஏற்கனவே ஊர்ப் பள்ளிவாயலின் முக்கிய பிரமுகர் குழுவாலுமோ மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் பலனளிக்கவில்லை.

"காதியார்!... என்ர புள்ளயள் ரெண்டையும் எனக்கிட்டயே தரவேணும். அவ என்னை வேணாங்கிறபடியால புள்ளயள என்னோட வெச்சி ஒழுக்கமா நான்தான் வளர்க்க வேணும்..." அதுவரை அமைதியாக நின்ற சமீம் பேசினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீனாவை நோக்கிய காதியார் பேசினார். "என்னகா... புள்ளயள மாப்பிள்ளைக்கிட்ட குடுக்க விரும்பமாகா?... மாப்பிள்ள ஒரு குத்தமும் குறையும் செய்யாம நீ அவரை வேண்டாம் எண்டு சொன்னா பிள்ளையள அவருக்கிட்டத்தான் ஒப்படைக்கோணும்..."

காதி நீதிமன்றத் தீர்பை ஏற்றுக்கொண்ட சமீனா, தான் பெற்றெடுத்த குழந்தைச் செல்வங்கள் இரண்டையும் சமீமிடம் ஒப்படைத்துவிட்டு சவூதி செல்லும் குறிக்கோளோடு அந்நீதிமன்றதை விட்டுத் தன் பெற்றோருடன் வெளியேறிக் கொண்டிருந்தாள்.

அவள் பெற்றெடுத்த பிள்ளைகளும், கட்டிய கணவனும் மாத்திரமல்ல அந்த நீதிமன்றிலே குழுமியிருந்த அனைவருமே அவள் போவதை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

*(தினகரன் வாரமஞ்சரி-1995.08.20)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிம்பங்கள்

"என்ன பேரன் ...? பிள்ள குட்டிகளோட விடியக்குள்ளயே எங்க போகப்போறாய் ...?"

வீட்டின் கதவுகளைப் பூட்டி றோட்டுக்கு இறங்கியதும் எதிர்ப்பட்ட முதலாமவரது கேள்விக்கு விடை கொடுத்துவிட்டு முன்னேற முற்பட்ட அமீனை அவரது அடுத்த வினா தடுத்தது.

"போயும் போயும் அந்தத் தமிழன்ர ஊருக்கு என்னத்துக்குப் போகப் போறாய்? இயக்கப் பொடியனுகளெல்லாம் நெறஞ்சி கிடக்கானுகளாம்... யோசிச்சுப் போ... அதுகும் புள்ள குட்டிகளோட போறாய்..."

அவர் மட்டுமல்ல அமீனும் கூட அவனது நண்பர் இறந்து விட்ட செய்தியைக் கேள்விப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பத்துநாட்களாக இப்படித்தான் நினைத்தான். அமீனும் அவனது மனைவி மக்களும் அறிந்தோ, வேண்டு மென்றோ யாருக்கும் எந்தத் துன்பமோ வஞ்சனையோ செய்யவில்லை. 'இறைவன் எம்மைக் கட்டாயம் பிரச்சனைகளுக்குள்ளாக்கமாட்டான். போன தடவை ஒரு ஊருக்கு 'எலக்ஷன் டியூட்டி' யாகப் போய் "நீ நம்மட ஆளா இருந்தும் இருநூறு ஓட்டுக்களப் போட உடாமாக்கிப்போட்டேயடா..." என்று கறுவிக் கொண்டு தன்னை வளைத்து நின்ற ஆட்களிடமிருந்து காப்பாற்றிய மாதிரி அப்படி ஏதும் பிரச்சினைகள் வந்தாலும் அந்த இறைவன் காப்பாற்றுவான்' என்ற நம்பிக்கையோடு 'பஸ் ஹோல்ட்' டை நோக்கி நடையைக் கட்டினான் மனைவி மக்களோடு.

சன நெரிசலோடு நகரை நோக்கி வந்த பஸ்ஸில் ஒரு மாதிரியாக அவர்களை உள்ளே நுழைத்துக் கொண்டார்கள். நெற்றியில் திருநீறு தீட்டி வேஷ்டியணிந்திருந்த ஒருவரும், கட்டைக் 'கவுண்' அணிந்து 'டியூஷனுக்குப் போகும் இன்னொரு பெண் பிள்ளையும் அவர்களது மகன்களை வாங்கி மடியில் வைத்துக் கொண்டனர்.

கண்டியில் அமீன் உத்தியோகம் பார்க்கும் போது ஒரு நாள் அம்பாறை நோக்கி வந்த பஸ்ஸில் தான் அவரும் பிரயாணித்தார். ஒரே பஸ்ஸில் அருகருகே இருந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அவரோடு வந்த நண்பனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமீனை அவன் எந்த ஊர் என்று அறிமுகம் செய்துவிட்டு 'எக்ஸ்கியூஸ் மீ பிறதர்... உங்கட பெயர் என்ன?... மறந்திட்டன்...' என்று கேட்டார். எதிர்பாராத அவர்களது இந்தச் சந்திப்பு அவருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கும். அதனால்தான் இப்படித் தடுமாறுகிறார் என்று அமீன் நினைத்துக் கொண்டாலும் அவனது இதயம் வெப்பு சாரத்தால் வெடித்துவிடும் போல இருந்தது.

அப்போது அமீன் தமிழ் 'டைப்பிஸ்'டாக வேலை பார்த்தான். ஒரு நாள் இரவு ஏழு மணியளவில் வீட்டின் அழைப்பு மணி ஒலிக்கும் சத்தம் கேட்டு கதவைத் திறந்தான்.

அவர்தான் நின்று கொண்டிருந்தார். ஒரு கையில் 'எக்ஸ்ஸிகியூட்டிவ்' பேக்கும், மறு கையில் ஒரு தயிர்ச் சட்டியுமாக நின்று கொண்டிருந்தார். அம்பாறையிலிருந்து காலையில் புறப்பட்ட பயணம் இப்போதான் வருவதாகக் கூறினார்.

"வாங்க... உள்ளுக்கு வந்து உட்காருங்க..."

வீட்டின் முகட்டிலும் சுற்றும் முற்றும் தன் கண்களைச் சுழல விட்ட அவர் கேட்டார் "இது 'ரென்ட்'டுக்கு இருக்கிற வீடுதானே?..."

"ஓம்..."

"எவ்வளவு வாடகை குடுக்கிறயள்...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருநூற்றைம்பது ரூபா..."

"உஸ்ஸ்ஸ்..." சூள் கொட்டிக் கொண்டு "ரூமச்..." என்றார்.

"இதைவிடக் குறைந்த வாடகையில் இப்படியொரு வசதியான வீடு பிடித்துத் தர உன்னால் முடியுமா?" என்று கேட்க வேண்டும் போல் அமீனுக்கு தோன்றியது.

"நீங்களும் உங்கட மிஸிசும் ஒரே வாசிட்டியிலயா படிச்சயள்?..."

"ஓம்..." அமீனின் பதிலின் தொனி வெறுப்பைக் காட்டத்தொடங்கியது.

"நீங்க கிறஜுவேட் பண்ணியது எப்ப?..."

"செவண்டி எய்ட்டில..."

"அப்போ ஏன் இவ்வளவு காலமாக வேற ஜொப்புக்குட்ரை பண்ணாம தமிழ் டைப்பிஸ்ட்டாகவே இருக்கிறயள்...?"

அமீனுக்கு அவர் வந்திருக்கும் விஷயம் இப்போ புரியத்தொடங்கியது. இது போலத்தான் அமீனிடம் முன்பு எத்தனையோ பேர் உதவிகேட்டு அலுவலகத்துக்கு வந்து, அவனோடு அனுதாபம் மாதிரிக் காட்டி உதவி கோரியபோது அமீன் அவ்வளவு முட்டாளாக வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர் வந்திருப்பது தனது வீடு என்பதை நினைத்து பொறுமையை வரவழைத்துக் கொண்டான்.

"நான் என்ன உத்தியோகத்துக்கு ட்ரை பண்ணாமலா இருக்கேன். நம்மட பக்கத்து சில எம்.பி.மாரும் மினிஸ்டர்மாரும் உத்தியோகம் குடுக்கிறத்த ஒரு பிஸினஸ்ஸாவே செய்யுறாங்களே. அரசாங்க கிளார்க் வேலைக்கு இருபதாயிரம் ... பேங் கிளார்க்குக்கு நாப்பதாயிரம்... கிறஜுவேட் குவாலிபிகேசனுக்குரிய ஜொப்புக்கு ஐம்பதாயிரம்... எனக்கிட்ட ஏது இவ்வளவு பெரிய தொகை... இருந்தால் கூட குடுக்கமாட்டன். குடுக்கிறதுக்கு இருக்கிறாங்களே சில வசதிக்காரப் பொடியனுகள். காசைக் குடுத்து குதிரையோடி சோதினை பாஸ் பண்ணிக்கிட்டு, காசைக் குடுத்தே காசோட புளங்குற பேங்க் உத்தியோகமும் எடுத்துக்கிட்டு... கலியாணம் முடிக்கக்குள்ள அவங்க எம். பீ.க்கும் தம்பீக்கும் குடுத்த அவ்வளவையும் பொண்ணுட வாப்பாவுக்கிட்ட சீதனமாகக் கறந்து போடுறதுக்கு...?"

சொல்லிவிட்டு வந்திருந்த அவரைப் பற்றி விசாரிக்கத்தொடங்கினான் அமீன்.

"நான் அக்கரைதானே..."

"பிறகு வந்த விஷயம் என்ன?..."

"நம்மட டிப்பார்ட்மெண்டில நாளையண்டைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கப் போற புறமோஷன் எக்ஸாம் நானும் எடுக்கப்போறன், கட்டாயம் நீங்க எனக்கு ஹெல்ப் பண்ணோணும்..."

"ப்ளீஸ்... அதமட்டும் எனக்கிட்ட கேக்காதைங்க... சோதினையெண்டா சோதினையாகவே இருக்கவேணும்..."

"இந்த எக்சாமுக்கு முந்தின ரெண்டு எக்சாமும் நான் ட்ரை போட்டன். பாஸாக ஏலாமப் போச்சுது. கொம்பிட்டிசன் எக்ஸாம் தானே... சிங்கள ஆக்கள்தான் பாஸாகுறாங்க. சிங்கள டைப்பிஸ்ட் கேள்விகளை சோதினைக்கு முந்தியே அவுட்டாக்கிறாள். இனி நாங்க எப்படிப் பாஸாகுற... தமிழ் மீடியம் ஆக்களே எடுபடுறாங்களில்லை."

அமீனோடு 'கொன்பிடென்சியல்' 'றூம்' மில் எதிர் மேசையில் இருந்து கொண்டு வேகமாக 'டைப்' அடித்து முடிக்க வேண்டிய வினாப்பத்திரங்களை தனது பெரிய கண்களை உருட்டி உருட்டி வினாக்களை மனனஞ் செய்து 'டைப்' செய்யும் சிங்கள 'டைப்பிஸ்ட்' சுமணா அவன் மனக்கண் முன்னால் வந்து நின்றாள்.

அவரது வேண்டுகோள் ஒரு வகையில் நியாயமாக அமீனுக்குப் பட்டதால் அவன் செய்யப் போகும் செயலுக்கு மனச்சாட்சியிடம் ஆதரவு பெற்றுக் கொண்டான். வினாக்களை நினைவுபடுத்தி அவருக்கு எழுதிக் கொடுத்துவிட்டு 'அவரை வெளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பினால்... எனது தொழிலுக்கே அது சிரமங்களை ஏற்படுத்தலாம்...' இப்படி நினைத்து பரீட்சை நடக்கவிருந்த நாள் வரை அவரை அவனது வீட்டில் தங்க வைத்து, உணவு கொடுத்து... இப்படி அவனால் உதவி பெற்றவர்தான் இவர்

அந்த முறை பரீட்சையில் சித்தியடைந்து 'புரோமோஷன்' பெற்ற பிறகு இப்போ சந்திக்கும் போது உதவி செய்த அமீனுடைய பெயரை அவர் மறந்துவிட்டாராம். ஆனால் அவரது பெயர் முகம்மது சாபி என்பது அமீனுக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது.

'எக்ஸ்கியூஸ்மீயாம்' அவரை அமீன் எப்படி மன்னிப்பது.

இதைவிடவெல்லாம் சின்ன ஒரு உதவியைத்தான் அந்த செல்வராசாவுக்கு அமீன் செய்தான். எவ்வளவு நன்றி மறவாது நடந்து கொண்டார்.

அப்படி நன்றி மறவாத ஒருவர் இறந்ததற்காக அனுதாபம் தெரிவிக்கத்தான் அமீன் மனைவி, மக்களோடு போய்க்கொண்டிக்கின்றான்.

பஸ்ஸிலிருந்து இறங்கி அவனது நண்பன் செல்வராசாவின் வீட்டை விசாரித்துவிட்டு சென்று கொண்டிருந்தனர்.

"டேய்... சோனிர மகனே... இஞ்ச வாடா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிழவியின் அதட்டல் குரல் கேட்டு அமீனின் மனதுக்குள் திக்கென்றது.

அவனது மனைவி அவனது முகத்தை ஒரு வகைப் பீதியுடன் பார்த்தாள்.

சில முஸ்லீம் வீடுகளிலும் முரண்டு பிடித்துக் கொண்டு நிற்கும் பிள்ளைகளைப் பார்த்து அவ்வீடுகளிலுள்ள வயோதிபப் பெண்கள் "டேய்... தமிழன்ர மகனே... இஞ்ச வாடா..." என்று கூப்பிடுவது நினைவுக்கு வந்தது.

"அது யாரோ அவங்கட சொல்லுக் கேக்காத பிள்ளையளக் கூப்பிடுறாங்க..." சொல்லிக்கொண்டு நண்பர் செல்வராசாவின் வீட்டைத்தேடி அந்தப் பெண்-வழி சொன்னபெண்-காட்டிய வழியால் போய்க் கொண்டிருந்தனர்.

மூக்கைச் சிந்தியவாறு, கண்களில் கலங்கிய நீரைத் துடைத்துக் கொண்டு செல்வராசாவின் மனைவி தனது கணவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதிலிருந்து அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சேர்த்து உயிர்பிரிந்தது வரை விபரித்து மீண்டும் கண்ணீருக்குள் புகுந்து கொண்டாள்.

அமீனின் மனைவியின் கண்களும் கலங்கிவிட்டதைப் பார்த்து அவர்களது பிள்ளைகளும் மலைத்துப் போய் நின்று கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களையும், உங்களோட வேலை செய்யிற சத்தாரையும் அண்டக்கி ஓபீசில இருந்து வீட்ட போகக்குள்ள பஸ்ஸிலயிருந்து இறக்கி எடுத்ததா ஒரு வதந்தி வந்துச்சு..."

"அருணாசலமும் எங்களுக்கிட்ட அடுத்த நாளே விசாரிச்சார்... அண்டக்கி ஏதோ கல்முனையில முஸ்லிம் - தமிழ் பிரச்சினையெண்டு கொஞ்சம் பதட்டமாத்தான் இருந்துச்சு, ஆனா... அப்படி ஏதும் யாருக்கும் நடக்கவில்லை..."

"எங்கட அவரும் அண்டு உங்கட பெயரைக் கேட்டதும் அங்க... இஞ்ச எண்டு பதறித் திரிஞ்சி விசாரிச்சார்... ஆனா அப்படி யொண்டும் இல்லயென்று தெரிஞ்சுக்கிட்டுத்தான் உங்களப்பத்தி யெல்லாம் - கண்டியில இருக்கக்குள்ள கலவரத்தில நீங்க செஞ்ச உதவிகளையெல்லாம் கதச்சார்..." சொல்லிவிட்டு மீண்டும் கண் கலங்கினாள்.

அவர்கள் தாமதிப்பது அவளது வேதனையை அதிகரிப்பதாக அறிந்து புறப்பட ஆயத்தமாகினர்.

"நானும் அம்மாவும்தான் இப்போது இருக்கோம்... சொந்தமெண்டு சொல்ல இருந்த அவரும் போயிட்டார். எங்கட சமூகத்தில முந்தியே என்னை ஒரு மாதிரித்தான் பார்த்தாங்க... அவரும் செத்த பிறகு இன்னம் மோசமாத்தான் பாப்பாங்க... எப்பிடியோ நானும் அம்மாவும் வேற எங்கையாவது ஒருநாட்டுக்கு போகத்தான் பார்க்க வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு ஏதும் வழி தெரிஞ்சால் விசாரித்துப் பாருங்க..." சொல்லியவாறு அவர்களை வழியனுப்பிவைக்க 'ஹோல்ட்' வரை தனது அம்மாவை அனுப்பி வைத்தாள்.

பஸ் வண்டி நிறுத்தும் சந்தியை நோக்கி பெண்கள் சாரி சாரியாக சென்று கொண்டிருந்தனர். அந்த றோட்டுக்கு அவர்களும் ஏறியதும் "கவனமாப் போய் வாங்க மக்காள்..." என்று கண்ணீரோடு விடைபெற்று அவர்களது மகன்களின் உள்ளங் கைகளை முகர்ந்து விட்டு, கையோடு கொண்டு வந்த மாம்பழங்கள் நிறைந்த கடுதாசி 'பேக்' ஒன்றையும் அவர்களின் கையில் கொடுத்துவிட்டு விடை பெற்றுக் கொண்டாள் அமீனின் நண்பனுடைய மனைவியின் தாயார்.

"ஆரு பிள்ளே அது... அம்மாவா?..." வந்த பெண்களில் ஒருத்தி அவர்களோடு இணைந்து கொண்டாள்.

"இல்லை... எங்களுக்கு தெரிஞ்சவங்கதான்... அவட மருமகன் அண்டக்கி செத்துப் போனார். நாங்க பிறகுதான் கேள்விப்பட்டம். பார்த்துட்டுப் போக வந்தம்...

"என்ர பொடியன் இஞ்ச கேம்பிலதான் இரிக்கான். மொதல் மொதல் பிடிச்சதிலதான் என்ர மகனும் அகப்பட்டவன். இப்ப றெயினிங் குடுக்காங்க. ஒரு கிளமைக்கொருக்கா காட்டுவாங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம என்ன கிட்டடியா வந்து பாக்க... போன மாசம் வந்து பாத்துட்டுப் போனன்... அதுக்கு இப்பதான் வந்திருக்கன்..." பேசிக்கொண்டே பஸ் நிறுத்தும் சந்திக்கு வந்துவிட்டனர். ஆங்காங்கே நிழல் தந்துகொண்டிருந்த வம்மி மரங்களில் ஒன்றின் கீழே அவர்களும் அமர்ந்து கொண்டனர்.

இந்திய இராணுவ அதிகாரிகளைச் சுமந்த ஜீப் வண்டியொன்று புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றது.

"இவங்கதான் றெயினிங் குடுக்காங்க... எப்பதான் என்ர மகனை உடுவாங்களோ தெரியாது..." என்றவாறு அந்தப் பெண் அவர்களின் ஒன்பது வயதும், நான்கு வயதும் நிறைந்த மகன்களைப் பார்த்து "நீங்கல்லாம் கொஞ்சக் காலத்துக்கு தலைப்பட்டுறாதயுங்க மக்காள்..." என்று சொல்லிக் கொண்டாள்.

"அந்த மனுசிக்குக் காய்ச்சலாம். அவட மகனையும் பிடிச்சு வந்திருக்காங்க... பார்த்துட்டு வாறாவாம்..." மரத்தடியில் படுத்திருந்த ஒரு மனுஷியைக் காட்டி இன்னொரு பெண்தான் பேசினாள்.

அப்போது தண்ணீர் நிரப்பிய 'பவுசர்' ஒன்று வந்து கொண்டிருந்தது. அதன் மேல் சில பையன்கள் நின்று கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தா அங்காலப் பக்க தொங்கல்ல நிண்டு வாறதுதான் பிள்ள என்ர மகன்... அன்னா வாறான்... கேம்புக்குத்தான் தண்ணி எடுத்துக்குப் போகினம்..." என்று ஆவலோடு அவர்களுக்குக் காண்பித்துவிட்டு ஓடிச்சென்று மகனோடு ஏதோ கதைத்தாள் அவர்களோடு உரையாடிக் கொண்டு நின்ற அந்தப் பெண்.

தண்ணீர் 'பவுசர்' அவ்விடத்திலே நின்றது. தாகத்தோடு பஸ்சுக்காகக் காத்திருந்தவர்களில் சிலர் தம் கையிலிருந்த பாத்திரங்களைக் கொடுத்து தண்ணீர் வாங்கிக் குடித்தனர்.

தண்ணீர் 'பவுசர்' புறப்பட்டதும் தனது மகனுக்கு கையசைத்து விடை கொடுத்த அந்தப் பெண், வந்த சலிப்பை அடக்கிக் கொண்டு அவர்களண்டை வந்து சேர்ந்து கொண்டாள்.

"உம்மா... தண்ணி விடாய்க்குது..." அவர்களது மூத்த மகன்.

"நீங்க முஸ்லிம் ஆக்களா பிள்ளை... எவ்வளவு ஒத்துமையா இருந்த சனம் நாம. இப்ப சில சில்லறையள்ள அலுவல்களால நாம முகத்துக்கு முகம் பாக்க ஏலாமப் போச்சு..."

மனவருத்தப்பட்டுக் கொண்டே 'பவுசரில்' இருந்து போத்தலுக்குள் வாங்கிவந்த தண்ணீரில் கோப்பையொன்றுக்குள் சொற்பத்தை வார்த்துக் கொடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமீனின் மகன் தண்ணீரின் நிறத்தைப் பார்த்து முகத்தைச் சுளித்தான்.

"தாயப் பழிச்சாலும் தண்ணியப் பழிக்கப்பொடாதாம்... குடி மனே..." அந்த மனுசியின் புத்திமதி அவனது மகனை தண்ணீர் குடிக்க வைத்தது.

"நேரமென்ன புள்ளை?..." அமீனுடைய மனைவியிடம்தான் கேட்டாள்...

கடந்த மாதம் பழுதாகிய அந்தக் கைக்கடிகாரத்தை தன்கையில் கட்டியிருந்ததால் அமீனின் மனைவி அவனது முகத்தைப் பார்த்துப் பரிதாபகரமாகச் சிரித்தாள். அங்கு பஸ்சுக்காகக் காத்திருந்த சனக்கூட்டத்துக்குள் அவளின் கையில் மாத்திரம்தான் கடிகாரம் இருப்பது தெரிந்தது.

"அது ஓடுதில்ல அம்மா... நாங்க இவடத்துக்கு வரக்குள்ள பன்னிரண்டரை. இப்ப எப்பிடியும் ரெண்டரை மணியிருக்கும்..." தனது குறிப்பைச் சொன்னான்.

"போன முறையும் இப்பிடித்தான்... மகனப் பார்க்க வந்து... போக பஸ் கெடைக்காம நிண்டுதான் போன மனே...

முன்பு சில தடவைகள் பஸ் இல்லாததால் தங்கி நின்று போன வேறு சிலரதும் அனுபவத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதும் அந்தக் கிராமத்தில் அமீன் மனைவி மக்களோடு தங்கி நிற்கவேண்டி வந்தால்... என்பதை நினைத்த போது இருபது கிலோ மீட்டர் தூரத்தையும் நடந்தாவது வீடு போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

"நடந்து போவமா அம்மா..." அந்த மனுஷியைப் பார்த்துக் கேட்டான்.

எப்படி மனே நடக்கிற... எப்பிடியும் ஒரு பஸ் வரும். பாப்பம்."

அவர்கள் போகவேண்டிய திசைக்கு எதிர்த் திசைகளில் உள்ள இடங்களுக்குப் போகும் பஸ் வண்டியொன்று வந்து அவ்விடத்தில் திருப்பிய போது அதில் போக வேண்டியவர்கள் குவிந்தனர்.

"ஒத்தரும் ஏறப்போடாது... நாங்க இப்ப போகமாட்டம். துறையடிக்குப் போய் சாப்பிட்டுத் தான் வருவம்..."

அரசாங்க பஸ் ஊழியன் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தினான் அதன் 'கண்டக்டர்'.

அவர்கள் போகவேண்டிய திசையை நோக்கி 'ட்ரெயிலர்' பூட்டிய உழவு இயந்திரம் ஒன்று வந்தது. சனங்கள் அதை நிறுத்தும் படி சைகை செய்யாமலேயே அதை ஓட்டி வந்தவன் நிறுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சவளக்கடை வரையும் கொண்டு போய் உடுவன். விருப்பமான ஆக்கள் ஏறுங்க...”

சனங்கள் விழுந்தடித்துக் கொண்டு ஏறினர். மகன்மாரை முதலில் தூக்கி உள்ளே வைத்துவிட்டு, மனைவியையும் ஒருவாறாக உள்ளே ஏற்றிவிட்டு, அமீனும் ஏறிக்கொண்டான்.

பன்னிரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருந்த சவளக்கடை சந்திக்கு வந்ததும் அந்த ‘ட்ரெக்டர்’ திரும்பிச் செல்ல வேண்டிய இடம் வந்தது.

‘ட்ரெயிலர்’ பெட்டியின் மூன்று புறங்களாலும் குதித்தும், மெதுவாயும் இறங்கிப் பிரியத் தொடங்கினர்.

“என்ன... எல்லாரும் காசு குடுக்காமப் போற...” மனச்சாட்சியுள்ள ஒருவர் சப்தமிட்டார்.

“காசு வாணாம் போங்க... போங்க...” ‘ட்ரெக்டரை’ச் செலுத்தி வந்த அந்த தொழிலாள ‘ட்ரைவர்’ கௌரவமாகச் சொன்னான்.

“பார்த்தீங்களா... தலைக்கு மூணு ரூபா வாங்கியிருந்தாலும் நூறு ரூபாக்கு மேல ஆளுக்குக் கெடச்சிருக்கும். அவன் ஒரு முதலாளியெண்டா கட்டாயம் காசு எடுத்திருப்பான்...” தன் மனைவியிடம் மெதுவாகச் சொன்ன அமீன்; “பெரிய உதவி அண்ணே... உங்கட ட்ரெக்டர் இல்லாட்டி கஷ்டப்

பட்டிருப்போம்." நன்றியை இப்படிச் சொல்லித் தெரிவித்துக் கொண்ட போது அமீனுக்கு நூர் முகம்மது முதலாளி ஞாபகம் வந்தது.

அலுவலகத்திலிருந்து ஒரு நாள் வீடு திரும்பும் போது அன்று வாகனத் தட்டுப்பாடான போதுதான் சீமேந்து 'பக்கெட்'டுக்களை இறக்கிவிட்டு அவரது வீடு திரும்பிக் கொண்டிருந்த லொறி கைகொடுத்தது. ஐம்பது பிரயாணிகள் மட்டில் அந்த லொறியில் ஏறிக் கொண்டனர்.

லொறியின் முன்புறமாயிருந்த இரண்டே கால் சதுர அடிகொண்ட கதவின் வழியாக பின்னால் நுழைந்து வந்து காசு சேர்த்தெடுத்த விதம் ஞாபகம் வந்தது.

அமீன் பயணிக்க வேண்டியிருந்த மிகுதி எட்டு கிலோ மீட்டருக்காக வேறு ஒரு இடத்திலிருந்து வரவேண்டிய பஸ்ஸைப் பார்த்துக் காத்திருந்த போது அவர்களைக் கடந்து அழகிய காரொன்று புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றது.

"கண்டியில் நாம இருக்கும் போது அவர்ட ஈ.பீ.எக்சாமுக்கு முதல் நாள் என்னிடம் கேள்வி வாங்கி எழுதிப் பாஸ் பண்ணிக் கொண்ட அப்துல் தான் அது..." தன்னை நன்றாக அவதானித்தும் காரின் பின்னால் இருந்த இடத்தில் ஏற்றி ஒரு 'லிஃப்ட்' கொடுக்க மனதில் இடமில்லாமல் சென்ற இன்னொருவரை தன் மனைவிக்கு நினைவுபடுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த அமீனுக்கு, தொலைவில் வந்து கொண்டிருந்த போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டியை காண்பித்தாள் அவர்களோடு நின்ற மனுஷி.

**(1990 அரச இலக்கிய விழாவை முன்னிட்டு சமூக, கலாச்சார அமைச்சு, கலாச்சாரத் திணைக்களம் ஆகியவற்றினால் தேசிய செய்திப் பத்திரிகைகளின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பகிரங்க சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியேற்றம்

சரிபுத்தம்பிக்கு வெள்ளிக்கிழமைதான் லீவு நாள். அன்று நெசவுக்குப் போகவில்லை. கிணற்றடிக்குப் பக்கத்தில் இருந்த வேலி இற்றுப் போயிருந்தது. தன் குமர் மக்கள் குளிக்கும் போது, இற்றுப் போயிருந்த வேலியில் ஏற்பட்டிருக்கும் ஓட்டைகளுக்குள்ளால் கள்ளமாகப் பார்க்கும் பக்கத்து வீட்டுப் பையனின் விரசப் பார்வையிலிருந்து அவர்களைத் தப்பவைக்கும் முயற்சியாக வேலியில் இருந்த அந்த ஓட்டைகளைத் தென்னங் கிடுகுத் துண்டுகளால் அடைத்துக் கொண்டிருந்தார்.

" ஓ... வேலியக் கட்டி கட்டி இரியுங்க, சனம் கல்லூடும் கல் மதிலும் கட்டுது. நீங்க என்னடா எண்டா...?"

வீட்டுத் திண்ணையில் போட்டிருந்த கற்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயைத் தட்டி, சுருட்டியவளாகப் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தாள் பாத்தும்மா பீவீ.

"ஓ... விடியக்குள்ளயே வந்திருந்து அவ்வாக்குட்டி ஒனக்கு வைன் ஏத்திப் போட்டுப் போறா... உம்மாவுக்கு இனி அது போதும் இன்டையப் பாட்டுக்கு..." பேசிக்கொண்டே தனக்கு ஆதரவு தேடியவராக மூத்த மகளைக் குனிந்து பார்த்தார் சரிபுத் தம்பி.

குனிந்த தலை நிமிராமல் அவள் கைராட்டினத்தில் தார் சுற்றிக் கொண்டிருந்தாள்.

"வெளியே போற கொமருகள் ஒரு மாத்தக்கி மூவாயிரத்துக்கு கொறையாம ஒளக்கிதுகள். நம்மட பிள்ளையள் முக்கி முக்கி ஒரு நாளைக்கு அஞ்சி புடிநூல் சுத்தினாலும் மாதம் முன்னூறு ரூபாவக் காண ஏலா..."

"நம்மட ஊரில உள்ள தொழில்தான் நமக்கும் நம்மட புள்ளயளுக்கும். இதுகும் இல்லாமலுக்கு மத்த ஊருகள்ள உள்ள பிள்ளையள் எவ்வளவு கஷ்டப்படுகுதுகள். வேகா வெயிலுக்குள்ள, வயல் வரப்புக்குள்ள கஷ்டப்பட்டு... இது நாம எணலுக்குள்ள இருந்துக்கு ஒளக்கதுதானே..." சரிபுத் தம்பி.

"இப்பிடிச் செல்லிச் செல்லி இருந்தா நாம பிச்சக்காரன் பிச்சக்காரனாத்தான் இரிக்க வேண்டி வரும். ரெண்டு கொமருகள் ஊட்டுக்க இரிக்கி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிக்கிற வளவ ரெண்டாப் பிரிச்சுக் குடுக்க எண்டாலும் ரெண்டு ஊட்டுக்குஞசக் கட்டினாத்தானே நம்மட கொமருகள ரெண்டு பொடியனுகள்ள கையில புடிச்சுக் குடுக்கலாம்...

வேலியின் ஓட்டைகளை ஒரு மாதிரியாக அடைத்து முடித்துவிட்டு நூல் சுற்றிக் கொண்டிருந்த மூத்த மகளுக்குப் பக்கத்தில் வந்து கால்களை வெளியே நீட்டியவாறு திண்ணைக்கட்டின் ஓரத்தில் இருந்து கொண்ட சரிபுத் தம்பிக்கு, மனைவி பொரிந்து தள்ளிய வார்த்தைகள் யோசிக்கத் தூண்டின.

'நாமளும் பதினஞ்சி வயசில இருந்து நெய்யிறந்தான், இந்த நாப்பது நாப்பத்தஞ்சி வருசமும் உழைச்சதும் தின்னத்தான். போதுமா இருந்திச்சி, வருசத்தில வாற பெருநாளுகளில ஒரு பெருநாளைக்காவது ஒழுங்கா உடுபிடவை வாங்கி உடுக்கக் கூட ஏலாத ஒழைப்புத்தானே நம்மட ஒழைப்பு.'

'பத்து ரூபாவா ஒரு சாறன் இருந்த கொஞ்சக் காலத்துக்கு முந்தித்தான். இப்ப அதே சாறன் எண்பது ரூபாவுக்கு விக்கிது. சாறத்திட வெலை எட்டுப்பங்கு கூடினாலும் நெய்யிற கூலி நாலு பங்கும் கூடல்ல. சாறண்ட வெலையும் வாழ்க்கைச் செலவும் கூடின அளவுக்கு நம்மட கூலி கூடல்லையே.'

'நூல் சுத்துற ஆக்கள்ளபாடு அதவிட மோசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு கஷ்டப்பட்டாலும் ஒரு நாளைக்கி அஞ்சிபுடி நூலுக்கு மேல சுத்த ஏலாது. அஞ்சி புடி நூல் சுத்தினா பத்து ரூவாக் கிடைக்கும். ஒரு பொம்புளப்புள்ளர ஒரு நாளய ஒழைப்பு தோட்டக் காட்டில கொழுந்து பறிக்க பொம்புளயள்ள ஒரு நாளய கூலிக்கும் எளப்புத்தான் நூல் சுத்துகத்துக்கு கெடைக்க கூலி.'

'நாம அறிஞ்ச காலத்திலயிருந்து தறி போட்டு நடத்துற மொதலாளிமாரும், சாறம் வாங்கி விக்கிற மொதலாளிமாரும் நட்டம்... நட்டம்... தொழில் செய்ய ஏலா எண்டுதான் செல்லுறாங்க. ஆனா... அவங்கதான் நகையும் நட்டும் வளவும் வாய்க்காலும் காரும் லொறியும் வாங்கிப் போடுறாங்க. நட்டமெண்டா இதுக்கெல்லாம் காசி பணம் எங்கிருந்து வருகுது... நம்மளப் போல ஆக்கள ஏமாத்தித்தான் எல்லாரும் பணக்காரனா ஆகுறானுகள்...'

உட்கார்ந்த வண்ணம் இடப்பக்கப் பெரு விரலுக்கும் சுட்டு விரலுக்குமிடையில் குஞ்சத்தில் இருந்து வரும் நூலை நிதானமாகப் பிடித்த வண்ணம் வலக் கையால் இராட்டினத்தைச் சுற்றியவாறு ஒருவகை ஆட்டத்துடன் தார் சுற்றிக் கொண்டிருந்த மூத்த மகளின் முகத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் சிந்தனையோடு இருந்த சரிபுத்தம்பி.

"வாப்பா... என்னை எப்படியெண்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுதிக்கு அனுப்பிருங்க வாப்பா, நான் உழைச்சிக்கிட்டு வாறன்..." அவர்களின் இளைய மகளுக்கு கொஞ்சம் தைரியந்தான்.

"ஒரு ஆளுக்கு போறதுக்கு ஆறாயிரம் எடுக்கானுகளாமே மகள்... இந்த சப் ஏஜன்சிக்காரனுகள். இத நான் எங்கால எடுப்பன் மகளே..."

"அதுக்குத்தானே வாப்பா வளவ சப்ஏஜன் சிக்காரனுக்கு எழுதிக் குடுத்திட்டு போய் மூளுறதுதானே வாப்பா..."

"ஆறாயிரம் ரூவாக்குப் பதிலா வளவை அறுதியா எழுதிக் குடுத்துட்டுப் போய் நாலு மாசத்தில பத்தாயிரம் ரூவாக் குடுத்து மூளவோணும் அதுகும் பறவாயில்லை. ஆனா... வேறமாரி ஏதும் நடந்துட்டெண்டா என்ன செய்யிற...?"

"வேற மாரி என்ன நடக்க ... இப்பிடிச் செல்லிச் செல்லிக் காலத்தக் கடத்தாம ஏதும் வழியப்பாருங்க..." கண்களை உருட்டி, உரத்த தொனியில் சொல்லியவாறு சேலை முந்தானையை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு கிணற்றடிப் பக்கம் போய்க் கொண்டிருந்தாள் பாத்தும்மா பீவீ.

துலாவில் இருந்த பத்திக்கையில் கட்டியிருந்த வாளியைப் பிடித்தவள் 'திலாக்காலும் இத்துக்கு வருகுது... என்னேரம் கெளியுமோ தெரியா. அதுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப ஆயிரம் ரூவாக்குக் கொறயாம வேணும்...' முணுமுணுத்துக் கொண்டாள்.

"என்ன நடக்க...? செயினப்புக்கு நடந்தது நமக்கும் நடந்தா என்ன செய்யிற? வளவ எழுதிக் குடுத்திட்டு பெரிய நெனப்போட எடுப்பா வெளிய போனா. அங்க வருத்தக்காரி எண்டு திருப்பியனுப்பிப் போட்டானுகள். இப்ப வளவும் அறுதியாப் போச்சி. வளவ உட்டு சப்ஏஜன்சிக்காரன் ஒழும்பச் சொன்னா இன்டக்கிம் எழும்பித்தான் ஆகோணும்...?"

"அள்ளா காப்பாத்துவான். நம்மட புள்ளையளுக்கு அப்பிடி எந்த நோயும் நொம்பலமும் வராது..." மக்களில் ஒன்றினையாவது 'ஹவுஸ் மெயிட்'டாக அனுப்பியே ஆகவேண்டும் என்ற பிடிவாதமாய் நின்றாள் பாத்தும்மா பீவீ.

"மக்கள அனுப்புறது எனக்கும் புறியம் இல்லாமலுக்கில்லை. நானும் ஆம்புளதான். என்ர சொல்லுக்கும் நீங்க கொஞ்சம் மதிப்பு வைக்கோணும். ஆறாயிரத்துக்கு நாலு மாதத்தில் வட்டியும் மொதலுமாச் சேத்து பத்தாயிரம் குடுக்கத்த ஒண்ட தம்பிக்கிட்ட ஆறாயிரத்த கடனா வாங்கி புள்ளயள்ள ஒண்ட மொதல் அனுப்புவம் எண்டுதானே நானும் சொல்லுகன்..." சரிபுத்தம்பியின் குரல் பரிதாபகரமாக ஒலித்தது.

தம்பியின் வீட்டில் பன்னிரெண்டு கைத்தறிகளும் இயங்கிக் கொண்டிருக்கும் 'கடக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடக்கடி... கடக்கடி புடக்கடி...' என்ற சப்தத்தையும் விஞ்சிக் கொண்டிருந்தது பாத்துமாபீவியின் இருதயத்தின் 'லப்டப்' ஓசை.

'சொந்தத் தம்பியின் வீடுதான். இருந்தாலும் அண்ணி எப்பிடியும் அந்நியள்தானே. கேட்கப்போகும் உதவியைத் தம்பி மறுத்தால் பிறகு தம்பியின் முகத்தை எப்பிடிப் பார்ப்பது...?' என்பதை நினைத்தபோது எத்தனையோ பேரிடம் கடன் வாங்கிவிட்டு அவற்றைத் தீர்க்காது தைரியமாகத் திரியும் சிலரின் போக்கு அவளுக்கு தைரியத்தை வரவழைத்துக் கொடுத்தது.

'நாம் என்ன இவரது கடனைத் தீர்காமலா இருப்போம். கேட்கும் பணத்தைத் தருவார். அல்லது காசு இல்லையென்று சொல்லுவார். அவ்வளவு தானே' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்ட பாத்தும்மா பீவி தனது தம்பியின் வருமானங்களையும் செல்வங்களையும் தனக்குள் மதிப்பிட்டுப் பார்த்தாள்.

பன்னிரெண்டு தறிகள். ஒரு தறியில் ஒரு நாளைக்குக் குறைந்தது நான்கு சாறங்கள் நெசவு செய்யப்படும். பன்னிரெண்டு தறிகளிலும் நாற்பத்தியெட்டு சாறங்கள் ஒரு நாளைய உற்பத்தி. ஒரு சாறனுக்கு குறைந்தது இருபது அல்லது பதினைந்து ரூபா தேறிய இலாபமாக கிடைக்கும். நாற்பத்தியெட்டு சாறம்களுக்கும் சராசரி எண்ணூறு ரூவா ஒரு நாளைய வருமானமாகக் கிடைக்கும். மாதத்தில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த இருபத்தைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களும் நெசவு நடைபெறும். நெசவுத் தொழிலால் மாத்திரம் தம்பியின் வருமானம் மாதம் இருபதினாயிரம் ரூபா.

ஒரு வருமான வரி அதிகாரியின் மதிப்பீட்டை விட சிறந்த நியாயமான ஒரு மதிப்பீட்டோடு 'கராஜ்'ஜில் நிறுத்தப்பட்டிருந்த லொறியைப் பார்த்தாள்.

'ஏ.டபிள்யு.எம். றிஹான் ஹாஜியார்...'

பிறவுண் நிறப் பெயின்ற் அடித்த அந்த லொறியில் மஞ்சள் நிறத்தில் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டருந்த அவளது தம்பியின் பெயரை அவளோடு வந்த அவளின் சின்ன மகன் வாசித்தான்.

றிஹான் ஹாஜியார் என்றால் ஊரிலுள்ள குறிப்பிடத்தக்க தனவந்தர்களில் ஒருவர் என்பது அந்தப் பிரதேசத்திலுள்ள அனைவருக்குமே தெரிந்த விஷயம்.

"தம்பி... நான் ஒரு முக்கியமான விஷயமாகத்தான் வந்த. கேக்கிறன் எண்டு கோவிச்சுக்காத. என்ர புள்ளயள்ள ஒண்ட வெளியில அனுப்பப் போறன். வளவ அறுதியா எழுதிக் குடுக்கிறதெண்டா பத்தாயிரத்துக்கு எழுதிக் குடுத்தா சப்ஏஜன்சிக்காரனுகள் அனுப்புறானுகள். காசாக் குடுத்தா ஆறாயிரம் போதும். நாலு மாதத் தவணைக்கு நாலாயிரம் ரூபா வட்டியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டோணுமே. நீங்க ஒரு ஆறாயிரம் இந்தக் கொமருகள்ள பேரால கடனாகத் தந்தா மகள் போய் ரெண்டு மாத்திலேயே திருப்பித் தந்துருவம். மச்சானும் கேட்டுப் பாக்கச் சொன்னார்..."

அமர்ந்திருந்த பாய்த் தொங்கலின் பின்புறமாக நீட்டிக் கொண்டிருந்த பன் சிலும்பல்களைத் தன் வலக்கை விரல்களால் தடவியவாறு கேட்ட பாத்திமா பீவியின் தலை வெட்கத்தால் குனிந்திருந்தது.

றிஹான் ஹாஜியாரிடமிருந்து ஓர் அலட்சியமான சிரிப்பு உதிர்ந்தது.

"ஆறாயிரம் ரூபா நான் எங்க எடுக்க... நெசவெல்லாம் இப்ப நல்லாச் சவுத்துப் போச்சி. லொறியும் இப்ப முந்தி மாதிரி ஓடஏலா... கடத்துறதும் காசு கேக்கதுமா இரிக்கி. இப்ப காசி ஒரு சதமும் இல்லத் தாத்தா... நம்மட பாடும் கஷ்டந்தான்..."

பாத்தும்மா பீவியால் இந்தப் பதிலை எதிர்கொள்ள முடியாவிட்டாலும், அது தன் தம்பியிடமிருந்து அவள் எதிர்பார்த்த பதில்தான்.

அவளது அண்ணியின்-றிஹான் ஹாஜியாரின் மனைவியின் முகத்தைப் பாத்துமா பீவி அண்ணாந்து பார்த்தபோது அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டது பாத்திமா பீவிக்கு என்னவோ போன்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு மூச்சொன்றுடன் பாத்தும்மா பீவி தன் வீட்டுக்கு நடையைக் கட்டினாள்.

சில வருடங்களுக்கு முன்னர் குடிசைகளாகவும் தட்டி வேலிகளாகவும் இருந்தவை கல் வீடுகளாகவும் மதில்களாகவும் ஆகிக் காட்சிதந்து கொண்டிருந்தமை பாத்தும்மா பீவியின் மனதுக்கு ஒரு தைரியத்தை வரவழைத்துக் கொடுத்தது. "அவர்களுக்கெல்லாம் என்னைப்போல் பணக்காரத் தம்பிமார் இருந்துதான் உதவினார்களா? இல்லையே..."

"இனம் சனம்... சொந்தக்காரன் பணக்காரன் எண்டு இருந்தா நமக்குச் சும்மா தராட்டியும் இப்பிடி ஒரு ஆவ தேவைக்கு கடன் தந்தாச்சும் ஒதவி செய்யோணும். நாம என்ன திருப்பிக் குடுத்துராமலா போவம். வேணுமெண்டா வீணில குடுக்கப் போற வட்டி நமக்கு மிஞ்சும். செரி... செரி... வளவ எழுதிக் குடுத்திட்டு எளயவள அனுப்புவம்..." சரிபுத் தம்பியின் மனதில் உரமேறியது.

'சப் ஏஜன்சி'க்காரனுக்குத் தனது வளவை அறுதியா எழுதிக் கொடுத்து விட்டு, மகள் உழைப்பதற்காக நாட்டை விட்டு வெளியேறப் போவதையும் அவள் அனுப்பப் போகும் பணத்தையும் கல்வீடு, மதில்களையும் நினைத்து ஏற்பட்ட பூரிப்பில் வீடுவந்த சரிபுத் தம்பிக்கு அவரது மனைவி பாத்தும்மா பீவியின் முகத்தில் பீதியின், கவலையின் சாயல் படிந்திருப்பது தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன ஒரு மாரியா இரிக்க...?”

“ஹாஜியார் தம்பிர ஊட்ட அப்பிடியே போய்ப் பாத்திட்டு வாங்க.”

“இந்தப் பட்ட பகலயில அதென்ன கதை..?”

‘ஆயுதங்களோட ஒரு பத்துப் பதினஞ்சி பேர் வேனொன்டில வந்து றிஹான் ஹாஜியார் ஊடு எது எண்டு கேட்டு வந்து கொஞ்சப் பேர் ஊட்ட வளச்சி சுத்தி நிண்டானுகளாம். மூணு பேர் உள்ளுக்குப் போய் துவக்குகளக் காட்டி அம்பதாயிரம் ரூபா வாங்கிக்கிப் போறானுகளாம்.” சகோதர பாசம் பாத்தும்மா பீவியை சஞ்சலப்படுத்தியது.

“நாம நல்லாப் போய் ஒரு நூறு ரூபா கடனாக் கேட்டா தரமாட்டாங்க; ஆயுதத்தோடு வந்து சும்மா கப்பமாக் கேட்டா வாயப் பொத்திக்கி அள்ளி அள்ளிக் குடுப்பாங்க, நான் இப்ப போய் என்னத்தச் செய்யிற... போன காசி வந்திருமா? அவங்க அவங்கட காச எப்பிடிக் காப்பாத்திற எண்டு அவங்களே அறிஞ்சுக்கோணும். நேர்மையா ஒளச்சி ஒழுங்கா சதக்கா சக்காத் குடுத்தா அந்தப் பணத்துக்கு ஒரு சோதினையும் வராது...” சரிபுத்தம்பிக்கு அறுபது வயதாகிவிட்டாலும் அவரது பேச்சில் அர்த்தம் இருந்தது.

**(தினகரன் வாரமஞ்சரி-1989.12.10)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டாக் கடன்

"குயிலப் புடிச்சி கூண்டில அடச்சி கூவச் சொல்லுற உலகம். மயிலப் புடிச்சி கால ஒடச்சி ஆடச் சொல்லுற உலகம். அது எப்படிப் பாடுமய்யா... இது எப்படி ஆடுமய்யா... ஓ...ஓ...ஓ..."

பென்னம் பெரிய வீட்டின் குசினிக்கு எதிர்ப்புறமாய் இருந்த ஒரு சிறிய அறைக்குள் போடப்பட்டிருந்த நான்கு கட்டில்களில் ஒன்றை ஐநூறு ரூபா மாத வாடகைக்கு உடைமையாக்கியிருந்த பரீதுதான் அதில் தலையணையைச் சரித்து வைத்து, முதுகுப் புறத்தை சாய்த்துப் படுத்தவாறு ஏதோ புத்தகமொன்றை வாசித்துக் கொண்டிருந்தவனாக திடீரென அக்காலப் பகுதியில் பிரசித்தமாயிருந்த பாடலொன்றின் இந்த வரிகளை உரத்த தொனியில் இரண்டு தடவைகள் ஒரே மூச்சில் பாடி முடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாடல் இயற்றப்பட்ட திறமை அல்லது அந்தப் பாடலை ஒலிப்பதிவிற்காக பாடியவனின் திறமை என்பதோ அல்லது பரீதுக்கும் அப்படிப் பாடக் கூடிய திறமையுண்டு என்பதோ தெரியாது. ஆனால் அவன் பாடியது 'ஒரிஜினல்' பாடலை ஒத்திருந்தது.

"என்ன பரீத்... நாளைக்கு சம்பளம் எடுத்துக்கிட்டு ஊருக்குப் போறத நெனச்சி குஷியில பாட்டு வருகுதோ..."

இருநூறு மைல்களுக்கு அப்பாலுள்ள தனது சொந்த வீடு, மனைவி, குழந்தையைப் பிரிந்து அரசாங்க உத்தியோகம் என்ற ஒன்றுக்காக கொழும்புக்கு வந்து தான் வாழும் போடிங் வாழ்க்கையை நினைத்துத்தான் இந்தப் பாடல் அடிகளை அவன் படிக்கிறான் என்ற மஹ்ரூப்பின் அபிப்பிராயத்தை கபூரின் இக்கேள்வி கணப் பொழுதில் மாற்றியமைத்தது.

"அது என்னமோ... நாங்க போன ஒடனே மத்த ஆக்கள் மாதிரி ஒடனே திரும்ப மாட்டம்... நாங்க எல்லாம் சரியாப் பார்த்துத்தான் போவம்..." சொல்லியவாறு கழுக்கெனச் சிரித்தான் பரீத்.

கடந்த முறை ஒரு மாத காலம் கொழும்பிலிருந்து விட்டு கபூர் பலவித எண்ணக் கனவுகளுடன் வீடு சென்றும் சூழ்நிலை சரியாக அமையாததால், லீவுகளை வீணாக்க விரும்பாது மறுநாளே கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி விட்டதை கிண்டல் செய்தான் பரீத்.

ஊர் போவதை நினைத்ததும் கொழும்பு அலுவலக முகவரிக்கு தனக்கு அனுப்பப்பட்டிருந்த தனது நண்பன் சம்சுதீனின் கல்யாணத்துக்கான திருமண அழைப்பு ஞாபகம் வந்தது.

“கலியாண நாளே போய் ஒரு மாதிரியா தலையைக் காட்டினாக் கடமை முடிஞ்சிடும். கலியாணத்தண்டைக்குப் போகாம பொறகு போறதெண்டால் பிரசண்ட் கொண்டுதான் போக வேணும். எடுக்கிற சம்பளம் வாழ்க்கைச் செலவையே சமாளிக்கப் போதாமலிருக்குது. இந்த நிலையில் இப்படி அடிக்கடி கலியாணங்களுக்கு அன்பளிப்புக்கள் எப்படிக் கொடுப்பது?” இப்படி நினைத்த பரீதின் மனசு பலதையும் அலசியது.

திருமணம் நல்லபடியாக நடந்து முடிந்த பிறகு கிடைத்த மாதச் சம்பளத்தைக் கையில் சிறாப்பரிடமிருந்து வாங்கி எண்ணிப் பார்த்த அவனுக்கு மனதுக்குள் ஒரு பூரிப்பு ஏற்பட்டது.

சீதனமாக வாங்கிய பணத்தில் தனது தங்கையின் கணவனுக்குச் சீதனமாகக் கொடுத்த ஒரு சிறிய தொகையும், தனது திருமணத்துக்கு ஏற்பட்ட ஆடம்பரச் செலவுகளுக்கு விரயமான ஒரு பெரிய தொகையும் போக எஞ்சிய சிறிய தொகையை தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, அதிலிருந்து எடுத்து தனது கொழும்பு வாழ்க்கைச் செலவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுசெய்து கொண்டிருந்த அவனுக்கு திருமணத்தின் பின்னர் கிடைத்த இந்தச் சம்பளத்தை மனைவியின் கையில் கொடுக்க வேண்டும்; அதை அவள் மகிழ்ச்சியோடு வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அவனது மனம் மகிழ்ச்சியில் திளைத்தது.

"இவ்வளவுதானா உங்கட சம்பளம்... சீ... வெளியே காட்டாதைங்க... எங்கட வாப்பாவும், நானாமாரும் கண்டால்... எனக்குத்தான் வெட்கம் மூவாயிரத்து ஐநூறு ரூபா... அவங்கட ஒரு நாளைய உழைப்பே இதைவிடக் கூட..." அவனது மனைவியின் இந்த வார்த்தைகளால் அவன் அடைந்த அவமானம், 'கெம்பஸ்'அனுமதி கிடைத்து அவன் பல்கலைக்கழகம் போன சமயம் சிரேஷ்ட மாணவர்கள் அவனை நிர்வாணமாக்கி 'றக்கிங்' எனும் வதைக்குள்ளாக்கிய போது கூட அவன் அடையவில்லை.

"என்ட முதலாவது சம்பளத்தைக் கொண்டு போய் உம்மாட கையில் கொடுத்தபோது உம்மா என்னை உச்சி முகந்து எவ்வளவு சந்தோஷப் பட்டாங்க... சித்தி டீச்சரை நான் விரும்பியிருந்த காலத்தில், நான் அவள்ட வீட்டிலே கதைத்துக் கொண்டிருந்த போது ஒரு சமயம் நான் மூவாயிரம் ரூபா சம்பளம் எடுக்கும் ஒரு 'ஸ்டாப் ஓஃபீசர்' என்று சொல்லி என்னை அறிமுகப்படுத்திப் பெருமைப்பட்டுக் கொண்டாள் அல்லவா சித்தி டீச்சர்... ஹூம்..." பெருமூச்செறியவே அவனால் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பரீத்... உனக்கென்னடா அவ்வளவு யோசினை... மாமா, மச்சினன்மார் எல்லாம் பெரிய 'பிஸ்னஸ்' ஆட்கள். மனுசியையும், உள்ள ஒரே பிள்ளையையும் நல்லாப் பார்த்துக் கொள்ளுவாங்க... உன்ட சம்பளத்தை அப்பிடியே கொழும்பிலேயே செலவழிச்சுப்போட்டே போகலாம்..." என்ற கணீரென்ற கபூரின் வார்த்தைகளால் தனது வாழ்க்கை சம்பந்தப்பட்ட கடந்த கால நினைவுத் தொடர் அறுந்தபோது மீண்டும் நெடுமூச்செறிந்து தனக்குள் பேசிக்கொண்டான்.

'ஹூம்... ஆமா... பரீதுக்கென்ன... வசதியான இடத்திலதான் கல்யாணம் முடிச்சிருக்கான். ஆனா முந்தி அவன் விரும்பிய சித்தி டீச்சரைக் கலியாணம் முடிச்சிருந்தா அவண்ட தொழிலையும் சம்பளத்தையும் கண்ணியப்படுத்தியிருப்பாள். அதற்கேற்ற வாழ்க்கையும், சிக்கனமான செலவும் அமைந்திருக்கும். உம்மா, வாப்பாவின் வற்புறுத்தலுக்கு இணங்கி, காதலைத் துறந்து, பெரிய பணக்கார இடத்தில் போய் அகப்பட்டுக் கொண்டுஇந்த பரீத் படும் பாடு உங்களுக்கெல்லாம் எங்கே தெரியப்போகுது... இரண்டு கிழமைக்கொரு தரமாவது ஊருக்குப் போகவேணும்... போகும் போது குறைந்தது இருபது அப்பிள் பழங்கள், பிள்ளைக்கு சொக்லேட், கேக் எல்லாம் வாங்கிப் போக வேணும்... பரீதின் மாமனாரும் மச்சினன்மாரும் கொழும்புக்கு வந்து போகும்போது வாங்கிப் போகிறமாதிரி... இவை பரீதின் மனைவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஸ்டாண்டிங் ஓடர்ஸ்'... பரீதின் மூவாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளத்தில் இவற்றை எப்பிடி எத்தனை காலத்துக்கு நிறைவேற்றுவது..."

இப்படியெல்லாம் தன்னைப் பற்றியே தனக்குள் பேசிக் கொண்ட பரீத் தனது நண்பர்களை முகங்கொள்வதற்காக வாடிக்கையான அவனது புன்னகையை முகத்தில் வரவழைத்துக் கொண்டான்.

★

மாலை நேரம் மணமகன் வீட்டின் வீட்டு வராந்தாவிலே விரிக்கப்பட்டிருந்த கற்பன் பாய்களின் மீது மணமகன் சம்சுதீனைச் சுற்றிலும் பள்ளிவாயல் முக்கிய பிரமுகர்களும், ஊர்ப் பிரமுகர்கள் சிலரும், மணப் பெண்ணின் நெருங்கிய உறவினர்களும் திருமணப் பதிவாளர் சகிதம் அமர்ந்திருந்தனர்.

வீடு அமைந்திருந்த காணியினுள் வீட்டின் முன்புறமாகவும், வீட்டுக்கு வெளியே முன்பக்கமாக வீதியோரமாகவும் போடப்பட்டிருந்த கதிரைகளில் திருமணத்துக்கு அழைக்கப்பட்டிருந்த நண்பர்களும் உறவினர்களும் அமர்ந்திருந்தனர்.

திருமணப் பதிவு உள்ளே நடைபெற்றுக் கொண்டிருக்க, வெளியே அமர்திருந்தவர்கள் கலகலப்பாக பலதையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையாகப் போடப்பட்டிருந்த கதிரைகளில் மூலையில் இருந்த கதிரையொன்றில் அமர்ந்திருந்த ஒரு இளைஞனின் மீது பரீதின் பார்வையும் திரும்புகின்றது.

சிரித்த முகம், சிறுபிள்ளைத்தனம், ஆவலோடு எதையோ எதிர்பார்த்திருக்கும் அவசரம் அவனில் தெரிந்தது.

"என்ன சலாம்... இது எத்தினையாவது கலியாண ஊடு...?" இந்த இளைஞனுக்கு எதிர்க் கதிரையில் இடம் பிடித்திருந்த முஸாதிக் ஆசிரியர் அவனைப் பார்த்துக் கேட்டார்.

"சுன்னத்துக் கலியாண ஊடொண்டுக்குப் போனன்... அங்கு தொதலும் வாழைப்பழமும் கூல் றிங்ஸ்கும்... அடுத்தது இஞ்சதான் வாறன்... அப்பிடியே மத்தக் கலியாண மாப்பிளர ஊட்டயும் போய்... ரெண்டு பொண்ட ஊடுகளுக்கும் போனாச் செரி..." சலாம் அவனது சூறாவளிப்பயணத்தை விபரித்துக் கொண்டிருந்தான்.

"அப்ப... இண்டக்கி சலாம்டபாடு பம்பல்தான்..."

அவனது முகத்தில் தவழும் புன்னகையையும், கண்களின் ஓரமாக கன்னங்களில் விழும் சுருக்கங்களையும் பரீத் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான். சலாம் என்ற பெயரில் எத்தனையோ பேர் அந்த ஊரிலே இருப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெள்ளைச் சலாம்' என்று அழைத்தால்தான் அவனைப் புரியும்.

"வெளிநாட்டுல ஒரு ஆள் இருக்கிறாராம். பிரபல திருமண விருந்துகளிலெல்லாம் 'இன்விடேஷன்' இல்லாமலேயே போய் கலந்து கொள்வாராம். அவரை யாருமே அழைப்பில்லாமல் வந்தவர் என்று கண்டுகொள்ள மாட்டார்களாம். அவர்ட இந்த திறமைக்கு அவருக்கு பாராட்டே கிடைக்கப் போகுதாம்... அண்டைய பேப்பர் ஒண்டில இந்த செய்தி வந்துச்சு. ஆனா அது வெளிநாட்டில. இங்க நம்மட ஊருல வெள்ளைச் சலாமும் அதத்தான் செய்யுறான்... ஆனா அவனை யாரு பாராட்டப்போகிறா... வெள்ளைச் சலாம்ட விஷயம் சின்ன இடத்துச் சமாச்சாரம்... வெளிநாட்டு விஷயம் பெரிய இடத்துச் சமாச்சாரம்... எங்க போனாலும் பெரிய இடத்து விவகாரங்களுக்குத்தான் இடமும் புகழும்..."

அங்கிருந்த ஒருவர் கூறிய இத் தகவலையும், கருத்தையும் ஆமோதிக்குமாப்போல அருகிலிருந்த சிலர் தலையசைத்து ஆமோதித்தனர்.

அமர்திருந்தவர்களுக்கு ஒவ்வொரு பொலித்தீன் பை விநியோகிக்கப்பட்டது. அதனுள் கேக் ஒரு துண்டு, கட்லட்ஸ் ஒன்று, சொக்லட் கிறீம் பிஸ்கட் ஒன்று, வாழைப்பழம் ஒன்று. அதனை ருசித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டு முடிப்பதற்கிடையில் தம்ளர்களில் நிரப்பப்பட்ட குளிர்பானம் பகிர்ந்து கொண்டு வந்தனர்.

பரீத் கேக் சாப்பிட்டு முடிவதற்குள் சலாம் தனக்குக் கிடைத்த அத்தனை 'அயிட்டங்களையும்' சாப்பிட்டு விட்டு 'கூல் ட்ரிங்ஸையும்' மடக்மடக்கென இரண்டு முடரில் குடித்துவிட்டு வெளியேறக் காத்திருந்தான். மணமகனை நடையாக பெண் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்கிடையில் அவன் மற்றத் திருமண வீட்டின் மணமகள் வீட்டிற்குப் போய் அங்கு சிற்றுண்டியில் பங்கு கொண்டு விட்டு மணமகள் வீடுகளுக்குச் சென்றுவிட வேண்டும். 'எலக்ஷன்' காலத்தில் ஆளும் கட்சிப் பிரமுகர்கள் ஒரே நாளில் பல பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வதைப் போல 'வெள்ளைச் சலாமும்' இயங்காவிட்டால் அவனது வயிறும் மனதும் திருப்திப்படாது.

"எல்லாரும் ட்ரிங்ஸ் குடிச்சதா...?" 'கோட்' 'ட்றவுசர்' அணிந்த மணமகன் சம்சுதீன் சபையில் இருந்தோரை வினாவிக்கொண்டு வந்தார். பரீத் அண்ணாந்து பார்த்து மணமகனுக்கு தனது பிரசன்னத்தைக் காட்டிக் கொண்டான்.

மணமகனை பெண் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் போது பெண் வீட்டால் அழைப்பு இல்லாத காரணத்துக்காகச் சிலரும், இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்துச் சிற்றுண்டிக்கு வயிற்றில் இடமில்லாத காரணத்தால் சிலரும் பிரிந்து சென்று விட்டனர்.

★

பரீத் கொழும்பிலிருந்து இரண்டு கிழமைக் கொருதடவை ஊர் வந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கிவிட்டு கொழும்புக்குப் போய்விடுவான். அவன் பொறுப்பான பதவியில் இருப்பதால் கண்டபடி லீவு எடுக்க அவனுக்கு விருப்பமில்லை.

சம்சுதீனின் திருமணம் முடிந்து வீடு வந்து மனைவியுடனும் குழந்தையுடனும் வீட்டின் பின்பக்கமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது பத்து வயது மதிக்கத்தக்க பெண் பிள்ளையொன்று அவர்களின் எதிரே வந்து நின்றது.

"என்ன பிள்ளை?... நீங்க யாரு...?" பரீத் விசாரித்தான். நீண்ட காலமாகவே கொழும்பில் கடமைசெய்யும் அவனுக்கு இப்போது வளர்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகளை அடையாளங் காண்பது சிரமம்தான்.

"இது நம்மட லியாக்கத்திட மகள்... இதுட தம்பிக்குத்தான் போன மாசம் சுன்னத்து நடந்தது..." மனைவி விளங்கப்படுத்தினாள்.

கடந்த மாதம் நடந்த அவனது நண்பன் லியாக்கத்தின் ஏழு வயது மகனின் விருத்த சேதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் 'கத்னா' செய்யும் வைபவத்துக்கு அவனுக்கும் அழைப்பிதழ் வந்திருந்தது. சுத்னா வைபவத்தன்று ஊரில் நின்றபடியால் பரீதும் அவ் வைபவத்தில் கலந்து கொண்டான்.

"உம்மா சென்ன... எங்கட தம்பிட சுன்னத்துக் கலியாணத்துக்கு நீங்க வட்டாக் கொண்டரல்லயாம்... ஒங்கட கலியாணத்துக்கு எங்கட வாப்பா நூறு ரூவாக் கொண்டந்து வெச்சிருக்காங்களாம்... அந்த வட்டாக் கடன் இரிக்காம் எண்டு ஞாபகப்படுத்தச் சொன்னா..." மூச்சு இரைக்க இரைக்க அந்தப் பிஞ்சுச் சிறுமி தன் பெற்றோர் சொன்னதை ஒப்புவித்தாள்.

பரீத் திருமணம் செய்வதற்கு முன்பு வாழ்க்கைச் செலவுச் சுமை குறைவாயிருந்த காலங்களில் எத்தனையோ திருமண வீடுகளுக்குச் சென்று அன்பளிப்புக்கள் செய்துள்ளான். ஆனால் அவற்றில் ஏராளமானவை அவனுக்குத் திரும்பக் கிடைக்கவில்லை. அப்படித் திரும்பக் கிடைக்க வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கவுமில்லை; நினைக்கவுமில்லை. அதனால் அவனும் வசதியும் வாய்ப்பும் சரியாக அமைகிறபோது அன்பளிப்புக்கள் கொடுத்தான். வசதியும் வாய்ப்பும் அமையாத வேளை அதை ஒரு கடமையாகப் பொருட்படுத்தாது தவிர்த்தான்.

'உங்கள் திருமண. மற்றும் சடங்குகளுக்கு நீங்கள் ஏற்கனவே மற்றவர்களுக்கு அன்பளிப்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த அன்பளிப்புக்கள் திரும்பக் கிடைக்க வேண்டும் என்றும், புதிய அன்பளிப்புக்கள் வரவேண்டும் என்றும் எதிர்பார்த்தால், அழைப்பிதழில் குறிப்பிட்ட சடங்கன்றைக்கு குடும்ப சகிதம் தவறாது வருகை தருமாறு குறிப்பிட்டு இனி அழைக்காதீர்கள். அழைக்காமலேயே வந்து உங்கள் சிற்றுண்டிகளை அருந்திவிட்டுப் போக 'வெள்ளைச் சலாம்' போன்ற எத்தனையோ பேர் இருப்பார்கள். அந்த நேரத்தை நாங்கள் வேறு பிரயோசனமுள்ள வழிகளில் கழிப்போம். பிறகு ஒரு சமயம் நாங்கள் அன்பளிப்புக்களோடு வருகிறோம்' என்று ஒரு 'நோட்டீஸ்' அச்சடித்தோ, 'றோணியோ' பண்ணியோ பொது இடங்களில் ஒட்ட வேண்டும் போல் பரீதுக்குத் தோன்றியது.

பரீத் தனது மனைவியிடம் சொல்லி தான் கொழும்பு செல்ல வைத்திருந்த பணத்தில் நூற்றிஐம்பது ரூபாவை எடுத்து இது நீங்கள் சொல்லுமாப்போல வட்டாக்கடன் இல்லை, வட்டிக் கடன் என்று சொன்னால்தான் பொருத்தமாக இருக்கும். நீங்கள் இரண்டரை வருடங்களுக்கு முன்பு நடந்த எனது திருமணத்தை முன்னிட்டு அப்போது வழங்கிய நூறு ரூபா அன்பளிப்புக்குப் பதிலாக இத்துடன் நூற்றி ஐம்பது ரூபா அனுப்புகிறேன். நீங்கள் வங்கியில் வைப்புச் செய்தாலும் இருபது வீத வட்டி கிடைக்காது. நான் இருபது வீத வட்டியும் சேர்த்து, உங்கள் மனைவி சொல்லி அனுப்பியிருந்ததை ஒரு 'வித்றோவல்' படிவமாக ஏற்று, இத்துடன் உங்கள் பணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளளிப்புச் செய்கின்றேன் என்று ஒரு கடிதமும் எழுதி, ஒரு 'என்வலப்'பினுள் பணத்தையும் கடிதத்தையும் வைத்து ஒட்டி லியாக்கத்தின் மகளின் கையிலேயே கொடுத்தனுப்பினான். சில வருடங்களுக்கு முன்பு தனது நண்பன் ஒருத்தன் அவனது திருமண அழைப்பிதழில் எந்தவிதமான அன்பளிப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படாது என்று ஒரு குறிப்பும் அச்சடிப்பித்திருந்தது பரீதுக்கு ஞாபகம் வந்தது.

அந்தச் சிறுமி நூற்றி ஐமபது ரூபாவும் கடிதமும் அடங்கிய 'என்வலப்பை'பவுத்திரமாக கையில் எடுத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

*(தினகரன் வாரமஞ்சரி-1995.03.26)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத பதிவுகள்

அந்த 'டேப் ரிக்கார்டர்' இஸ்மத்துடன் படிப்பிக்கும் ஒரு ஆசிரியருக்குச் சொந்தமானது. அந்த ஆசிரியரின் மனைவி குவைத்துக்குப் பணிப்பெண்ணாகச் சென்று கொண்டு வந்த பொருட்களில் ஒன்றுதான் அது.

இஸ்மத்தின் மனைவியும் சவூதிக்கு 'ஹவுஸ் மெயிட்' ஆகச் சென்று, நான்கு மாதங்கள்தான் கடந்திருக்கும்.

அந்த நான்கு மாதங்களும் நான்கு கடிதங்கள் அவளது சம்பளத்தோடு, ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வந்தன. இஸ்மத் மாதத்துக்கு இரண்டு கடிதங்கள் வீதம் எட்டு கடிதங்கள் அனுப்பியிருந்தான்.

அந்த எட்டுக் கடிதங்களையும் அங்கு அவர்கள் வாசித்து விளங்கிக் கொள்ளப்பட்டபாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துத்தான், இப்போ அவன் எழுதவேண்டிய விஷயங்களை நாடாவில் ஒலிப்பதிவு செய்து கொண்டிருக்கின்றான்.

"ஜமீனா... நீங்க போனத்துக்கு ஏஜன்சிக்குக் குடுக்கவேண்டிய பதினஞ்சில பத்தாயிரத்தையும் குடுத்திட்டன். இன்னம் அஞ்சாயிரத்தையும் குடுத்து முடிச்சாத்தான் நம்மட வளவை திரும்ப நம்மட பெயருக்கு எழுதி எடுக்கலாம். எப்படியும் ஒங்கட ஆறு மாசத்து ஒழுப்பும் நீங்க போன செலவைக் குடுக்கத்தான் செரியா இருக்கும்..."

"மத்த ஒண்ணர வருஷத்து ஒழுப்பையுந்தான் எடுத்து, நம்மட சிக்கலுகளத் தீர்க்கோணும். நான் இஞ்ச என்ர சம்பளத்தோட எப்பிடியும் சாப்பாட்டுச் செலவுகள ஒப்பேத்திக்குவன்"

"வாப்பா... இன்னா பர்ஸானாத் தாத்தா நான் கக்கூசுக்குப் போனதக் கழுவி உடுறாவில்ல..." காலைக்கடனை மாலையில் முடித்துக்கொண்டு முறைப்பாட்டோடு நின்ற அவரது நான்கு வயது மகள், அவளது கவுணை இரு கைகளாலும் உயர்த்திப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

"புள்ள பர்ஸானா... தங்கச்சி கக்கூசுக்குப் போய் வந்து, எவ்வளவு நேரமா நிக்காள்... அதக் கழுவி உடு பாப்பம்..."

தனது பதினைந்து வயது பூர்த்தியான மூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்கு உத்தரவிட்ட வண்ணம், ஒலிப்பதிவைத் தொடர்ந்து கொண்டிருந்தார் இஸ்மத்.

"நீங்க எப்பிடியும் என்ன கஷ்ட மெண்டாலும் பல்லக் கடிச்சுக்கு இருந்து ஒண்ணரை வருஷத்தையும் புத்தியாக் கடத்திப் போடோணும்..."

"இத ஏன் செல்லிறன் எண்டால்... நம்மட றோட்டில இருந்து குவைத்துக்குப் போன குறைஷியாவத் திருப்பியனுப்பிப் போட்டானுகள். என்னடா... எண்டா... அங்க இருந்த பொஸ்சும் பொஞ்சாதியும் அவங்கட புள்ளையளப் பாத்துக்குற வேலைய மட்டும் தானாம் இவளுக்கு குடுத்திருந்த. இவளோட உள்ள சிங்களப் புள்ளதானாம் மத்த மறிச்ச வேலைகள் செய்யிற..."

இஸ்மத்தின் 'கடைக்குட்டி'க்கு இரண்டு வயதாகிறது. அவன் தனது மூக்கு ஓட்டைகள் இரண்டினாலும் கீழ்நோக்கி வடிந்து கொண்டிருந்த சளியை, தனது நுனி நாக்கினால் மேலுதட்டின் மேற்பாகத்தில் துளாவி ருசித்துக் கொண்டிருந்ததைக் கண்ட இஸ்மத் 'டேப்' பண்ணிக் கொண்டிருக்கும் போதே குரல் கொடுத்தான்.

"ச்சேய்... பர்ஸானா... இஞ்சப் பாரு! தம்பி மூக்குச் சளிய நக்குறான். அவன்ர மூக்க எடுத்துடு பாப்பம்..."

"ஆ... நான் என்னத்துல உட்ட?... ஓ...! குறைஷியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வந்த கதை எலவா...? குறைஷியா பார்த்துக்குற ரெண்டு புள்ளயளும் ஒரே கஷ்டப்படுத்துறதாம். அதால இவள் அந்தப் புள்ளயளுகள தமிழால ஒரே ஏசித் திட்டுறதுதானாம். இதைப் பார்த்துக்கு இருக்கிற பொஸ்சும் பொஞ்சாதியும் நீ என்ன சொல்லுறாய் எண்டு கேட்டிருக்கிறாங்க. அதுக்கு குறைஷியா, நான் அந்தப் புள்ளயள தாலாட்டுறன் எண்டு சொல்லியிருக்கிறாள்".

"ஆனா... குறைசியாட மொக பாவனை இவள் புள்ளயள ஏசித்திட்டுறாள் எண்ட எண்ணத்த பொஸ்சுக்கும், பொஸ்சுர பொஞ்சாதிக்கும் குடுத்திருக்கி. இவள் ஒரு நாள் பிள்ளயள் கரச்சல் படுத்தக்குள்ள வழக்கம் போல் பிள்ளயள ஏசித் திட்டியிருக்கிறாள். அத பொஸ்சுட பொஞ்சாதி டேப் பண்ணியிருக்கிறாள்."

"பொறகு இன்னொரு ஊட்டில இருந்த தமிழ் தெரிஞ்ச புள்ளயொண்டுக்கிட்ட அதக் கொண்டுபோய் போட்டுக் காட்டி, இதில தமிழில சொல்லுறது என்ன எண்டு கேட்டிருக்காங்க."

"அந்த புள்ள, கரைச்சல் படுத்துற சின்னப் புள்ளயள நாசமாய்ப் போவாய் எண்டும், செத்துப் போகுதுகளும் இல்லை... எனக்கு இந்த புள்ளையளால பெரிய கரைச்சல்... கழுத்த நெரிச்சி ஒரு நாளைக்கு சாக வைப்பன் எண்டெல்லாந்தான் தமிழில் சொல்லியிருக்கி எண்டு சொன்னதும், அந்த பொஸ்சும் பொஞ்சாதியும் மிச்சம் ஆத்திரப்பட்டு, அவளத் திருப்பியனுப்பிப் போட்டாங்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்மத்தின் சின்ன மகன் ஒருவன் 'டேப்' செய்துகொண்டிருந்த அவனிடம் மீண்டும் ஒரு முறைப்பாட்டோடு நின்றான்.

"வாப்பா... சின்னத் தாத்தா அடிச்சிப் போட்டாள்..." கூறியவாறு சின்ன மகன் விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தான்.

"டியேய்...! ஏன்டி தம்பிக்கு அடிச்சாய்...? கொஞ்சம் பொறு... டேப் பண்ணி முடிஞ்சதும் உன்ன ஒரு கை பாக்கிறன்..."

மகளை எச்சரித்துவிட்டு, தொடர்ந்து மனைவியோடு பேசிக் கொண்டிருந்தான்.

"ஆ... இனி நீங்க கவனமாக காலத்தக் கடத்துங்க... அறபியளும் ஒரத்த ஆக்கள். இப்ப அவனுகள ஏமாத்த ஏலாது. பாவம் குறைஷியா திரும்பி வந்துவிட்டாள். அவள்ஏஜன்சிக்குக் கட்டின எட்டாயிரம் ரூபாக் காசும் இல்லை. அவள இனி திரும்பியும் அனுப்புற எண்டா பத்தாயிரம் வேறயாக் கட்டோணுமாம்."

'டேப் ரிகார்டா'ரில் ஒளிர்ந்து கொண்டிருந்த சிவப்பு விளக்கு திடீரென அணைந்தது. சுற்றிக் கொண்டிருந்த ஒலிப்பதிவு நாடாவும் நின்றது.

"இந்த நாசமாய்ப் போன கறண்ட்டுக்கு இதுதான் தொழில். ராவயில போறதும் வாறதும். புள்ள குட்டிகளுக்கு ஒரு பாடத்தை ஒழுங்காப் படிக்க ஏலா. பகலிலயும் ஒரு நாளையிலே முழுசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததில்லையே. போனா... இனி பின்னேரம் வருமோ... நாளைக்குத்தான் வருமோ... கறண்ட ஒழுங்காத் தரமாட்டான்... லைட் பில்ல மட்டும் ஒழுங்கா அனுப்புவான்..."

இப்படி அலுத்துக் கொண்டிருக்கும் போது "ஹொண்டா சீ செவண்டி" ஒன்று வந்து 'கேற்'றடியில் நிறுத்தும் அரவம் கேட்டது இஸ்மத்துக்கு. முன் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

"ஹா... வாங்க சேர்... நான் நெனச்சன். நீங்களாத்தான் இரிக்குமெண்டு..." இஸ்மத் வரவேற்றான்.

வந்தவர் இஸ்மத்தின் மனைவியை சவூதி அரேபியாவுக்கு 'ஹவுஸ் மெயிட்'டாக அனுப்பிய ஒரு சப் ஏஜன்சிக்காரர்தான். அது அவரது பகுதி நேரத்தொழில். மற்றப்படி அவரும், இஸ்மத்தைப் போலவே ஒரு பாடசாலை ஆசிரியர்தான். இல்லாவிட்டால், இப்படியெல்லாம் 'ஹொண்டா' மோட்டார் சைக்கிள் எல்லாம் வைத்து ஓட அவனுக்குக் கட்டுப்படியாகாது.

"என்ன... வைஃபுக்கிட்ட இருந்து ஒழுங்காக் கடிதங்கள் வருகுதா...?"

நண்பன் என்ற உரிமையை விட 'சப் ஏஜன்சிக்காரன்' என்ற பெருமையோடு இஸ்மத்தை விசாரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சேர்... போய் நாலு மாச சம்பளத்தோடயும் நாலு கடிதம் இங்கிலீசில வந்திச்சு. அவ போயிரிக்க ஊடு நல்ல எடம் போலத்தான் இரிக்கி. கடைசிக் கடிதத்தில எழுதியிருந்திச்சி அங்க தமிழ் வாசிக்கத் தெரிஞ்சாக்கள் அல்லசெல்லில இல்லயாம். நான் எழுதின கடிதத்த வாசிக்கத்துக்காக எத்தினையோ கிலோ மீட்டருக்கங்கால போய்த்தான் வாசிச்சி விளங்கினாங்களாம். அதுதான், எழுதவேண்டியத்துகள டேப் பண்ணி அனுப்புறன். அப்ப வாசிச்சிக் காட்ட ஆள் தேடி அலையத் தேவையில்லத்தானே... அங்க டேப்பில போட்டுக் கேக்கலாம். அதுக்கும் எடையில இந்த கறண்ட் சனியன் நிண்டுட்டுதே."

தனது மனைவிக்கு எழுத, வாசிக்கத் தெரியாது என்ற குறையையும் மறைக்காமல் 'சப்-ஏஜன்சிக்காரனி'டம் நெருங்கிவிட்ட இஸ்மத், மின்சாரம் தடைப்பட்டதைக் குறைப்பட்டுக் கொண்டான்.

"நான் ஒங்கட வைஃப் எண்டத்தாலதான், மெயின் ஏஜன்சியில கட்டாயம் நல்ல இடமாத்தான் பார்த்துப் போடச் சொன்னன்..." இது சப் ஏஜன்சிக்காரனின் அறுவை.

"எலக்ஷன் டைமில கறண்ட் எல்லாம் இனி ஒழுங்கா கெடைக்கும் எண்டு பெரிசா புழுகினாங்க... இப்ப எலக்ஷனும் முடிஞ்சிற்று. கறண்ட் முந்தி இருந்தத்தப் பார்க்கவும் மோசமாகப் போச்சி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்மத், தான் ஆதரித்த கட்சி வெற்றி பெறாததால், ஆளும் ஆட்சியாளர்களைக் குறை கூறினான்.

“அந்த ஆக்கள் என்ன செய்யிற நம்மட ஆக்கள் கொழுகுறதுக்கு...? ராவயில பாருங்க... எல்லா றோட்டிலயும் கொழுவித்தான் கறண்ட் எடுக்காங்க... எலக்ஷன் டைமில அவங்க கதைச்சி ஒரு கௌம கரண்ட் நல்லாத்தானே இரிந்திச்சி. இந்த ஆக்கள் கொழுகி கறண்ட் எடுக்காமலுக்கு இருந்தா, நமக்கு கறண்ட ஒழுங்காக் கொடைக்குந்தான்”

சட்டபூர்வமற்ற மின்சாரம் பெறுதலைக் கண்டித்தான் அவனது நண்பன்.

“அப்ப நான் வரட்டுமா...”?

“என்ன அவசரம்... இரியுங்களன். தேத்தண்ணி யொண்டு குடிச்சிட்டுப் போவம்...” இஸ்மத் நண்பனை வழிமறித்தான்.

“இல்லை... அங்க ஒரெடத்த ஒரு புள்ளை வெளியே போய் நாலு மாசமாப் போச்சி. நாலாயிரந்தான் தந்திரிக்காங்க. அந்தப் புள்ள அனுப்புறத்த அவள்ற புருஷன் தேத்தண்ணிக் கடையிலே தேயில குடிச்சும், சிகரெட் ஊதியும் தள்ளுறான். அந்த புள்ள பாவம். கொஞ்சம் நெருக்கினாத்தான் என்ர காசத் தந்து முடிப்பான்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறிக்கொண்டு புறப்பட்ட 'ஹொண்டா சீ செவெண்டி'யை வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டு நின்றான் இஸ்மத்.

★

"இண்டக்கி உம்மாக்கிட்டயிருந்து கட்டாயம் கடிதம் வரும். காகம் விடியக்குள்ளேயே ஓரமாக் கத்துது..." அடித்தொண்டையால் கரைந்து கொண்டிருந்த காகத்தைப் பார்த்து காலைத் தேனீரை அருந்தியவனாக தனது மூத்த மகள் பர்ஸானாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான் இஸ்மத்.

ஒரு அரை மணித்தியாலம் கழிந்திருக்கும். அவனது வீட்டுக்கு முன்னால் ஒரு 'வேன்' வந்து நின்றது. இஸ்மத் வீட்டுக் கதவைத் திறந்து தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்த்தான்.

அந்த 'வேன்'னின் 'ஹூட்'டுக்கு மேலே இருந்த 'லக்கேஜ் கரியரில்' ஏழு அல்லது எட்டு பெரிய அழகிய 'சூட்கேஸ்'கள் இருந்தன. நான்கு பெண் பிள்ளைகளோடு வேனுக்குள் இருந்த இஸ்மத்தின் மனைவி, ஒரு சின்ன 'சூட்கேசு'டன் இறங்குவதற்கு தயாராகிக் கொண்டிருந்தாள்.

அதிர்ச்சியோடு மனைவியை நோக்கி 'வேன்' அருகில் சென்ற இஸ்மத்தின் மூக்கை 'க்ளோன்'களின் நறுமணங்கள் பலவந்தமாக நுகரச் செய்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தை விட்டு அந்த 'வேன்' நகரும்போது அந்த 'ஹவுஸ் மெயிட்'கள் நால்வரும் இஸ்மத்தின் மனைவிக்குக் கைகளை அசைத்து விடைபெற்றுக் கொண்டனர். சவூதிக் 'க்ளோன்'களின் நறுமணங்களும் அவர்களோடு பயணித்தன.

இஸ்மத் கேள்விக்குறியாய் மனைவி ஜமீனாவின் முகத்தைப் பார்த்தான்.

"நீங்க பேசி டேப் பண்ணி அனுப்பினத்தப் போட்டுக் கேட்டன். என்ர புள்ளயள் கக்கூசுக்குப் போய்க் கழுவி உடச் சொல்லி வந்து நிக்கிறதும், மூக்கு வடிய வடிய நிக்கிறதும், ஆளுக்காள் சண்டை பிடிச்சிக்கிட்டு உங்களுக்கிட்ட வந்து முறைப்படுறதும், மக்கள் அழுகிற குரலும்தான் என்ர மனசில பட்டிச்சி. அதிலயிருந்து எனக்கு ஒரே ஊட்டு யோசினைதான். நித்திரையும் இல்லை. எப்பிடியும் ஊட்டுக்கு வந்து சேரணும் எண்ட எண்ணந்தான். ஸ்ரீ லங்காவுக்குப் போகோணும் எண்டு பொஸ்சோடயும் பொஸ்சுட பொஞ்சாதியோடயும் சென்னன்.

உன்ன அனுப்பமாட்டம்... உன்ன எடுப்பிக்கிறதுக்கு கொள்ளயாச் செலவழிச்சிருக்கம் எண்டுட்டாங்க. நல்ல காலத்துக்கு அவங்கட பக்கத்து ஊட்லதான் நம்மட ஊர் நியாஸ் எஞ்ஜியர் இருந்தார். அவர்ர செல்வாக்காலயும் தெண்டிப்பாலயுந்தான் நான் ஒடனே வந்த..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மகனே... நீ ஒரு ஆசிரியர். உனக்கு மனைவியா வாறவளும் குறைஞ்சது ஒரு கடிதத்த எழுத, வாசிக்கத் தெரிஞ்சிரிக்க வேணும். இத யோசிச்சு உன்னுடைய வாழ்க்கையைத் தீர்மானிச்சுக் கொள்' அவன் தந்தை ஒருபோது சொன்ன புத்திமதி அவனது நினைவுக்கு வந்தது.

"என்ர தகப்பன்ர சொல்லைக் கேளாமல், படியாத பொண்ணைக் கலியாணம் முடிச்சது என்ர பெரிய தவறு. அதவிடப் பெரிய தவறு எழுத, வாசிக்கத் தெரியாத அவளுக்கு நான் பேசி அனுப்பின டேப்பில இஞ்ச என்ர புள்ளயள்ற கூத்துக்களையும், கும்மாளங்களையும் அதில என்ன அறியாமலேயே பதிஞ்சி அனுப்பினது..."

இஸ்மத்தின் மூளை 'சப் ஏஜன்சி'க்காரனுக்குக் கொடுக்கவேண்டிய மிகுதி ஐயாயிரம் ரூபாவையும் எப்படிக் கொடுப்பது எனச் சிந்திக்கத் தொடங்கியது.

***(கல்ஹின்னை மாணவர் சங்க பொன் விழாவை முன்னிட்டு வெளியான குறிஞ்சி மலரில் பிரசுரமானது-1997)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாப்பா வருவார்

'கோல்பேஸ்' கடற்கரையிலே குளிர்ந்த காற்று ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. அந்தக் காற்று தனது உடம்பில் மெதுவாக உராய்ந்து கொண்டு போனபோது பாத்திமா தனது சேலைத்தலைப்பால் தன்னை இறுகப் போர்த்திக் கொண்டாள். பக்கத்திலிருந்த அவளது கணவன் பரீத் குளிருணர்ச்சியால் பாத்திமாவை நெருங்கித் தனது வலக் கையால் அவளை அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பில் இருவருக்கும்தான் எத்துணை இன்பம்!

தனது மகன் பாத்திமாவின் மடியில் வந்து விழுந்த போதுதான் பாத்திமா சுய நினைவுக்கு வந்தாள். அவளது கணவன் பிரிந்துபோன மூன்று வருஷத்திலிருந்து இப்படியான இன்ப நினைவுகளில் தான் தனது வாழ்க்கையைக் கடத்திக் கொண்டு வருகிறாள். அவள் பரீதுக்கு வாழ்க்கைப்பட்டு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் தங்களது வாழ்க்கையை இவ்வாறு இன்பமான இடங்களில் கழித்துக்கொண்டு வந்தபோதுதான் அவளது வாழ்வில் ஒரு பேரிடியாக அவளது கணவன் அவளைப் பிரிய நேர்ந்துவிட்டது.

பாத்திமா தனது பதினாங்கு வயதில் பராயமடைந்து தனது அழகை அந்நிய ஆடவனுக்குக் காட்ட விரும்பாது வீட்டிலே அடைபட்டுக் கிடந்த இரண்டு வருடங்களுக்குள்ளும் அவளைத் திருமணம் செய்யக்கேட்டு வந்த சம்பந்தங்கள் எத்தனை? பணக்கார வீட்டுச் சம்பந்தம், படித்த வீட்டுச் சம்பந்தம். இப்படிப் பலப்பல. பாத்திமாவின் வாப்பாவும் ஒரு பணக்காரர்தான். தனது பணத்தையெல்லாம் யாருக்கும் பிரயோசனப்படச் செய்யாமல் வீட்டிலே பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்திருந்தார். இத்தனைக்கும் இருக்கக்கூட நல்ல ஒரு கல்வீட்டைக் கட்டிக்கொள்ள அவர் விரும்பவில்லை.

பாத்திமாவுக்கு எத்தனை இடங்களிலிருந்து சம்பந்தங்கள் வந்தபோதும் அவற்றை யெல்லாம்அவளின் சொந்த மாமியின் மகன் பரீதின் அன்பு வென்று கொண்டிருந்தது. சிறுபிள்ளைப் பருவத்திலிருந்தே பாத்திமாவும் பரீதும், சோறு கறி சமைத்து, உம்மா-வாப்பா விளையாட்டு எல்லாம் விளையாடியது அவர்களது மனதைவிட்டு இன்றும் மறையவில்லை. அதன் பிரதிபலன்தான் பாத்திமா-பரீத் திருமணம். பரீத் கொழும்பிலே 'பொலீஸ் கான்ஸ்டபிளாக' வேலைபார்த்ததால் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் ஓராண்டு கொழும்பிலேயே இன்பமாகக் கழிந்துகொண்டிருந்தது.

இப்போதுதான் அவர்களது வாழ்க்கையை அந்தப் பேரிடி பிரிக்கவிருந்தது. பாத்திமாவின் வாப்பாவிடமிருந்த பணத்தால் ஒரு பங்களாவே கட்டலாம் என்ற நிலையிருந்தாலும் அவரது உலோபித்தனத்தை அறிந்த பரீத் வங்கியிலே கடனெடுத்து நல்லதொரு வீட்டைக் கட்டுவதற்கு முடிவுசெய்திருந்தான். பரீதின் பெயரில் கடனெடுப்பதென்றால் வீடு கட்டும் நிலம் அவனது பெயரிலோ அல்லது அவனின் மனைவி பெயரிலோ இருந்தால்தான் கடன் பெறலாம் என்று 'வங்கி மனேஜர்' சொன்னபோது அவன் இந்தக் காணியைத் தங்கள் இருவரில் ஒருவரின் பெயருக்கு எழுதித்தரும்படி கேட்டான்.

எவ்வளவோ பணத்தையும் வைத்துக்கொண்டு தனது கருமித்தனத்தால் காணியைத் தனது பெயருக்கோ அல்லது தனது மனைவி பெயருக்கோ எழுதித்தர மறுத்தபோதுதான் பரீத் பொங்கி எழுந்தான். "உனது மகளையும், உனது சொத்துக்களையும் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி, பரீத் அவனின் உம்மா வீட்டுக்குப் போய்விட்டான். இருபத்தொரு வயதிலேயே புருஷனை உயிரோடு இழந்துவிட்ட பாத்திமா தனக்கு ஒரு மகனையும் தந்து அவனது மனத்திலும் ஒரு பாரத்தைத் தந்துவிட்டுப் போன தனது கணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியும் வருவாரென்ற நம்பிக்கையுடனேயே இருந்தாள்.

"ஏனும்மா... வாப்பா எப்ப உம்மா வருவார்" மகனின் வார்த்தைகள் மீண்டும் பாத்திமாவைக் கற்பனையிலிருந்து விடுவித்தன.

"வாப்பா வருவார்டா கண்ணு"

"நீங்க பொய் சொல்லுறீங்க உம்மா, எல்லாப் பெருநாளுக்கும் இப்புடித்தானே சொல்றீங்க, வாப்பா ஒரு பெருநாளுக்கும் வரல்லையே உம்மா" மகனின் பிஞ்சு உள்ளத்தில் எழுந்த கேள்வி பாத்திமாவின் உள்ளத்தைப் பாறாங்கல் கொண்டு தாக்கிப் பதில் சொல்ல முடியாமல் திணறடித்தது.

பாத்திமாவுக்கு அவளது வாப்பாவைப் பார்க்கும் போது ஒரு பக்கம் மனவருத்தமும், மறுபக்கம் கோபமும் மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டிருந்தன. பாவம் அவருக்கு வயது போய், முதுமை அவரை ஆட்கொண்டுவிட்டது. குறைந்தது இன்னும் ஒரு வருடத்துக்கு மேல் வாழமாட்டார் என்பதை அவரது நோய் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

'ஏன் இந்த வயது போன காலத்தில்கூட பணத்தாசை இவர்களைவிட்டுப் போகக் கூடாதா?' தங்களுக்குள்ள சொத்துக்களை மக்களின் பெயருக்கு இப்போதே எழுதி வைத்துவிட்டால்தான் என்ன? அவர்கள் இறந்தபிறகுதான் கோடு, கச்சேரி என்றெல்லாம் ஏறித்திரிந்து வழக்குகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுத்தான் தங்கள் பெற்றோர்களின் சொத்தை மக்கள் அனுபவிக்க வேண்டுமா?' பாத்திமாவின் மனதிலே இப்படியான கேள்விகள் மாறி மாறி எழுந்து கொண்டிருந்தன.

'பரீத் தனது உம்மாவின் நிலத்தை வங்கியிலே ஈடுவைத்துக் கடன் எடுத்து இப்போது அழகான ஒரு வீட்டைக் கட்டி முடித்திருக்கிறான். பாத்திமாவின் மாமியும் மாமாவும்தான் அதிலே தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் பரீத் தான் வேலை பார்க்கும் கொழும்புச் சுற்றாடலில் உள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டானாம்.' ஊரிலேயுள்ள யாரிடம் கேட்டாலும் பரீத் இரண்டாம் கலியாணம் செய்து கொண்டதைச் சொல்லுவார்கள். இதை நினைக்கும்போதுதான் பாத்திமா ஆத்திரப்படுவாள்.

'வாப்பா வருவாரா' என்று விடாப்பிடியாகக் கேட்டுக்கொண்டிருக்கும் அவளின் மகனுக்கு 'வருவார்' என்று அழுத்தமாக ஒரு பொய்யைச் சொல்லிவிட்டோமே... அவன் வளரும் உள்ளம் எதிர்காலத்தில் அதனால் பாதிக்கப்படுமே என்றெல்லாம் பாத்திமா சதா யோசித்துக் கொள்ளுவாள்.

★

பாத்திமாவின் மகன் ஆறு மாதக் குழந்தையாக இருந்தபோது அவனது பக்கத்து வீட்டுத் தாஹிரா அவனை எடுத்துச் சென்று அவளே நாள் முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்துவிட்டுப் பின்னேரத்தில் கொண்டு வந்து கொடுத்துவிடுவாள். தாஹிராவுக்கு இறைவன் பிள்ளைச் செல்வத்தைக் கொடுக்காததுதான் அவளுக்கு 'மலடி' என்ற பட்டத்தை அந்த ஊரவர்களே சூட்டுவதற்குக் காரணமாயிருந்தது.

ஒரு நாள் பாத்திமாவின் மகனைத் தாஹிரா எடுத்துச் சென்றுவிட்டாள், வழமையாகத் தனது குழந்தையைக் கொண்டு வந்து கொடுக்கும் நேரம் பிந்திக்கொண்டேயிருந்தது. பாத்திமா எழுந்து நேரே தாஹிராவின் வீட்டுக்குச் சொன்றாள். அங்கே அவள் கண்ட காட்சி, அவளின் மகன் முற்றத்திலே கிடந்து புரண்டு மண்ணை அள்ளி வாயில் திணிப்பதற்கும், பாத்திமா அங்கே போவதற்கும் சரியாக இருந்தது. தாஹிரா அவளின் கணவனுடன் வீட்டினுள்ளே எதையோ சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கும் சப்தத்தைக் கேட்டபோது பாத்திமாவுக்கு இன்னும் கோபம் கோபமாக வந்தது. அந்த ஆத்திரத்தில் தாஹிராவை மலடி என்று ஏசி விட்டாள். ஆனால் இன்று அந்தத் தாஹிரா மலடியல்ல. அழகான ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகிவிட்டாள். ஆனால் பாத்திமாதான் புருஷனை உயிருடன் இழந்தவள்.... இந்தப் பழிப்பேச்சை யெல்லாம் அவள் கேட்க வேண்டும் என்று ஆக்கிவிட்டுப் போய் வேறொருத்தியுடன் வாழ்கிறான் என்ற பேச்சைக் கேட்கும்போதெல்லாம் பாத்திமா மூக்கால் நீர்சிந்த அழுவாள்.

பெருநாளுக்கென்று தைத்திருந்த சட்டையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிசானையும் தனது மகனுக்கு அணிவித்து அழகு பார்த்துக் கொண்டிருந்தாள் பாத்திமா. என்ன அழகு! கம்பீரமான ஆணின் தோற்றம்! வீரப்புன்னகை! எல்லாமே அவன் தந்தையை ஒட்டி உரித்த மாதிரியே இருந்தான்.

"பெருநாளன்றைக்கு இந்த உடுப்பையெல்லாம் போடுவம். இப்ப கழற்றுங்க மகன், பெட்டியிலே பத்திரமா வைப்பம்" என்று சொல்லி, பாத்திமா தனது மகனின் புதிய ஆடைகளைக் கழற்றிக்கொண்டிருந்தாள்.

"அப்ப பெருநாளுக்கு வாப்பா வருவாங்களா உம்மா"

"கேற்றடியிலே 'போஸ்ட்மென்' மணியடிக்கிறான். வந்திருக்கிற கடிதத்தை வாங்கிவாடா கண்ணு" என்று சொல்லி மகனின் எண்ணத்தைத் திசை திருப்பியவளாக கேற்றடிக்கு மகனை அனுப்பினாள் பாத்திமா.

"உம்மா பெரிய பார்சல் வந்திருக்காம். உங்களைத்தான் வந்து எடுக்கட்டாம்" என்று ஓடிவந்தான் பாத்திமாவின் மகன்.

அதற்கிடையில் வெளியே போய் வந்துகொண்டிருந்த பாத்திமாவின் தாய் பார்சலை எடுத்துவந்து பாத்திமாவிடம் கொடுத்த போது பரீதிடமிருந்து அந்தப் பார்சல் வந்தது என்பதை அறிந்ததும் தனது தாய் மீது சீறிவிழுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நேர சமாதான வார்த்தைகளின் பின் பார்சலைப் பிரித்தபோது அங்கே தனது மகனுக்கு அழகான ஆடைகள்; அவளுக்கு ஏற்ற சாரி, ஜாக்கெட் எல்லாமே இருந்தன. மகன் அவனுக்குரிய சட்டையை எடுத்துத் துள்ளிக் குதித்த போது கூடவே ஒரு கடிதமும் அதனுள் இருந்து துள்ளிக் குதித்தது.

அன்பின் பாத்திமா,

நான் உன்னைப் பிரிந்திருந்த இந்த மூன்று வருட காலமும் எவ்வளவு மன நிம்மதியின்றி எனது வாழ்க்கையைக் கழித்தேன் தெரியுமா? அதுமட்டு மல்லாமல் ஊரிலே பரவியிருந்த நான் இன் னொருத்தியைக் கலியாணம் கட்டிக்கொண்டேன் என்ற வதந்தியைத் தாங்க முடியாமல்தான் கொழும்பி லிருந்து ஊருக்கே வராது நின்றேன். நீயும் இப்படியான கஷ்டங்களை அனுபவித்திருப்பாய் என்பது எனக்குத் தெரியும். இப்போது எனது தாயின் இடத்திலே வீடெல்லாம் கட்டி முடிக்கப் பட்டாயிற்று. பெருநாளுக்கு ஊர் வருவேன். உனது பெற்றோரின் வீட்டை விட்டு என்னுடன் வந்து வாழ்க்கை நடத்தத் தயாராயிருக்கவும். எனது மகனைக்காண எனது கண்கள் துடிக்கின்றன. இவ்வளவு காலமும் உங்கள் பக்கத்து வீட்டு தாஹிரா எனக்கு அனுப்பியிருந்த அவனது புகைப் படத்தைப் பார்த்தே எனது மனம் சாந்தியடைந்தது.

இப்படிக்கு

அன்புள்ள பரீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகன் வாப்பா இந்தப் பெருநாளுக்குக் கட்டாயம் வருவாருடா" பாத்திமா மகனை இறுக அணைத்துக் குதூகலித்தாள்.

ஊரிலே எல்லோரும் பெருநாள் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். பாத்திமா பிறந்தகத்தைவிட்டுக் கணவன் வீடு புகுந்திருந்தாள்.

"என்ன பாத்திமா? மூணு வருஷமா உன்னைத் தவிக்க விட்டேன் என்று கடந்தகால வாழ்க்கையை பற்றி யோசிக்கிறாயா?" பரீத் கேட்டான்.

"அதெல்லாம் இல்லை. பிடிவாதக் குணம் கொண்ட சில மாமனார், மாமிமார், மருமகன், மருமகள்மாரினால் எத்தனையோபேரின் வாழ்க்கைதான் சின்னாபின்னப்பட்டிருக்கும் என்றுதான் யோசிக்கிறேன்" என்றவாறு பாத்திமா தனது கணவன் தேநீர் குடித்து முடித்த கோப்பையை வாங்கிக் கொண்டாள்.

**(தினகரன் வாரமஞ்சரி 1976.09.26)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன

புனித ஹஜ்ஜை நிறைவேற்றிவிட்டு தனது தாய் நாடு நோக்கிப் புறப்பட்ட அபூசாலி பறந்து கொண்டிருந்த விமானத்தின் 'கோணர் சீற்' ஒன்றிலே ஒய்யாரமாக அமர்ந்திருந்தார். அவருக்கு அருகிலே அவரது வயது முதிர்ந்த தாயாரும் தனது தள்ளாத வயதில் இஸ்லாத்தின் அந்த ஐந்தாவது கடமையை நிறைவேற்றிவிட்டு அன்று பிறந்த பாலகனாக பாவங்கள் அழிக்கப்பட்ட நிலையில், கையிலே 'தஸபீஹ்' மணிகளை உருட்டியவாறு இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தாள்.

தனிப்பட்ட முறையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட அந்த விமானத்தில் இருந்தவர்கள் அனைவருமே அக்கடமையை நிறைவேற்றி விட்டுத் திரும்பும் ஹாஜிகள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூசாலியின் இருக்கைக்கு இரண்டு ஆசனங்களுக்கு முன்னால் இடப்பக்கமாக இருந்த இருக்கையொன்றில் அமர்ந்திருந்தார் அப்துல். அவர் எத்தனையோ தடவைகள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றியிருந்த போதிலும் அக்கடமையை நிறைவேற்றிய ஏனையவர்களை ஹாஜியார் என்று அழைப்பதைப் போல அப்துல் அவர்களை யாரும் அழைப்பதில்லை. மாறாக 'மவுலவி' என்றோ அல்லது 'அப்துல் மவுலவி' என்றோதான் அழைத்தே அனைவருக்கும் பழக்கப்பட்டுவிட்டது.

மௌலவிப் பட்டம் பெற்ற அவர் அரசாங்கப் பாடசாலையொன்றில் அரபு மொழி, இஸ்லாம் சமயம் ஆகியவற்றைப் போதிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றுவதால் அவரை 'மவுலவி' என்று அழைப்பதையே வழக்கப்படுத்திக் கொண்டார்கள்.

அப்துல் மௌலவியைப் பார்த்தபோது அவர் மீது அபூசாலிக்கு ஆத்திரம் ஏற்பட்டது. இரண்டொரு நாட்களுக்கு முன்பு வரை அவர் மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தாரோ அதற்கு மாறாக இப்போது அபூசாலிக்கு அவர்மீது ஆத்திரந்தான் ஏற்படுகிறது. ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளும் நோக்கில் தனது கீழ் உதட்டினை மேல் முன்னம் பற்களினால் அழுத்திக்கொண்டார். கருமேகங்களைத் தொட்டுக் கொண்டு விரைந்த அந்த விமானத்தைப் போல அபூசாலியின் சிந்தனையும் கடந்த சம்பவங்களைத் தொட்டுப் பார்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★

"அஸ்ஸலாமு அலைக்கும் மகன்! உம்மா ஹஜ்ஜுக்குப் போறதெண்டு கேள்விப்பட்டன். நானும் ஆள் கூட்டிக்கிட்டுப் போறன்தானே மகன். என்னோடயே போவமே..." அப்துல் மௌலவி அபூசாலிக்கு சிற்றப்பா முறை என்பதால் 'மகன்' என விளித்துப் பேச்சைத் தொடங்கினார்.

"ஓம் சாச்சா... உம்மாவோட நானும் போகலாம் எண்டுதான் நினைச்சிருக்கிறன்..."

"நல்லந்தானே மகன். ரெண்டு பேரும் வாங்க. ஆளுக்கு எண்பதினாயிரம் ரூபா வரும். ட்ரவல் ஏஜென்சிக்கு நீங்க போய் அலையத் தேவையில்லை. ரெண்டு பேர்ட காசையும் எனக்கிட்டத் தாங்க வாற கிழமை கொழும்புக்குப் போறன். காசைக் கட்டிப்போடுறன்."

"அது நல்லந்தானே மகன்... சாச்சாக்கிட்டையே காசைக் குடுப்பம். நமக்கு சாச்சாவோட போறதுதான் நல்லது" உரையாடலுக்கு காது கொடுத்துக் கொண்டிருந்த தாயாரின் ஆமோதிப்பு அபூசாலியின் விரைவான தீர்மானத்தை உறுதிப்படுத்திற்று.

"வேற யாரும் இருந்தாலும் சொல்லுங்க மகன். ட்ரவல் ஏஜென்சிக்கு பத்துப் பேரச் சேர்த்துக் குடுத்தா எனக்கு ஒரு டிக்கட் சும்மா கெடைக்கும்" மௌலவி விநயமுடன் வேண்டிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஜ்ஜுக்கு ஆள் சேர்க்கும் காலம் நெருங்கி வந்தால் அப்துல் மௌலவி காண்பவர் எல்லோருக்கும் சலாம் சொல்லத் தொடங்கிவிடுவார். “இந்த முறை ஹஜ்ஜுக்குப் போறதுக்கு யாருமிருந்தாச் சொல்லுங்க சீதேவி. நம்மளோட போக ஏலும். சும்மா தெரியாத ஆக்களோட போறத்த நம்மட பக்கத்து ஆக்களோட போறது பலதுக்கும் நல்லம் அல்லவா...” இப்படிப் பிரச்சாரம் செய்து பிரயாண முகவர்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொடுத்து பத்துப்பேருக்கு ஒரு ‘டிக்கெட்’ என்ற வீதத்தில் கட்டணத்தையும் ‘கொமிஷன்’ ஆகப் பெற்றுக் கொள்வதில் அவர் சமர்த்தர்.

தடுப்பூசி மருந்து ஏற்றிக் கொள்வதற்காக அவர்களது குழுவினரை தனிப்பட்ட டாக்டர் ஒருவரிடம் அழைத்துச் சென்றிருந்தார் அப்துல் மௌலவி.

“எல்லாரும் வெளியே நில்லுங்க. நான் டொக்டருக்கிட்ட கதைச்சிட்டு வாறன்” இப்படிச் சொல்லிவிட்டு டாக்டரின் அறைக்குள் நுழைந்த அவர் மீண்டும் வந்து சொன்னார் “ஒவ்வொராளுக்கும் நூறு ரூபாத் தாங்க டொக்டர் காசை வாங்கச் சொன்னார்”.

பணம் கைமாறியது. அவர் அழைத்து வந்திருந்த நூறுபேரிடமும் பத்தாயிரம் ரூபாவைச் சேர்த்துக் கொண்டு டாக்டரின் அறைக்குள் சென்ற மௌலவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்தில் வெளியே வந்து ஒவ்வொருவராக உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தார்.

தனது முறை வந்ததும் டாக்டரின் அறைக்குள் நுழைந்த அபூசாலிக்கு ஆச்சரியமொன்று காத்திருந்தது. அங்கிருந்த டாக்டர் அபூசாலியின் தம்பியான டாக்டருக்கு நண்பர். குசலம் விசாரித்து உரையாடிய டாக்டர் திடீரென அபூசாலியிடம் கேட்டார் "ஊசி போடுறதுக்கு மௌலவிக்கிட்ட எவ்வளவு காசு குடுத்தீங்க?"

"ஆளுக்கு நூறு ரூபா வீதம் குடுத்திருக்கிறோம்..."

"ச்சுஸ்... காலம் கெட்டுப் போச்சு..." சூள் கொட்டிக்கொண்டு டாக்டர் பெருமூச்சொன்றை விட்டார்.

"ஏன் டாக்டர்... விஷயத்தைச் சொல்லுங்களன்..." அபூசாலி.

"இல்லே... ஒரு ஆளுக்கு தடுப்பூசிக்கு நாங்க அறவிடுறது ஐம்பது ரூபாத்தான். உங்களையெல்லாம் கூட்டி வந்திருக்கிற இந்த மௌலவி என்னிடம் முதலிலேயே வந்து சொன்னார். தலைக்கு நூறு ரூபா வாங்கி எடுத்து... மேலதிகமாக எடுக்கிற ஐம்பது ரூபாவையும் ரெண்டு பேரும் சமமாப் பங்கிட்டு எடுத்துக்கொள்வோம் என்று. நான் மறுத்துட்டேன். என்னுடைய கட்டணமான ஐம்பது ரூபாவை மட்டுமே அறவிட்டுத் தருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கிட்டச் சொன்னேன். இவர்களே இப்படிச் சுரண்டி வாழ்ந்தால் உலகம் எங்கே உருப்படும்...?"

டாக்டரின் கவலைக்கு மத்தியில், மௌலவி தனது நெருங்கிய உறவினர்தான் என்று சொல்வதற்கு அபூசாலி வெட்கப்பட்டு, விஷயத்தை இரகசியமாக வைத்துக் கொண்டார்.

'துல்ஹஜ்' மாதம் பன்னிரண்டாம் நாள் அரபா மைதானத்தில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை நிறைவேற்றிவிட்ட ஹாஜிகளை தமது நான்கு சுவர்களுக்குள் அடக்கிய அறைகளைக் கொண்ட கட்டிடங்கள் நிறைந்த மக்கா நகர் பொலிவு பெற்றிருந்தது.

அபூசாலியின் முகத்தில் ஒரு வெற்றிக் களை படர்ந்திருந்தது. இஸ்லாத்தின் அந்த ஐந்தாவது கடமையை நிறைவேற்றிவிட்ட மனத்திருப்தி.

"தம்பி எந்த ஊரு...? நம்மட பக்கந்தானா...?" அபூசாலியின் பக்கத்து அறையில் தங்கியிருந்த வயது முதிர்ந்த ஒருவர்தான் விசாரித்தார்.

"நான் வாழைச்சேனை பெரியவர். நானும் உம்மாவும் ஹஜ்ஜுக்கு வந்தோம்..." அவரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்தான் என்பதைப் புரிந்துகொண்ட அபூசாலி விளக்கம் அளித்தார்.

"அப்பிடியெண்டா தம்பிக்கு செலவுகள் எப்பிடி...? கொறைச்சலா இருக்குமே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செலவு எல்லாம் ஒண்டுதான் பெரியவர். ட்ரவல் ஏஜன்சிக்கு ஆளுக்கு எண்பதாயிரம் கட்டினம்... மத்தது நம்மட கைச்செலவு எல்லாருக்கும் போலத்தான்..."

"எண்பதாயிரமா...? அதெப்படித் தம்பி... நாங்க எல்லாரும் றவல் ஏஜன்சிக்குப் போய் எழுவத்திரெண்டாயிரம் ரூபா மேனிக்குத்தானே கட்டினம். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் அதுதானே தம்பி..." அகல விரிந்து கரு விழிகள் மேலே உயர்ந்தபடி காட்சியளித்த அந்த வயோதிபரைப் பார்த்தபோது அபூசாலிக்கு ஒரு உண்மை புரியத் தொடங்கியது.

அவர்களது உரையாடல் தொடர்ந்தது.

"குர்பானி குடுத்த ஆட்டுக்கு நீங்க காசு கூடுதலாத்தான் குடுத்திருக்கீங்க... நீங்க மட்டுமில்ல... மற்ற ஆக்களுந்தான். நாங்க நேரடியா ஆடு வாங்கினோம். அதனால் செலவு குறைய... நம்மளக் கூட்டி வந்த அந்த ஆளுக்கிட்ட ஆடு... மாடுகளுக்கு காசு குடுத்தவங்களெல்லாம் கூடுதலாத்தான் குடுத்திருக்கிறாங்க... இதில அவருக்கும் ஒரு கொமிஷன் இருக்குது போல..."

"அப்படியானால் மௌலவிச் சாச்சா எனக்கும் உம்மாவுக்கும் எண்பதாயிரம் ரூபா வீதம் என்னிடம் வாங்கி பதினாறாயிரம் ரூபாவை ஏப்பம் விட்டிருக்கிறாரே... சே... என்ன மனுஷன்..." இப்படித் தனக்குள் சொல்லிக் கொண்ட அபூசாலி, புல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூண்டுகளில்லாது கபில நிறமாகக் காட்சியளித்த மலைகளை வெறித்துப் பார்த்தார்.

'சே... இந்த மலைகளிலேயே ஒரு பசுமை தெரியுது ஆனா... நம்மட மவுலவிச் சாச்சாவின் மனதிலே அந்தப் பசுமை மருந்துக்கும் இல்லைப்போல தெரிகிறதே' அந்தப் புனித மண்ணிலேயே வேதனைப்பட்டுக் கொண்டார். தான் தங்கும் அறைக்குள் சென்ற அபூசாலியால் தாயாரிடம் கவலையை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

"அதை ஏன் கேட்கிறீங்க மகன்... ஒரு பத்து டொலர் இருந்தாத் தாங்க... பிறகுதாறன் எண்டு சொல்லிச் சொல்லியே சாச்சா எனக்கிட்ட இது வரைக்கும் நூறு டொலர் மட்டில் வாங்கிட்டார். இன்னும் சில பொம்புளயளுக்கிட்டயும் வாங்கியிருக்கார்... இனி என்ன செய்யுற... சரி... சரி பேசாம உடுங்கோ. நாம வந்த கடமையை முடிச்சிக்கிட்டுப் போவம்... "தாயாரின் ஆறுதல் அபூசாலியின் பொறுமைக்கு உரமிட்டது.

★

விமானம் தரையிறங்க ஆயத்தமானதும் அபூசாலி கடந்துபோன விடயங்களிலிருந்து விடுபட்டு மௌலவியைப் பார்த்தார். தான் மக்காவிலிருந்து கொண்டுவரும் சாமான்களை மௌலவி சரி பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுங்கப் பரிசோதனைகளுக்காக, ஹஜ் பயணத்தை முடித்துக் கொண்டு வந்திருந்தவர்கள் அணிவகுத்து வரிசையாக நின்றனர். அப்பயணிகளுக்காக விசேட 'கவுண்டர்'கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் கடமையாற்றும் 'கஸ்டம்ஸ் ஒஃபீஸர்'கள் சுங்கப் பரிசோதனையில் அவ்வளவு கெடுபிடியாக இருப்பதில்லை என்பது அப்துல் மௌலவிக்கும், வழக்கமாக பல தடவைகள் ஹஜ் கடமைக்காகச் செல்பவர்களுக்கும் நன்கு தெரிந்த விடயம்.

விரைவாக நடைபெற்றுக் கொண்டிருந்த சுங்கப் பரிசோதனையில் சடுதியாக தாமதம் ஏற்பட்டமை ஹஜ் பயணிகளிடையே பரபரப்பை ஏற்படுத்திற்று.

'கியூ'வில் அபூசாலிக்கு முன்னதாக அவரின் தாயார் நின்றிருந்தார். அவரின் தயாருக்கு முன்பாக அப்துல் மௌலவி நின்று கொண்டிருந்தார். அனைவரின் கைகளிலும் மூட்டை முடிச்சுக்கள்.

"நாசமாப்போவான் அகப்பட்டுக்கிட்டான்... ஹறபாப் போவானுகள் பிடிச்சுப் போட்டானுகள்..." இப்படிச் சொல்லி தனது வலது உள்ளங் கையால் நெற்றியில் அடித்துக் கொண்டார் அப்துல் மௌலவி.

இம்முறை இரண்டாவது தடவையாக புனித பயணத்தை மேற்கொண்டு திரும்பிய பயணி ஒருவர் நான்கு தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொண்டு வந்ததாகவும், அதை அவதானித்த சுங்க உயரதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதனைகளை சற்று கடுமையாக மேற்கொள்ளும்படி உத்தர விட்டதாகவும், அதன் பிரதிபலனாக அந்தப் பயணி மக்காவிலிருந்து வாங்கி வந்த தங்க 'பிஸ்கட்' அதாவது தங்கக் கட்டிகள் அகப்பட்டதாகவும் விதிக்கப்பட்ட சுங்க வரியும் அபராதமும் கட்ட முடியாத அளவுக்கு அதிகமானது என்பதால் தடுமாறுவதாகவும் கதை அடிபடத் தொடங்கியது.

'எயார் கண்டிஷன்' செய்யப்பட்டிருந்த அந்த இடத்தில் அப்துல் மௌலவிக்கு வியர்க்கத் தொடங்கியதை அவதானித்தார் அபூசாலி. அப்துல் மௌலவியின் உடைமைகளைப் பரிசோதிக்கும் முறை வந்தது. அவரது பிரயாணப் பொதிக்குள் கையைவிட்டு கடுதாசியினால் சுற்றப்பட்ட ஒரு சிறிய பார்சலை எடுத்து எவரும் கவனிக்காதவாறு மௌலவி கீழே போடுவதை அபூசாலி மாத்திரம் அவதானித்தார்.

அப்துல் மௌலவி சுங்கப் பரிசோதனையை சுலபமாக முடித்துக் கொண்டு முன்னே சென்றாலும் அடிக்கடி திரும்பிப் பார்த்தார். அபூசாலியின் தாயாரின் பயணப் பொதிகளை பரிசோதனை செய்வதற்கு முன்னர் சுங்க உத்தியோகத்தர் தரையிலே அனாதரவாகக் கிடந்த 'பார்சல்' ஒன்றை எடுத்து பிரித்துப் பார்த்தார். 'கோல்ட் பிஸ்கட்'கள் அதாவது தங்கக் கட்டிகள் பத்து யாரோ ஒரு பயணியால் கெடுபிடியான சுங்கப் பரிசோதனைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்து கைவிடப்பட்டுக் கிடந்ததை அவர்கள் ஊர்ஜிதம் செய்தார்கள்.

சற்று நேரத்துக்கு முன்னர் அப்துல் மௌலவி வேண்டுமென்றே கைவிட்ட 'பார்சல்' தான் அது என்பதை அடையாளங் கண்டுகொண்ட அபூசாலி 'எல்லாரையும் எந்நேரமும் ஏமாற்ற முடியாது...' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு இலகுவான சுங்கப் பரிசோதனையை முடித்துக்கொண்டு தனது தாயாருடன் வெளி யேறினார்.

"இந்தப் பாழாய்ப் போன அரசாங்கம் வந்தா இப்படித்தான்" என்று மனம் நொந்து கொண்டிருந்த அப்துல் மௌலவியின் துயரம் நியாயமானதுதானா என்ற சந்தேகம் அபூசாலிக்கு எழவேயில்லை.

**(நவமணி வார இதழ்-1997.03.09)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**M.I.M. Muzzammil**, a Muslim who writes in Tamil. Like many of the writers I have been telling you about, Muzzammil, wants his stories to contribute to social change. He stresses ethical values. He questions the tradition of early marriage for women. He is down on false pride and jealousy and pseudo-love. The stories are written in a simple style. They are all set in a provincial mileu.

**• K.S.Sivakumaran •**
( "ASPECT OF CULTURE IN SHRI LANKA" published in 1992).

**எம்.ஐ.எம். முஸம்மில்**

கடந்த இருபத்தைந்து வருடங்களாக உருவகக் கதைகளும் சிறுகதைகளும் எழுதி வருகின்றார். இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள சிறுகதைகளில் அநேகமானவை தினகரன் வாரமஞ்சரியில் இவரின் சொந்தப் பெயரிலும், 'மருதவூர் இப்னு' எனும் புனைபெயரிலும் பிரசுரமானவை; சமூகச் சீர்கேடுகளை எடுத்தியம்புபவை; வாசகர்களால் வரவேற்கப்பட்டவை. நாற்பத்தியிரண்டு வயது நிரம்பிய இவர் சமுதாயம் பற்றிய அக்கறையுள்ள ஓர் எழுத்தாளர்.

**• எஸ். அருளானந்தம் •**
பிரதம ஆசிரியர்,
தினகரன்
1997, அக்டோபர்

அச்சிட்டோர்
ஆசியா கிராபிக்ஸ், சென்னை - 600 081.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org